
434

# சுதேசமித்திரன்

27—7—47 விலை 4 அணா.



The Swadesamitran ILLUSTRATED WEE



ஒரு புராதன வைத்தியம்

இவ்விதமாகவே நல்ல செய்தி
கள் பரவுகின்றன. உட்வார்ட்ஸ்
கிரைப் வாட்டர் குழந்தைகளை
:: நன்கு பாதுகாக்கிறது ::




**WOODWARD'S**
**GRIPE WATER**
*keeps baby well*

I-WW111-111 W. WOODWARD LTD. LONDON, ENGLAND



ஸ்தாபிதம் 1924.

## பிரபல ஜோதிஷர்



மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. டி பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆரூடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. "விவாகப் பொருத்தங்கள்" புத்தகம் விலை ரூ. 1. "வாழ்க்கையில் வெற்றி" என்னும் புத்தகம் விலை அணா 6. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
"சந்திரிகை" எல்டாம்ஸ் ரோட், தேனாம்பேட்டை போஸ்டு, மதராஸ்.

வாழ்க்கையில் இன்பம் எப்போதும் இருக்க

## ஆனந்த குசுமாகர லேகியம் (Registered)

சாப்பிடுங்கள்


தாது விருத்தி, இரத்த சுத்தி, ஜீரணசக்தி முதலியவைகளை
ஏககாலத்தில் கொடுக்கக்கூடியது
தேகத்தின் உஷ்ண நோய்களுக்கு அற்புத பலனை
அளிக்கக்கூடிய ஓர் உயர்ந்த ஔஷதம்

விலை ரூ. 2—8—0 :: விவரமான காட்லாக் இனாம்

**மலையாள மெடிகல் ஹால் (REGD)**
189, வக்கீல் புது தெரு, — Post Box 27 — மதுரை.

## கணேஷ் காப்பிக்கொட்டை

சுவை, நயமணமுள்ளவை




**கணேஷ் & கம்பெனி**
பாண்டி பஜார், தி. நகர்.
பிராஞ்சு: சைனாபஜார், மதராஸ்.
பைகிராப்ட்ஸ்ரோட், திருவல்லிக்கேணி.

## முக்கிய அறிவிப்பு

மந்தார விடு இலை, தையல் இலை
சகாயமான விலைக்கு மொத்தமாகவும்,
சில்லரையாகவும் எங்களிடம் கிடைக்கும்.

**S. மாணிக்கம் செட்டி & கோ.,**
6—7, ஆதியப்ப நாயக்கன் தெரு, மதராஸ் 1.

ஏஜண்டு இல்லாத இடங்களுக்கு
ஏஜண்டுகள் தேவை.

## பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd.)

குழந்தைகளின் ஈரல், குலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

**Dr பின்னா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,**
11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:—
7, சாரங்கபாணி கோவில்
கீழவீதி.

திருச்சி கிளை:—
15, புகழிய பிள்ளை தெரு,
தெப்பக்குளம் போஸ்டு.




KALAPI INDUSTRIES, BOMBAY 2.

இண்டோ பாம்
நோவுகளுக்கு
சிறந்த அவுஷதம்

ஜுரத்திற்கு
கார்னிக்
எகுமிக்சர்
உபயோகியுங்கள்

KARNIK BROS' BOMBAY 4.



முஸ்லிம்களுக்கு
அவசியமான
ஸஹீஹ் புகாரீ
(நாயகத்தின் ஹதீதுகள்)

"தாருல் இஸ்லாம்" ஆசிரியர், அல்ஹாஜ் பா. தாவூத்ஷா பீ. ஏ. அவர்கள் தமிழில் தயாரித்திருக்கும் புகாரீ ஷரீப், 690 ஹதீதுகளின் அசல் மொழி பெயர்ப்புடனும், விரிவான வியாக்யானங்களுடனும், நேர்த்தியான கண்ணைக் கவரும் வனப்புகளுடனும்கூடியது. சுமார் 600 பக்கம். விலை ரூ. 7-8-0. வி. பி. வேறு.

இஸ்லாம்

தொழுகைப் படங்கள் பல நிறைந்துள்ள இந்நூல் 8-ம் பதிப்பு வெளியாய் விட்டது. கண்ணைக்கவரும்பான்மையாய்ப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. விலை ரூ. 2—8—0. வி. பி. வேறு.

ஷாஜஹான் புக் டெப்போ,
30, சாந்தோம், சென்னை—4.



அனைவருக்கும்
திருப்தி
யளிக்கக்கூடிய
எல்லாவிதமான

நவீன
பட்டு & நூல்
ஜவுளி
ரகங்களுக்கு

மாருதி கிளாத்மார்ட்
c/o. ராஜவீதி ★ கோயமுத்தூர்



REWARD RS. 100

GUPTA VASHIKARAN YANTRA.
(GOVT. REGD)

இது சித்த வசீகரண யந்திரம். இதை அணிவதால், எந்தக் கஷ்டமான காரியத்திலும் சரி, நீங்கள் வெற்றி பெறுவீர். நீங்கள் விரும்பும் பெண், எத்தனை கடின ஹிருதயம் படைத்தவளாயினும் உம்மிடம் வந்து சேர்வாள். இது உமக்கு அதிர்ஷ்டத்தைத்தரும். வழக்கு, செல்வம், லாட்டரி, பரீக்ஷை முதலியவற்றில் அந்த யந்திரத்தின் மூலம் வெற்றி கிடைக்கும்.

| | | |
|---|---|---|
| செம்பு விலை | ரூ. | 2. |
| வெள்ளி ,, | ரூ. | 3. |
| தங்கம் ,, | ரூ. | 10. |

★

SREE
KASHIVISHWANATH ASHRAM,
No. 14/A, P. O. Katrisarai. (Gaya)



வைத்திய ரத்ன
யு. ராமநாத சாஸ்திரியாரின்
ஆனந்த பற்பொடி (Reg)




சரீரத்துக்கு வாசப்படியான வாய், பற்கள் இவைகளில் ஒளிந்து கொண்டிருக்கும் பயங்கரமான பற்பல விஷக் கிருமிகளை நாசம் செய்வதுடன், பற்களின் வேர்களைப் பலப்படுத்தி ஒழுங்காயும், அழகாயும் ரக்ஷிப்பதில் இது ஒன்றுதான் சிறந்தது.

இந்தியா கவர்ன்மெண்டு ஏஜண்டு ஜனரல், தென் ஆபிரிக்கா; இந்தியா கவுன்ஸில் மெம்பர்கள், இங்கிலாந்து; இம்பீரியல் கவுன்ஸில் மெம்பர்கள், டில்லி; எக்ஸிகியூடிவ் கவுன்ஸில் மெம்பர்கள், சென்னை; மதராஸ், பர்மா சீப் ஜட்ஜு உள்பட பத்து ஹைகோர்ட்டு ஜட்ஜுகள், சென்னை பிரதம மந்திரி உள்பட இதர மந்திரிகள், மஹாராஜாக்கள் இவர்களால் ஸர்டிபிகேட் செய்யப்பட்டு இருக்கிறது. இத்துடன் நாங்கள் ஜெயம்பெற்ற சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜுமெண்டில் பின்கண்டபடி எழுதப்பட்டிருக்கிறது:— "மார்க்கெட்டில் விற்கப்படும் இந்தியன் பற்பொடிகளுக்குள் ஆனந்த பற்பொடி ஒன்றுதான் அதிகமாய் எங்கும் நன்றாய் பிரஸித்தி பெற்றது என்பதற்குக் கொஞ்சங்கூட சந்தேகமே இல்லை. எங்கும் கிடைக்கும்;



மாதவிடாய்

நின்றுவிட்டால் எக்காரணத்தினால் ஆனாலும் ரிதுபிரபர்தினி கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர்ட் ஒரே நாளில் ஹானியில்லாமல் வெளிப்படுத்தும். ரூ. 3. பர்பதி கர்ப்பத் தடைக்குச் சிறந்தது. தாற்காலிகம் ரூ. 2. நிரந்தரம் ரூ. 4-8-0. வி. பி. அணா 13.

இம்மருந்துகள் கிடைக்குமிடம்:—
அப்பா & கம்பெனி
286, சைனாபஜார், மதராஸ்.

★

விரை வீக்கம்

ஹர்னியா, யானைக்கால், முடக்கு வாதம் முதலியவற்றை எளிதில் குணமாக்குவது பிஷிஹார தைலம். தடிப்பு, வலி, வீக்கம், விரைவில் மாயமாய் மறையும் ரூ. 3. உள் மருந்து ரூ. 2. வி. பி. அணா 13.

KAVIRAJ
R. N CHAKRAVORTY (S.W.)
BHOWANIPORE, CALCUTTA 25.





ஜாதகம்! ஆரூடம்!!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விவரம்:—1 முதல் 3. உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2.
3-க்குமேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5.
ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35. ஜாதகம் கணிக்க ரூ. 2.
குறிப்பு:—வெளிநாட்டிற்கு இரட்டிப்புக் கட்டணம்.

சில - நற்சாட்சிகள் :

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ்:— "தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத் திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது."

ராவ்பகதூர் C. V. கிருஷ்ணஸ்வாமி B. A., ரிடையர்டு Dy. S. P. அண்டு அட்வகேட், உறையூர் கூறுவது:—ஜோதிஷ உலகில் இவரது சாஸ்திர ஞான கியாதி இணையில்லாதது. இவர் கூறும் ஜாதக பலனை கேட்டவர், அவைகள் உண்மையாகவும், பூர்த்தியாகவும், ஆச்சரியமாகவும் இருப்பதை உணர்வதுடன் அவரை உண்மையில் இம்மை மறுமைக்கு வழித்தோழராகவும், ஆப்த நண்பராகவும் இருப்பதை அறிவார்.

Sri B. K. சதுர்வேதி - பார்-அட்-லா, டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ், ஸர்தார்-பிகானீர் ஸ்டேட் :—தங்களுடைய ஜோதிஷ பலன்கள் மிகவும் உண்மையாகவும், அதி ஆச்சரியமாயும் விளங்கின. தாங்கள் பெரிய ஸ்டேட் ஜோதிஷராய்-ராஜ் ஜோதிஷராய் பிரகாசிக்கத் திறமை வாய்ந்தவர்".

Sri E. J. இராஜரத்னம், சிலோன்-சிவில் ஸர்விஸ், கவர்ன்மெண்ட் ஏஜண்டு, களுடாரா, கொழும்பு, சிலோன்:—"தங்களுடைய ஜோதிஷ கணிதஞானத்தையும், பலன் கூறும் முறையையும் கண்டு மிகவும் மெச்சுகிறேன். இவ்வளவு ஆச்சரியமாயும், உண்மையாகவும், எதிர்கால பலன்களை கூறுவீர்கள் என்று நான் எண்ணவே இல்லை.

T.V. ஜெயராம சாஸ்திரிகள், ஆயுர்வேத பண்டிட் & ஜோதிஷ வித்வான்.
வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ, தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)



மாதவிடாய் நின்று விட்டதா? கவலை வேண்டாம்.

சாஸ்திரீக முறை தவறிய அபாயகரமான மருந்துகளை உபயோகிக்காதீர். புகழ்பெற்ற கவர்ன்மெண்டு ரிஜிஸ்டர்ட் ராஜ நியமோனி ஒரே தினத்தில் போக்களிக்கும். தீங்கற்றது. கடுமையானதற்கும் சிறந்த ஔஷதம். விலை ரூ. 3-8-0. ஸ்பெஷல் ராஜ நியமோனி நாள்பட்ட கேஸ்களுக்கு மட்டும் விலை ரூ. 10. உத்தரவாதம்பெற்றது. தபால் செலவு அணா 12. ரோதகி கர்ப்பத்தடைக்கு சிறந்த தீங்கற்ற மருந்து. மாதவிடாய் ஒழுங்காயிருக்கும். நிரந்தரம் ரூ. 5 தாற்காலிகம் ரூ. 2-8-0. தபால் செலவு அணா 12.

Kaviraj M. BHATTACHARYA (S. W.)
Kavya Vyakarantirta, Vishagacharya,
120/1/1, UPPER CIRCULAR ROAD, CALCUTTA 9.



ஸ்ரீ
அம்பாள் சேமியா
உபயோகியுங்கள்
138. கொத்தவால் சாவடி. மதராஸ்.



பீம-வீர்




JAMADHAGNI OUSHADALAYA — MYLAPORE.

சாஸ்வதமான யௌவனத்தையும், வீரிய விருத்தியையும் உண்டாக்கி, புதிய இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், இல்லற இன்பத்தையும் தரும். 40-நாள் மருந்து ரூபாய் 3-12-0. வி. பி. செலவு வேறு.

ஜமதக்னி ஔஷதாலயா,
26, வடக்கு மாடவீதி
மயிலாப்பூர் :: சென்னை.




ஒரிஸ்ஸா, நைஜாம், ஆந்திரா ஜில்லாக்களுக்கும், தமிழ் நாட்டுக்கும் ஏஜண்டுகள் :—

**ஸீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்,**

பர்ஹாம்பூர்--செகந்திராபாத் பெஜவாடா — மதுரை.

# சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.



## காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில், ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி. கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் **காமினியா ஆயில்** உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

**இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.**
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

## ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

*Sole Agent:*—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
285, Jumma Musjid, P. O. Box 2085, Bombay 2.

S. A. H. TRADE MARK

# Rgd. No. 2221.

27 வருஷமாய் தென்னாடு முழுவதும் பிரசித்தி பெற்று வரும்

## சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

**Porp: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம்- S.I.R.**



டாக்டர்

# கே. வி. மாத்தியூ அவர்களுடைய புத்தகங்கள்

—★—

## (1) மலடும் அதன் நிவாரணமும் ரூ. 3.

"ஆணிலும் பெண்ணிலும் மலடு ஏற்படும் காரணங்களை டாக்டர் மாத்யூ இப்புத்தகத்தில் விவரித்து, அவைகளை எவ்வகையில் நீக்கலாம் என்று கூறுகிறார்".

—The Hindu.

## (2) இளமை பெறும் முறை ரூ. 3.

ஆண், பெண்ணைப்பற்றி மிகவும் நுட்பமான விஷயங்களில் இதைச் சாதாரண தெளிவான முறையில் சொல்லப்பட்டிருக்கிறது. விருத்தியாப்பியத்தினால் பீடிக்கப்படும் எல்லோருக்கும் இப்புத்தகம் அனுபவபூர்வமான சமய சஞ்சீவியாயிருக்கிறது.

—Morning Star

★

ஹெல்த் புத்தகசாலை,
7/8, கிருஷ்ணன் கோயில் தெரு
ஜி. டி., மதராஸ்.

முன் பணம் அனுப்பினால் தபால் சார்ஜ் இனாம்.

| | | | |
|---|---|---|---|
| A. B. C. Talks | 1 | 4 | 0 |
| ராமானுஜதர்சனம் | 1 | 0 | 0 |
| தீனதயாளு | 0 | 12 | 0 |
| பாலகங்காதர திலக் | 0 | 8 | 0 |
| ஸ்வராஜ்யம் | 0 | 8 | 0 |
| குரு நானக் | 0 | 5 | 0 |
| சங்கராச்சாரியார் | 0 | 5 | 0 |
| ஸ்ரீராம ஜனனம் | 0 | 4 | 0 |

தபால் செலவு பிரத்தியேகம்.
சுதேசமித்திரன் புத்தகசாலை,
மவுண்ட்ரோட், சென்னை.





ஸன்லைட்டால் சுத்தம் செய்யப்பட்ட ஆடைகள் எப்பொழுதும் முன் இருந்ததைவிட அதிகச் சுத்தமாகவும் வெண்மையாகவும் காண்கின்றன. ஸன்லைட்டின் தாராளமான நுரை ஒவ்வொரு இழைகளிடையேயும் புகுந்து அடித்துத் துவைக்காமலே — ஜாஸ்தி அழுக்குப்படிந்த பாகங்களிலிருந்துகூட — மலினங்களைப் பூராவும் சுலபமாக அகற்றுகிறது. இச் சோப் மகிழ்ச்சிதரும் புதுமையையும் மணத்தையும் துணிகளுக்குக் கொடுக்கிறது. மேலும் உங்கள் கைகளுக்கு நன்மையளிப்பதையும் காண்பீர்கள்.




# ஸன்லைட் சோப்

S. 88-50 TM LEVER BROTHERS (INDIA) LIMITED

சேலத்திலுள்ள உயர்தர சினிமா
கொட்டகையான




# செவ்வாய்பேட்டை, ஸரஸ்வதி டாக்கீஸின்

## முதலாவது ஆண்டு விழா 21-6-47-ல்

சேலம் கலெக்டர் ஸ்ரீ வி. வி. சுப்பிரமணியம் ஐ. ஸி எஸ். அவர்களின் உயரிய தலைமையில் நடைபெற்றது. படத்தில் கலெக்டர், புரொப்ரைட்டர்கள் ஸ்ரீ எஸ். கிருஷ்ணஸ்வாமி, துரைசாமி முதலியவர்களுடன் காணப்படுகிறார்.


## புது வருஷத்திற்கு குறைந்த விலை

(முதல்தர ஜுவல் கைகடியாரங்கள்)



அழகான மாடல்கள், சரியாக மணி காட்டுபவை, திடமான யந்திரம், க்ரோமியம் கேஸ், வட்டமானது ரூ 16 சிறந்தது ரூ. 18. ஸ்திரீகள் சைஸ் ரூ. 35. நீண்ட சதுரம், பிரகாசிக்கும் கேஸுடன் ரூ. 38. ரோல்ட் கோல்ட் நீண்ட சதுரம் 6 ஜுவல்களுடையது ரூ. 50. நீண்ட சதுரமான ஸ்திரீகளுக்கான ரோல்ட் கோல்ட் ரூ. 60. 15 ஜுவல் நீண்ட சதுரமானது ரூ. 65. சிறந்தது ரூ. 70. எல்லாவற்றிற்கும் 5 வருஷ உத்திரவாதம். தபால், பாக்கிங் அணா 14.

வீட்டிலேயே அச்சிடக்கூடிய பாக்கெட் பிரஸ்:-பெயர்கள் விலாஸம், கடிதங்கள், லேபில்கள், நிகழ்ச்சிகள் முதலியவைகளை வீட்டிலேயே வெகு அழகாக அச்சிடலாம்:




நெ. 11 ரூ. 2-0-0 நெ 12 ரூ. 2-8-0 ஸ்பெஷல் ரூ. 3-0-0 உயர்ந்த ரகம் ரூ. 3-8-0 தபால் செலவு அணா 14.

Address:—Great National Stores, Post Box No. 12216 Calcutta (V)



## இளமை, ஜீவசக்திக்கு

ஜீவசக்தி குன்றி தொடர்ச்சியாக நோயுற்ற அனைவருக்கும் அரிய சந்தர்ப்பம். எந்த வியாதியையும் வேறுடன் அழித்துப் பூரண குணமாக்கும் உத்தரவாதத்துடன் சிகிச்சை செய்ய வல்ல



செக்ஸ் நிபுணர் டாக்டர் ஏ. ஜீ. வால் அவர்களிடம் உடனே ஆலோசனை பெறுங்கள். சிகிச்சை பெற்று புதிய ஆரோக்கிய வாழ்க்கை அடையுங்கள்.

விலாசம்:— பம்பாய் ஆஸ்பத்திரி, 1/71, பிராட்வே (மண்ணடிக்கருகில்) ஜி. டி. மதராஸ். அல்லது 232, ஹார்ன்பி ரோட், பம்பாய் 1 ஆலோசனை நேரம்—வார தினங்களில் காலை 8-12வரையும் மாலை 5to7-30 வரையும் ஞாயிறுகளில் 8-12 வரைமட்டும். பதிலுக்கு ஸ்டாம்பு அனுப்பவும்.


வாழிய செந்தமிழ்

# சுதேசமித்திரன்

வாழ்க நற்றமிழர்!

— வாரப்பதிப்பு —


Vol. XVIII] ஸர்வஜித்துஸு ஆடிமீ 11உ ★ 1947-ஹு ஜூலைமீ 27உ [No. 26

# பர்மா பயங்கரம்

சென்ற வார இறுதியில் பர்மாவில் நடந்த ஒரு நிகழ்ச்சி மகா கோரமானது. மந்திரி சபைத் தலைவர் ஆங்ஸன் உள்பட ஏழு மந்திரிகள் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டனர். பட்டப் பகலில், மந்திரி சபைக் கூட்டம் நடக்கையில் இந்த கோரம் நிகழ்ந்திருக்கிறது. இந்த ஏழு மந்திரிகளில் ஆங்ஸெனும் ஒருவர் என்பதை அறிய பர்மாவின் நண்பர்களது உள்ளத்தில் வேதனை இன்னும் பன்மடங்காகும். அந்நாடு விடுதலை பெற அந்த வீர இளைஞர் செய்துள்ள சேவை பிரமிக்கத்தக்கது. இன்று பர்மா சுதந்திர வாயிலை அடைந்துவிட்டதென்றால், அதற்கான பெருமை முக்கியமாக ஆங்ஸனையே சாரும். அவ்வாயில் கதவு திறக்க விருக்கும் தருவாயில் அவர் சில பாதகர்களின் குண்டுக்குப் பலியானது ஒரு சாதாரணக் கொடுமையன்று. பர்மியர் பெறவிருக்கும் சுதந்திரத்தை அவர்களது நிலையான க்ஷேமத்துக்குரிய ஒரு சாதாரணமாக உருப்படுத்துவதில் ஆங்ஸனும் உயிர் நீத்தஅவரது தோழர்களும் ஒப்பற்ற உதவி புரிந்திருக்கக்கூடும்.

பர்மிய மந்திரிகள் படுகொலைக்கு அரசியல் துவேஷமே காரணமென்பதில் சந்தேகமில்லை. அத்துறையில் ஆங்ஸன் கையாண்ட முறைகளை ஆதரிக்காத பர்மிய கோஷ்டிகள் உண்டு. அதிலும் அவர், சமீபத்தில் பிரிட்டனுடன் கலந்து பேசி பர்மாவின் எதிர்கால அரசியல் பற்றி ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டு திரும்பிய பின் அவர் கட்சிக்கு எதிர்ப்பு மிகத் தீவிரமாயிற்று. பொது உடமைக் கட்சியைத் தவிர பிரபல பர்மியத் தலைவர்களான ஊஸா, பாமா போன்றவர்களும் ஆங்ஸன் கட்சியைக் கடுமையாக எதிர்த்து வந்திருக்கின்றனர். பர்மியரது உரிமையை ஆங்ஸன் பறிகொடுத்துவிட்டதாக அவர்கள் வாதம். எதிர்ப்பு கோஷ்டிகளைச் சேர்ந்த சிலர் "ஆயுதங்களுடன் கூடிய போராட்டம்" துவங்கப்போவதாயும் பேசி வந்திருக்கின்றனர். எனினும், நேற்று முன் தினம் அங்கு நடந்ததைப் போன்ற ஒரு கோரத்தை மன நிம்மதியுடன் கேட்டறிய யாரும் தயாராயிருந்திருக்க முடியாது.

அரசியல் துறையில் கருத்து முரண்பாடுகள் ஏற்படுவது முற்றிலும் சகஜமே. லட்சியங்கள் விதவிதமாக இருக்கலாம். அவற்றை எய்தும் முறைகளிலும் அபிப்பிராய பேதமிருக்கலாம். ஆனால், ஒருவர் தமது கருத்தை இன்னொருவர் ஏற்கவில்லை யென்பதற்காக கொலை பாதகத்தில் இறங்குவதானால், இறுதியாக இந்த வெறி எங்கு போய் முடியும்? மீண்டும் பர்மாவை அடிமையாக்குவதில் அக்கரை யுள்ளவர்களே அதன் தற்போதைய நிலை கண்டு ஆனந்திக்கக்கூடும். அதன் தலைவர்களில் தலைசிறந்த சிலர் துப்பாக்கிக்கு இரையாகி விட்டார்கள்; இன்னும் சிலர் இந்த பயங்கரக் குற்றம் சம்பந்தமாகக் கைதியாகிச் சிறையிலடைக்கப்பட்டு விட்டனர். தேச முழுதும் ஒரே பீதியும், குழப்பமும்! பர்மாவின் எதிர் காலம் என்னகுமென்று யாரும் சொல்லமுடியாது. இத் தருணத்தில் தங்கள் சகதேச ஜனங்களான பர்மியர் பால் இந்தியரது உள்ளத்தில் அனுதாப உணர்ச்சி வெள்ளம்போல் பெருக்கெடுப்பது இயற்கை. ஆனால், இதே சமயத்தில் பர்மா கோரத்தின் படிப்பினையும் இவர்கள் உள்ளத்தில் நிலைபெற வேண்டும்.



எல்லாம் என் உழைப்பினால்தான், சார். எனக்கு வேலையில்தான் கண். அதுதான், எனக்குச் சாப்பாடு, ஆறுதல் என்று ஒரு குட்டி லெக்சர் அடித்தான் நரசிம்ஹன் பி.ஏ. நரசிம்ஹன் குள்ளமாகவும் மாநிறமாகவும் இருப்பான்.

எப்பொழுதும் வெறுக்கத் தகுந்த அவன் முகமானது அவன் பேசும்பொழுது கண்டோர் அருவறுக்கத் தகுந்த ஒரு முகபாவத்தைக் கொண்டது.

நான் சர்வே டிபார்ட்மெண்டில் புகுந்து குட்டிச் சுவருக்கான வருடங்கள் ஆகின்றன. சதா செக்ஷன் மானேஜருக்கு என் மேல் கம்ப்ளெயின்ட்.

மானேஜருக்கு என் மேல் கோபம் வருவதற்குக் காரணம் நான் பைல்களை வீட்டுக்கு எடுத்துப் போகாததோ. ஆமாம் ஆபீஸ் கட்டை எதற்காக வீட்டுக்கு எடுத்துச் செல்வது?

ஆனல், நரசிம்ஹனுக்கோ 'பைல்' தான் உயிர் சில தினங்களில். அதி காலையில் வந்து ஆபீஸில் வேலை செய்வான். சூரியன் அஸ்தமித்து, தெருவிளக்குகள் ஏற்றிய ஒரு மணி, அல்லது 2 மணிக்குப் பிறகு தான் முக்கால் வாசி தினங்களில் வீடு செல்வான்.

"என்ன மனுசன், சார்! நேற்றிரவு என்னுல இரவு 8-மணி 'நமாஸ்' கூட தவறி விட்டதுங்க- ஐயரு கூத்தடிச்சிக்கிட்டு இல்லல இருந்தாரு" என்று ஆபீஸ் ப்யூன் ஹனிப் புகார் செய்வான் எங்களிடத்தில்,

இன்று அவன் தன்பெருமையை சிலாகித்துச் சொன்னபொழுது எனக்குச சுரீர் என்று பட்டது.

அன்றுதான் நல்ல 'டோஸ்' வாங்கியிருந்தேன் மானேஜரிடம்.

நரசிம்ஹன், மேலும் தொடர்ந்து, "சார் நான் ஒருத்தரையும் குறிககவில்லை, ஆனல், அநேக கிளார்க்குகள் தங்கள் கடமைகளை சரிவர உணர்வதில்லை. சம்பளம் வேணும் அப்கம் வேணும் என்று வாய் கூசாமல் கேடகிறார்கள். ஆனல் எந்த கிளார்க் உடனுக்குடன் பேப்பர்களை எல்லாம் முடித்து வைக்கிறன். ஒவ்வொருத்தரிடத்தில் போனல் ஒரு மாதம், இரண்டு மாதம் என்று இழுக்கடிக்கிறார்கள்." என்றன்.

அதற்குள் அரட்டை ஐயாசாமி அங்கே வந்தான். அவன் சொன்னன்! "என்ன, மிஸ்டர் நரசிம்ஹன், மாடு மாதிரி இந்த கவர்ன்மெண்டுக்கு எதுக்காக உழைக்கணும் ராவு, பகல், ஓய்ச்சல் ஒழிவில்லாமல் வேலை செய்துவிட்டு மார்வலி என்று ஒரே நாள் படுத்தார் நம்ம ஆபீஸ் திருமலைபிள்ளை திடீர் என்று ஒரு நாள் மார்வலி வந்தது. மறுநாள் போயே போய் விட்டார். இன்று அவர் குடும்பம் நடுத்தெருவில் இருக்கிறது."

பேசும்பொழுதே ஐயாசாமிக்கு நரசிம்ஹன் மேலிருந்த வெறுப்பானது கோபமாக மாறியது. உஷ்ணம் ஏறியது பேச்சில்.

"முப்பது கிளார்க் வைக்க வேண்டிய இடத்தில் 15 கிளார்க்தான் இருக்கிறார்கள். இங்கு கறுங்காலி காலாடிப் பசங்கள் சில பேர், சுத்த துரோகிகள், மானேஜருக்கும் அந்தப் பெரிய பாவியான துரைக்கும் கூழைக்கும்பிடு போட்டுக்கொண்டு மற்றப்பேருக்குக் கெட்டபெயர் வாங்கிக்கொடுக்கிறார்கள்" என்று ஐயாசாமி முடித்தான்.

நரசிம்ஹன் முகம் கறுத்தது. கோபம் வந்தது. ஆனல் அவன் ஒன்றும் பதில் பேசவில்லை. ஏதாவது பேசினல் அரட்டை பழைய பாக்கிக்காக ஒன்று வைப்பான் என்று தெரியும்.

சாயந்திரம், நானும் அரட்டையும் பீச்சு வழியாக வீட்டுக்குப் புறப்பட்டோம்

'என்ன. சாமிநாதா, ஒரு ஐந்து கொடேன் கைமாற்ருக' என்றன் அரட்டை.

"ஏண்டா, நான் காசுமரம்" என்று நினைத்துக் கொண்டாயா? என்று நான் பதிலளித்தேன். பிறகு குறிப்பாக, அரட்டை, 'நரசிம்ஹனைக் கேளேன்' என்று சொன்னேன்.

"அவனுக்கு மட்டும் ஏதுடா பணம். எல்லாருக்கும் கொட்டி அளிக்கிறனே அந்த வாய்க்கரிசி தானே அவனுக்கும்" என்றன் ஐயாசாமி. அவனுடைய கோப உஷ்ணமானி சற்று இறங்கியிருந்தது.

"உனக்குத் தெரியாதப்பேன் நரசிம்மனுக்கு ப்ரைவேட் 40 ரூபாய் வருகிறது. உனக்குத் தெரியாது கேசவ ஐயர் பிள்ளை அவனுக்குத்தான் சொல்லிக் கொடுக்கிறன்."

"அவருக்கு ஒரு டஜன் ஆயிற்றே. அதில் எது?' என்று ஐயாசாமி கேட்டான்.

நான் சொன்னேன்: "பெரிசுடா அதான் ரெட்டை மண்டை!

"ரூபாய் நாற்பதா வருகிறது!" என்று சீட்டியடித்தான் ஐயாசாமி. "ஆனல் ஆசாமி சரியான கஞ்சன். அவன் என்றைக்காவது ஒரு கப் காபி குடி என்று யாருக்காவது கொடுத்திருக்கிறன?"

"டேய், ஐயாசாமி அப்ப உனக்கு ஒரு கப் காபி கொடுக்கிறவன் ஒசத்தி ஆசாமி போலிருக்கிறது" என்று நான் அவனைப்பரிகசித்தேன்.

நெற்றிக்கண் திறந்த ருத்திரனைப்போல் விளங்கினர் அன்று மானேஜர்.

"டேய், ரத்னம், முனுசாமி, என்னடா அட்டண்டர் வேலை செய்கிறது நீங்கள் எல்லோரும்" என்று கோபமாக இரைந்தார் வேதரத்ன முதலியார்.

மானேஜரைக் 'காக்காய்' பிடிக்கும் கோவிந்தசாமி பக்கத்தில் நின்றும் கூட, மானேஜர் தன் கோபத்தின் காரணத்தை வெளியில் கூறவில்லை.

ஆனல், என்ன நடந்தது என்றல் ஆபீசர் அறைக்கு முதலில் மானேஜர் சென்றர். பிறகு மணி அடிக்கப்பட்டது. நரசிம்ஹன் கூப்பிடப்பட்டான். இதெல்லாம் நடந்து கால்மணி ஆகியிருக்கும்.



சற்று முன்புதான் நரசிம்ஹன் தனது வீட்டிற்குத் திரும்பி வந்தான். அவன் பார்வையில் ஒரு 'கம்பீரம்' இருந்தது. தலை குனிந்து சிரித்துக்கொண்டான். அவன் மனேஜரைப் பார்க்கவில்லை. மானேஜரும் அவனைப் பார்க்கவில்லை.

ஆமாம், எத்தனை நாள்தான் ரகசியம் ரகசியமாக இருக்கமுடியும்? ஆபீசர் வயிற்றுக்குள் இருப்பதைக்கூடக் கீறி எடுத்துவிடுவோம் கிளார்க்குகளாகிய நாங்கள்.


நரசிம்ஹன் பேபரில் ஒரு குறிப்பு போட்டான். மானேஜர் கண்ணில் அது பட்டு அவர் அது ஆங்கில இலக்கணப் பிழை என்று நினைத்து அதை அடித்து இருந்தார். ஆபீசர் நரசிம்ஹன் எழுதியதே சரி என்று சொன்னர்.

எப்பொழுதும், இந்தமாதிரி நேரிட்டால் ஒரு ஆபத்தான கட்டமேயாகும். ஆனல் நரசிம்ஹன் மானேஜரைப்பார்த்த பார்வை அவனுலும் ஒளிக்கமுடியாத ஒரு எண்ணத்தின் குறி. மானேஜரை சாந்த ஸ்வரூபியான மனிதனிலிருந்து காட்டில் இரை தேடி உறுமும் புலியாக மாற்றிவிட்டது.

நாங்கள் எல்லோரும் வீடு திரும்பும்போது, நரசிம்ஹன், என்னிடம் மட்டும் சொன்னன். "என்ன சார், இந்த மானேஜர் என்ன சார் என்னைப் பண்ணமுடியும்? ஆபீசர் என்னை ரொம்பவும் புகழ்ந்து பேசினர். அவர் சொன்னர், சார்! 'என்ன நீங்கள் பகலென்றும், இரவென்றும் பாராமல் உழைப்பது எனக்குத்தெரியும்!" நரசிம்ஹன் பேசிக்கொண்டே சென்றன்.

"ஒரு விஷயம் நிச்சயம் சார்! சீக்கிரத்தில் ஒரு சம்பள உயர்வை எதிர்பார்க்கிறேன். எல்லாம் ஆபீசர் தயவிருந்தால் நடக்கிறது. கிடைத்தவுடன் ஒரு தளிகைவிடப் போகிறேன் கோவிலில். உழைப்பவன் வேலை பாராட்டுதலில்லாமலிருக்காது. அதற்கு வெகுமதி உரிய காலத்தில் வரும்" என்று நரசிம்ஹன் விழித்தான்.

வீடே அதிர்ச்சியினுல் இடிந்து விழும்படி செய்து கொண்டிருக்கின்றன், தவுல்காரன்.



நிச்சயதார்த்தத்திற்கு அடையாளமாக பிரிட்டிஷ் இளவரசி எலிஸபெத்தின் விரலில் லெப்டினன்ட் மவுண்ட்பாட்டன் சூட்டிய மோதிரத்தை அரண்மனைக்கு வந்த விருந்தாளிகள் பார்வையிடுகின்றனர்.

ஆம், இந்த சுபதினத்தில்தான் ஸ்ரீ. நரசிம்ஹன் பி. ஏ. (ஆனர்ஸ்) அவர்கள் தம் இல்வாழ்க்கையை ஆரம்பிக்கப் போகின்றர்.

இரவாய்விட்டது. சாப்பாடு முடிந்தது.

நரசிம்ஹன் மாடி ஏறி பாதி தூரம் சென்றுவிட்டான்.

அப்பொழுது "சார்," என்ற குரல் கேட்டது.

நான் திரும்பினேன். ஹனீப் நின்று கொண்டிருந்தான்.

ஒரே எட்டாக நரசிம்ஹன் கீழே இறங்கி வந்தான். அவனுடைய முகத்தில் வெற்றிக்குறி. ஆபீஸ் ப்யூன் வந்தது எதற்காக இருக்கவேண்டும். ஆபீசர் தன்னைப்பாராட்டி எழுதியிருக்கும் கடிதமாக இருக்கலாம். யார் கண்டார்கள். பிரமோஷனைப்பற்றிக் கூட அதில் குறிப்பிட்டிருக்கலாம்.

நரசிம்ஹன், இதோ ஹனீப்பை அடைந்து விட்டான்.

ஹனீப் வேகமாகத் திரும்பிச் சென்றதைப் பார்த்தோம்.

தடாலென்று ஒரு சப்தம் உண்டாயிற்று. நாங்கள் பார்த்த பொழுது அது நரசிம்ஹனுல் ஒரு மூலையில் எறியப்பட்ட ஒரு பொருளினுல்தான் என்று அறிந்தேன்.

திரும்பிக்கூட பாராமல், விர் என்று நரசிம்ஹன் மாடி ஏறி மறைந்துவிட்டான்.

எல்லோரும் விஷயம் புரியாமல் விழித்தனர்.

நான் அந்த மூலைக்குச்சென்று அதைக் கையில் எடுத்துப் பார்த்தேன்.

பிறகு தான் நரசிம்ஹன் நடத்தையின் காரணம் தெரிந்தது.

அது ஒரு ஆபீஸ் 'பைல்'—அதாவது கட்டு. இரவில் வேலை செய்வதற்காக ஆபீசிலிருந்து அனுப்பப்பட்ட முக்கியமான பேப்பர்கள்.

வாழ்க்கையிலேயே எவனுக்கும் ஒரே ஒரு தினம்தான் வருகின்ற சுபதினத்தில் வேலை செய் என்று சொன்னல் ?

என்னுடைய மனக்கண்முன் மானேஜர் தோன்றினர். ஆனல் அதோ அவர் காதில் குசுகுசு என்று பேசுகின்றனே !

அவன் யார் ?

அவன்தான் அரட்டை ஐயாசாமி !


## குமாரி வேதவல்லி பரத நாட்டியம்

சென்னை மேயர் முதலில் சிரித்தாராம், "இந்தச் சின்னக் குட்டியாவது பரத நாட்டியம் ஆடவாவது" என்று. ஆனால், சுமார் 1000 பேருக்கு முன்னால் நடந்த அரங்கேற்று படியைப் பார்த்த பிறகு "நான் சிரித்தது பிசகு; இந்தச் சிறுமியின் பரத நாட்டியம் ரொம்ப அபூர்வமாயிருக்கிறது; பிற்காலத்தில் இந்தப் பெண பெரிய பரதநாட்டிய திலகமாகப் பிரகாசிப்பாள் என்பதில் சந்தேகமில்லை" என்று ஸ்ரீ டி. சுந்தரராவ் நாயுடு தமது தவறை ஒப்புக்கொண்டார். அதை ஆமோதித்து, ஙிருத்கியோதயா தியேட்டரில் கூடியிருந்த அத்தனை ஜனங்களும் கரகோஷம் செய்தனர்.

உண்மையில் குமாரி வேதவல்லியின் பரதநாட்டியம் மிகவும் நன்றாயிருந்தது. சுமார் 9 வயதுள்ள சிறு பெண் பரதநாட்டியக் கலையின் நுட்பங்களைப் பிழையில்லாமல் அபிநயித்தும், ஆடியும் காட்டு



வது எளிதல்ல. அத்தகைய ஒரு சிரமமான காரியத்தைச் சிறிதும் சளைப்பில்லாமலும் தாளம் தவருமலும் இக் குழந்தை ஆடிக் காட்டினாள். பரதநாட்டியக் கலையிலேயே இக்குழந்தையை நெடுக விட்டுத் தேர்ச்சியடையச் செய்யவேண்டுமென்பது இக் குழந்தையின் குடும்பத்தாரின் நோக்கமானால், அவர்கள் நோக்கம் வெற்றிகரமாக ஈடேறும் என்பதில் சந்தேகமில்லை.



துருக்கி—ரஷ்ய எல்லைக்கு அருகே "சம்பவங்கள்" அதிவேகமாக அதிகரிப்பதைக் கண்டு துருக்கி தன் ராணுவத்தை பலப்படுத்த நிச்சயித்துள்ளது. துருக்கி ராணுவத்திலிருக்கும் ஆறு லக்ஷம் பேர்கள் பெரும் அளவிற்கு பயிற்சி பெற்றுள்ளபோதிலும், போதிய நவீன சாதனங்களின்றியே கஷ்டப்படுகின்றனர். இக் குறையை ஒருவாறு தீர்க்கவே தற்சமயம் அமெரிக்க பீரங்கிகள் வந்து இறங்கிக்கொண்டிருக்கின்றன. அவற்றில் ஒன்றை இயக்கும் விதத்தில் துருக்கி ஸோல்ஜர்கள் பயிற்சி பெறுவதையே படம் காட்டுகிறது.



## கோமதியின் மணவாளன்

சுபஸ்ரீ

காண்டுப் புலியைப் போல அறையின் மேலும் கீழும் உலாவிய ஹெட்மாஸ்டர் சிவஞானம் பிள்ளையின் கண்கள் குபீரென்று சிவந்தன; நீண்ட அவரது புருவங்கள் நெற்றியை இடித்தன; தொங்கும் அந்த மீசையோ துடிதுடிக்கத் தொடங்கிவிட்டது! காட்டாற்று வெள்ளம் போலப் பீறிட்டுக் கொண்டு வந்த ஆத்திரத்தையெல்லாம் அடக்கிக் கொண்டு மூன்ரும் முறையாக அந்தக் கடிதத்தின் குறுக்காக தனது கனல் கக்கும் கண்களைச் சுழற்றினர்.

பொறுமையின் உருவாகிய சிவஞானம் பிள்ளை, இப்படி ஒரேயடியாக ருத்ர மூர்த்தியாக மாறியதற்குக் காரணம், வேறொன்றுமில்லை. அவரது ஒரே மகன் ரங்கராஜன் கடைசியில் கலியாணம் செய்து கொள்ள இசைந்து விட்டான். போன தடவை அவன் திருச்சியிலிருந்து வந்திருக்கும்போதே பணக்காரப் புள்ளியான அவ்வூர் மிராசுதார் அருணாசலம் பிள்ளையின் மூத்த மகளைப் பண்ணிக் கொள்ளும்படி எவ்வளவோ வற்புறுத்தியும் ஒரேயடியாக மறுத்து விட்ட தன் மகன் இப்போது யாரோ அத்தை வீட்டிற்கு அடுத்த அகத்தில் வசிக்கும் அனாதைப் பெண்மேல் காதல் கொண்டு விட்டானும்! உடனே கல்யாணமாம்! நினைக்கும்போதே பிள்ளைக்கு அளவற்ற ஆத்திரமும் கோபமும்தான் வந்தது.

பத்து வருஷங்களுக்கு முன்பு உயிரையே வைத்திருந்த அவரது அருமை மனைவி அகால மரணமடைந்தபொழுது ரங்கராஜனுக்கு வயது பனிரெண்டேதான். அதற்குப் பிறகு மற்றொரு பெண்ணைக் கைப்பிடிக்க அவரது உடைந்த உள்ளம் இடம் தரவில்லை. எனவே, தாயற்ற அப்பையனைத் தகுந்தபடி வளர்ப்பதாகக் கூறி பிள்ளையின் இளைய சகோதரி கல்யாணி தன்னுடன் அவனைத் திருச்சிக்கு அழைத்துச் சென்றுவிட்டாள். அங்கேயே பி. ஏ. பாஸ் செய்த ரங்கராஜன், அத்தை கணவர் வேலைபார்க்கும் ஆபீஸிலேயே ஒரு வேலையைச் சம்பாதித்துக்கொண்டான்.

படித்துப் பாஸ் செய்தாலே ஒரு பெண்ணைக் கட்டாயமாகக் கழுத்தில் கட்டும் ஹிந்து சமூகத்தில், ஏதோ சொல்லிக்கொள்வதற்குத் தக்கனவாக ஒரு வேலையும் கிடைத்தால் மண ஏற்பாட்டிற்குக் கேட்கவா வேண்டும்? அப்பாவும் அத்தையுமாக ரங்கராஜுவை சீக்கிரம் ஒரு நல்ல பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் செய்து கொள்ளுமாறு, கணக்கற்ற தடவைகள் சொல்லியும் அவன் காதில் போட்டுக்கொள்ளாமலேயே இருந்து வந்தான். அன்னைக்கு மேலாக அன்புடன் வளர்த்த அத்தை, அழகான ஒரு நாட்டுப் பெண் அதிசீக்கிரத்திலேயே தனது கிரஹலக்ஷ்மியாக வரவேண்டுமென்று எண்ணியதில் என்ன ஆச்சர்யமிருக்கிறது? ஆனால் இந்தப் பைத்தியக்கார ரங்கராஜு, புதிய படிப்பு படித்ததின் பலனாய் ஏதோ காதல், கீதல் என்ற விசித்திரப் பொருள் திடீரென்று உதயமாகிப் பிறகுதான் மணம் என்று பிடிவாதமாகப் பிதற்றிக்கொண்டிருந்தால், அவர்கள் எவ்வளவு நாட்கள்தான் பொறுமையோடு இருப்பார்கள்?

இவ்வாறு இவர்கள் அலுத்திருந்த சமயத்தில்தான் ரங்கராஜு இதுகாறும் எதிர்பார்த்துத் 'தவங்கிடந்த 'காதல்' ஒருநாள் அதிர்ஷ்டவசமாக உதயமாகியது. திருச்சியில் அத்தை அகத்திற்குப் பக்கத்து வீட்டில் வயது சென்ற தாயாருடன் குடியேறிய அந்த கோமதியின்பேரில் அவன் காதல் கொண்டான் என்ருல் அதற்கு சில அடிப்படையான காரணங்கள் இருக்கத்தான் செய்தன.

வலிமையான காந்தம் போல யாரையும் வசீகரிக்கும் அவளது குறுகுறுத்த நயனங்களும், எப்பொழுதும் முறுவல் தவழும் மலர்ந்த முகம். இயற்கையிலேயே காண்பவர்களைத் தன் பக்கம் இழுக்கும் அசாதாரண சக்தியைப் படைத்திருந்தன...ஆனால் உறவினர்களற்ற அவளுக்கிருந்த குறையெல்லாம் 'ஏழ்மை' என்ற தகர்க்க முடியாத கோட்டையே!

இத்தகைய எழில் நிறைந்த கோமதி தனது சொக்குப்பொடி தூவும் மலர்க் கண்களால் ரங்கராஜுவை மட்டும் அடிமை கொண்டதோடு நில்லாமல், அகத்திலிருக்கும் அத்தை கல்யாணியையும் ஆகர்ஷித்து, அவள் மனத்திலும் நல்லெண்ணத்தை உண்டாக்கிவிட்டாள்.

ஆகவே கோமதியைப்பற்றி அத்தையிடம் ஒருநாள் ரங்கராஜு மெதுவாகப் பிரஸ்தாபித்தபோது, இந்தமட்டும் மணம் செய்துகொள்ள இசைந்தானே என்ற உள்ளப்பூரிப்பில், வறுமையில் வாடிய கோமதியைப் பற்றி வானளாவப் புகழ்ந்த பெரிய 'இராமாயணம்' ஒன்று அண்ணு சிவஞானம் பிள்ளைக்கு வரைந்து தள்ளிவிட்டாள். மேலும் ஏழைப் பெண்ணாக இருந்தபோதிலும் நல்ல அடக்கமானவள் என்றும், அவள் நாட்டுப் பெண்ணாக வீட்டிற்கு வரக் கொடுத்து வைக்க வேண்டுமென்றும் பிரமாதமாகக் கூறி, உடனே புறப்பட்டு வந்து மேற்கொண்டு காரியங்களை முடிக்குமாறு எழுதியிருந்தாள்.

கடிதத்தைப் படிக்கப் படிக்கப் பிள்ளைக்குக் கோபம்தான் பீறிட்டுக்கொண்டு வந்தது. அந்த வாலிபப் பையன்தான் அவ்வாறு காதல் வசப்பட்டுவிட்டானென்ருல், வயதாகிய கல்யாணிகூடவா இந்தமாதிரிப் பைத்தியக்காரத்தனமாகப் பத்துப் பக்கம் வரைந்து தள்ளுவாள்? நல்ல பிள்ளைமார் குலத்தில் உதித்து, அதற்கேற்ற சிறந்த ஸ்தானத்தில் இருக்கும் ஹெட்மாஸ்டர் சிவஞானம் பிள்ளை


யின் மருமகள் அழகாக மட்டும் இருந்தால் போதுமா? ஏழையென்றால், அதிலும் தகப்பன் உறவினரற்ற ஒரு அனாதையையா தன் மகன் மணந்து கொள்வது?

......இவ்வாறு கடிதத்தை வைத்துக்கொண்டு மனப் போராட்டத்தில் ஆழ்ந்திருந்த பிள்ளையின் குழம்பிய உள்ளத்திலே எங்கே இந்தக் கலியாணத்திற்கு குறுக்கே நின்றால் தனது ஒரே மகன் வேறு மணமே செய்துகொள்ள மறுத்து விடுவானோ?' என்ற கிலி பிடித்துக் கொண்டது. "காதல் கல்யாணம் என்பதுதான் இந்தக் காலத்து நாகரீகமாச்சே! எதற்கும் பெண்ணைப் போய் பார்ப்போம்; எல்லாம் பொருந்தியவளாக இருந்தால் ஏழையென்ன. மற்றதென்ன?" என்ற இறுதியான முடிவிற்கு வந்த சிவஞானம் பிள்ளை, சிறிதுகூடத் தாமதிக்காமல், அடுத்த நாளே திருச்சிக்குப் புறப்பட்டுச் சென்றார். வஜ்ர ஹிருதயமாக இருந்தால்தான் என்ன? பிள்ளைப் பாசம் அதை ஒரு நொடியில் அசைத்துவிடாதா?

* * * *

திருச்சி யடைந்த மறு நாள், பிள்ளையவர்கள் மற்றவர்களுடன் பெண்ணைப் பார்த்துவரச் சென்றார். பெண் வீட்டின் முன்னறையில் விரிக்கப்பட்டிருந்த பழம் பாயில் யாவரும் அமர்ந்தனர்.

அந்தச் சின்னஞ் சிறியகூடத்தின் தெற்குச் சுவரில் தொங்கிய அழுகடைந்த சுவாமி படத்திற்கு வெகுநாட்களுக்கு முன்பு சூட்டப் பட்ட பூமாலை, வாடி உலர்ந்து, மெல்ல வீசிய காற்றில் ஊசலாடிக் கொண்டிருந்தது மூலையிலே கிடந்த ஒடிந்த நாற்காலியும், அதற்கு அருகாமையில் நின்ற தூசு படிந்த சிறிய பீரோவும்தான் அந்த அறைக்கு அலங்காரமாக விளங்கின.



வாசற்படியில் நின்ற பெண்ணின் தாயார், வந்தவர்களுக்கு நமஸ்காரம் செய்யும்படி மணப் பெண்ணை உத்திரவிட்டாள்.

'சல சல' வென்ற புதுப்புடவையின் சப்தம்! தொடர்ந்து மணமாகப் போகும் பெண் மிடுக்கிவிட்ட பொம்மை போலவந்து, நமஸ்காரம் என்ற பெயரால் குனிந்து நிமிர்ந்துவிட்டு, மின்னல் போலச் சட்டென மறைந்தாள்.

பெண்ணின் முகத்தைக் கூர்ந்து நோக்கிய பிள்ளை, ஒரு கணம் திகைத்துவிட்டார். எங்கேயோ பார்த்த முகம்! மிகவும் பழகின முகம்!! எவ்வளவோ மனதைக் குழப்பிக்கொண்டும் எங்கே கண்டோம் என்பது மட்டும் நினைவிற்கே வரவில்லை.

சிறிது நேரத்திற்கெல்லாம் வீட்டிற்குத் திரும்பிய யாவரும் பெண்ணைப்பற்றியத் தங்கள் அபிப்பிராயத்தை தாராளமாக வெளியிடுவதில் ஈடுபட்டனர்.

யோசனையில் ஆழ்ந்துகொண்டு, ஈஸிசேரில் சாய்ந்திருந்த பிள்ளை, கல்யாணியைக் கூப்பிட்டு, "ஏனம்மா, பெண் என்னவோ என் மனதிற்குப் பிடித்திருக்கிறது. ஆனால் அந்தத் தாயாரைத் தவிர அவளுக்கு வேறு ஒருவரும் கிடையாதா? காலக்ஷேபம் எவ்வாறு நடக்கிறது?" என வினவினார்.

"இந்தப் பெண்ணிற்கு ஒரு விதவை சகோதரி இருந்தாளாம். எங்கேயோ நமது ஜில்லா பக்கத்தில்தான் உபாத்தியாயினியாக வேலை பார்த்து வந்தாளாம். ஏதோ தகராறு காரணமாக திடீரென்று வேலை விட்டு விட்டு, ஒரு நாள் அவளது தாய், சகோதரி கோமதி ஆகிய இருவருடன் இங்கு வந்து வசிக்க ஆரம்பித்தாள். பாவம்; அதற்குப்பிறகு வறுமையில் கஷ்டப்பட்டு மனம் ஒடிந்து வியாதியாகப்படுத்தவள்தான். பின் எழுந்திருக்கவேயில்லையாம்! அவளது மரணத்திற்குப்பிறகு வேறு கதியில்லாத இவர்கள் ரொம்பக் கஷ்டப்பட்டுவிட்டார்கள்!' என்று நீட்டி முடிக்கி கதையை விஸ்தரித்தாள், கல்யாணி.

"பள்ளிக்கூட உபாத்தியாயினியா? அப்படியானால் அவள் பெயரென்ன?"

"என்னவோ சொன்னார்கள்... ஆமாம்; சுந்தரியாம், அவள் பெயர்! ஏன், உங்களுக்குத் தெரியுமா?"

"சுந்தரி!......சுந்தரி!!"

திடுக்கிட்டுவிட்டார் பிள்ளை! விளக்கைப் போடுவதற்காக இருட்டிலே விசையைத் தேடிய விரல்கள் எதிர்பாராத மின்சாரத் தாக்குதலுக்கு ஆளானதுபோல, பெண்ணைப்பற்றிய விசாரணையில் இறங்கிய பிள்ளை, 'சுந்தரி' என்ற பெயரைக் கேள்விப்பட்ட அந்த க்ஷணத்திலேயே அதிர்ச்சியினால் ஸ்தம்பித்து விட்டார். அந்த அகன்ற அறையிலுள்ள எல்லாப் பொருள்களும் தலைகீழாகச் சுழன்றன, அவரது கலங்கிய கண்கள் முன்னால்.

ஐந்து வருடங்களுக்கு முன்பு நடந்தவை! ஆயினும் அச்சம்பவத்தின் ஞாபகங்கள் இன்னும் அவர் மனதிலே பசுமையாகவே இருக்கின்றன.

* * * *

முதன் முதலாக பள்ளிக்கூடத்திற்கு பிள்ளை;



ஹெட்மாஸ்டராக மாற்றப்பட்டு வந்திருந்த சமயம்; அப்போது சுந்தரி அப்பள்ளிக்கூடத்தில் அவர் கீழ் வேலை பார்க்கும் ஒரு உபாத்தியாயினி. பெயருக்கேற்ற எழிலுடன் விளங்கிய அவளுக்கிருந்த உடைமையெல்லாம் இளமையிலே இறந்துபோன அவள் கணவன் அளித்துச்சென்ற 'விதவை' யென்னும் கொடுமையான பட்டம்தான். அந்த அகற்ற முடியாத போர்வை, அவளை இறுக்கிப் போர்த்தி இதயமறியா சமூகத்தின் எங்கோ ஒரு மூலையில் பிடித்துத் தள்ளிவிட்டது. ஆனால், ஒரு ஆண் வாரிசு கூட இல்லாத அவ்வேழைக் குடும்பம் மானமாக வாழ்வதுதான் எப்படி? எனவே, வயதான தாயாரையும், சின்னஞ் சிறு தங்கையையும் காப்பாற்றும் பொருட்டு, படித்த அப்பெண் பணியில் இறங்கினாள்.

சிவஞானம் பிள்ளையின் மனைவி இறந்து எவ்வளவோ வருடங்கள் பறந்து விட்டன. ஆனால் அன்றளவும் சலனமற்றிருந்த தனது நிஷ்களங்கமான மனதின் ஆழத்திலே சுந்தரியைக் கண்ட பிறகு ஒரு விவரிக்க முடியாத புத்துணர்ச்சி உதயமாகியிருப்பதை அறிந்து கொள்ள அவருக்கு அதிக நாட்கள் பிடிக்கவில்லை.

"அமைதியாகச்சென்று கொண்டிருக்கும் ஏழை விதவையின் வாழ்க்கையிலே அனாவசியமாக நாம் குறுக்கிடுவானேன்? இறந்துபோன ராஜுவின் தாயாருக்கு இழைக்கும் மன்னிக்கவொண்ணாத துரோகமல்லவா, இது?......விதவையாக இருந்தால், உணர்ச்சிகள் உறைந்துவிடுமா என்ன? விருப்பத்தை அறிய முயற்சிப்பதிலே வெறுக்கக்கூடிய செயல் என்ன இருக்கிறது?...சீ, சீ வயதாகியும் இந்த சபலம். ஏன்?" என்று இவ்வாறு ஓயாத போராட்டத்திற்கு உள்ளாகியது அவரது சலனமடைந்த உள்ளம். ஆனால் செய்த பாவத்திற்கு வருந்துவதுதான் மனச்சாட்சியின் தொழில் அல்லாமல், மனிதனின் பேய் மனத்தைஅடக்கியாளும் சக்தி, அதற்கேது?

ஒருநாள்: மாலை மயங்கும் நேரம். எல்லா உபாத்தியாயினிகளும் சென்று விட்டனர். சுந்தரி மட்டும் நாளைக்குக் கொடுக்கப்படவேண்டிய வியாச நோட்டுக்களை வேகமாகத் திருத்தும் வேலையில் ஆழ்ந்திருந்தாள். காலடிச்சப்தம் கேட்டு தலை நிமிர்ந்த சுந்தரி, என்றுமில்லாத வகையாய் ஹெட்மாஸ்டர் தன்னை நோக்கி வருவதைக் கண்டு திகைத்து விட்டாள். எங்கேயோ நாலு வகுப்புகள் தாண்டி வேலைக்காரக் கந்தன் நாள் முழுவதும் பையன்கள் 'லூட்டி' அடித்த அறைகளை வழக்கமான முணுமுணுப்புடன் சுத்தம் செய்து கொண்டிருந்தான். வேறு பள்ளிக்கூடத்தில் ஈ காக்கை இல்லை! எங்கும் ஓரே நிசப்தம்! மஞ்சள் வெயில்கூட இறங்கிவிட்டது. அப்பொழுதுதான் வழக்கத்திற்கு விரோதமாக அன்று அதிக நேரம் தங்கிவிட்டதை உணர்ந்தாள்.

அறையில் நுழைந்த பிள்ளை, மேஜையின் அருகேகிடந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்து பள்ளிக்கூட சம்பந்தமான பல விஷயங்களைப் பேச ஆரம்பித்தார், மரியாதை செலுத்தும் பாவனையாக எழுந்து அவசர அவசரமாக நோட்டுப் புஸ்தகங்களை அடுக்கிக்கொண்டே, விசையினால் இயங்கும் இயந்திரம்போல உணர்ச்சியின்றி பதில் சொல்லிக்கொண்டு வந்தாள் சுந்தரி. எப்படி விஷயத்தை விளக்குவது என்பது தெரியாமல் தட்டுக்கெட்டுத் திண்டாடிய சிவஞானம் ஒருவாறு மனதைத் திடப்படுத்திக்கொண்டு, பிரஸ்தாபிக்கு முன் குப்பென்று உடம்பெங்கும் வியர்த்துவிட்டது அவருக்கு.

அவ்வளவுதான்; இருட்டிலே அரவை மிதித்தவள்போல எதிர்பாராத அவரது வார்த்தைகளால் அவளுடைய மெல்லிய மேனி திடுக்குற்று நடுங்கியது. திடீரெனச் சிவப்பு ஏறிபோன அவள் கன்னங்களிலும், கண்களிலும் கோபமும் பயமும் கலந்து பிரதிபலித்தன.

"மன்னிக்கவும்; தாங்கள் இனி இம்மாதிரி என்னுடன்..." என்று சொல்லுமுன் அவளுக்கு வார்த்தைகள் விக்கின. இதற்குள் அந்த அறையைப் பெருக்க கந்தனும் உள் நுழைந்தான். 'படார்' என்று மேஜையைப் பூட்டிவிட்டு, படபடத்த இதயத்துடன் அவள் வெளியேறியதைக் கண்ட வேலைக்காரக் கந்தனுக்கு ஒன்றுமே புரியவில்லை.


அடுத்த இரண்டு நாட்கள் சுந்தரி அப்பக்கமே வரவில்லை. ஆனால் மூன்றாம் நாள் வந்த ராஜினாமாக்கடிதத்தைக்கண்ட பிறகுதான் பிள்ளை, அவர் செய்த மகத்தான தவறை உணர்ந்தார்.

கேவலம், அடக்க முடியாத உணர்ச்சிகளால் உந்தித் தள்ளப்பட்டு, அவளது விருப்பை அறிய முயன்றார். ஆனால் அவள் மறுத்துக் கூறியதும், தமது பாபச் செய்கைக்காகப்பச்சாதாபமடைந்து அவளை மறந்துவிடமுயன்றாரேயன்றி, பலவந்தப்படுத்தும் எண்ணம் அவருக்குச் சிறிதும் கிடையாது. அதற்கு மாறாக, உண்மையறியாத அப்பேதைப்பெண் இவ்வாறு அவசரப்பட்டுச் செய்துவிட்டாளே!

அன்றுமாலையே, அவள் வீட்டைக் கண்டுபிடித்து அவளிடம் மன்னிப்புக் கேட்கச் சென்றார். ஆனால் என்ன அதிசயம்? அவ




தொப்பிக்காரர்:—என்னுது ரொம்ப எளகின மனசு ஸார், கஷ்டப்படறவாளெ, முக்கியமா பிச்சைக்காரா அவஸ்தையை கண்ணாலே பாத்தா எனக்கு ரொம்ப கஷ்டமாயிருக்கு......!"



விமானங்களில் சாதாரணமாக படுக்கும் வசதி கிடையாது. இடநெருக்கடிதான் இதற்குக் காரணம். ஆனால் இதையும் சமாளிக்க புதிய வழி ஒன்று அமெரிக்க விமானங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பித்தானை அழுத்தவேண்டியதுதான் தாமசம், உடனே ஆசனம் படத்தில் காணப்படுவதுபோல் படுக்கையாக மாறிவிடுகிறது.

ரது வரவைக்கண்டு எள்ளி நகைப்பதுபோல, அவளது வீடு பூட்டிக் கிடந்தது! அக்கம் பக்கத்தில், விசாரித்ததில் முதல் நாள் இரவே தாயார் தங்கையுடன் வீட்டைக் காலி செய்துவிட்டு எங்கேயோ புறப்பட்டுச் சென்றுவிட்டாளாம்! அதற்குப் பிறகு சிவஞானம் பிள்ளை அந்த அபலையைப் பற்றிக் கேள்விப்படவேயில்லை.

கடந்த ஐந்து நீண்ட வருடங்களாக ஓயாமல் அவரது உள்ளத்தை உறுத்திக்கொண்டிருந்தது, மறக்கமுடியாத இந்தச் சம்பவங்கள்! களங்கமற்ற ஒரு விதவையின் அமைதியான வாழ்வில் தலையிட்டு, அவளை ஊரை விட்டே விரட்டிய தமது பாபச் செயலுக்காக அவர் எவ்வளவோ இரவுகள் வருந்தியிருக்கிறார்! கடைசியில் அவளது அழகு ரம்பிய சகோதரியின் பேரில் தனது ஒரே மகன் அளவற்ற காதல் கொண்டுள்ளான். இப்பேர்ப்பட்ட ஆச்சர்யமான சம்பவங்கள் நிகழுமென்று கனவிலும் அவர் கருதவில்லை. சுந்தரிக்கு இழைத்த கொடுமைக்குப் பிராயச்சித்தமாகத்தான் செய்வதற்கு என்ன இருக்கிறது?

ஆம்: ராஜுவிற்கே கோமதியை மணம்செய்விக்கவேண்டியதுதான்

* * * *

"தூங்கிவிட்டார்களா? இந்தாருங்கள் அண்ணு" என்று 'சுடச் சுட' காப்பியும் கையுமாக நின்ற கல்யாணியின் குரல் அவரைச் சிந்தனை லோகத்தினின்று தட்டி எழுப்பின.

"அண்ணு, கடைசியில் என்ன முடிவு செய்தீர்கள்?"

"செய்வதென்ன? ராஜுவிற்கு ஏற்றவள் கோமதி. இந்த இடத்தையே முடிக்க வேண்டியது தான்!" என்றார் பிள்ளை நா தழதழக்க. வியர்வை அரும்பிய அவரது முகத்திலே, ஒரு சோக முறுவல்!

"எனக்குத்தெரியும், கட்டாயம் நான் பார்த்த பெண் உங்களுக்குப் பிடிக்குமென்று" எனப் பெருமிதத்துடன் கூறிக்கொண்டே, கோமதியின் மணவாளன் ராஜுவிடம்தேடி,நற்செய்தியைச் சொல்ல உள்ளே ஓடினாள் கல்யாணி.

காப்பியை அருந்தி விட்டு, நிமிர்ந்த பிள்ளை, சுவற்றிலே அழகாக மாட்டப்பட்டு, மாலையிடப் பட்டிருந்த ராஜுவின் அன்னையின் போட்டோவை உற்று நோக்கினார். படத்திலிருந்த அந்தச் சுமங்கலியின் உதடுகள் மெல்ல அசைந்து, ஒரு புன் சிரிப்புக்கொள்வதுபோல் தோன்றிற்று, ஹெட்மாஸ்டர் சிவஞானம் பிள்ளைக்கு.

---





# பழிக்குப் பழி


கோமதி ஸ்வாமிநாதன்

ரங்கசாமி பாவம் அப்பாவி! பரம சாது! அடிபட்டால் கூட அழத் தெரியாத ஸ்வபாவம்! குபேரா பாங்கில் சாதாரண குமாஸ்தா உத்யோகம் பார்த்து வந்தான். கூட வேலை பார்ப்பவர்கள் உத்யோகத்தில் முன்னேறுவதற்காக அட்டகாசத்துடன் முஷ்டி யுத்தம்செய்துகொண்டிருக்கையில், ரங்கசாமி தானுண்டு, தன் இடமுண்டு என்றுதானிருந்தான். நாளடைவில் பாங்கு வட்டாரத்தில் அடிபடும் வார்த்தைகளில் அசடு என்னும் வார்த்தைக்குப் பதிலாக ரங்கசாமி என்னும் வார்த்தை அமுலுக்கு வந்துவிட்டது! 'அவன் என்னடா சுத்த ரங்கசாமி' என்றால், யாரோ ஒரு அசடைக் குறிப்பிடுகிறார்கள் என்று அர்த்தம்.

குபேரா பாங்கிக்குள் கசமுசவென்று பேச்சு எழுந்தது. ஏதோ ஒரு பெரிய தொகைக்குக் கணக்கு ஒத்து வர மறுத்தது. எங்கேயோ கையாடல் நடந்துவிட்டது. ஆனால் யார் எடுத்தார்கள் என்று மாத்திரம் தெரியவில்லை. ஒவ்வொரு சிப்பந்தியும் தன்னைத் தவிர மற்றவரைச் சந்தேகித்தார். ரங்கசாமிக்குக்கூட இந்தப் பேச்சு காதில் விழுந்தது. ஆனால், அவன் அதைக் காதில் போட்டுக்கொண்டவனகக்கூடத் தென்படவில்லை. அசட்டு ரங்கசாமியைக்கூட அனேகம் பேர்கள் சந்தேகித்தார்கள். திட்டமாக ஒன்றும் தெரியாத வரையில் இந்தப் பேச்சு, பாங்கை விட்டு வெளியே பரவவில்லை. பாங்கு கட்டடத்திற்குளளே மாத்திரம் கொந்தளிப்பாக இருந்தது. எப்போது எரிமலை வெடித்து நெருப்பைக் கக்குமோ என்று ஒவ்வொரு சிப்பந்தியும் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு இருந்தார்,

ஒரு நாள் மாலை, அநேகமாக எல்லாக் குமாஸ்தாக்களும் வீட்டுக்குப் போய்விட்டனர். வழக்கமாகக் கடைசியில் புறப்படும் ரங்கசாமி, கோட்டை உதறிக்கொண்டு புறப்பட யத்தனித்துக்கொண்டிருந்தான். அப்போது காஷியர் கந்தசாமி அந்தப் பக்கமாக வந்தவர், ரங்கசாமியின் ஆசனத்துக்குப் பக்கத்திலிருந்த ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தார். அக்கம் பக்கத்தில் ஒருவரும் இல்லை யென்று நிச்சயப்படுத்திக் கொண்டு தணிந்த குரலில் சொன்னார். "ரங்கசாமி! சமீப காலமாக நம் பாங்கியில் உலவும் வதந்தி உனக்குத் தெரிந்திருக்கும். இது வெளியில் தெரிந்தால் பாங்கின் புகழுக்கே ஆபத்து வந்துவிடும். இந்த விஷயத்தையே அமுக்கிவிட வேண்டுமென்று டைரெக்டர் ஆசைப்படுகிறார். ஆனால், எல்லா சிப்பந்திகளுக்கும் விஷயம் தெரிந்து விட்டதால் அப்படி திடீரென்று அமுக்கிவிடவும் முடியாது. ஆள் அகப்படும் வரை காத்திருக்கவும் முடியாது."

கந்தசாமி கொஞ்சம் நிறுத்தினார். ரங்கசாமி-தொண்டையைக் கனைத்துக்கொண்டான். "எவனே நமக்குள்தான் அபேஸ் பண்ணியிருக்கிறான். 'போலீசுக்குத் தகவல் கொடுத்து இரு-கான்ஸ்டபில்கள் சவுக்குடன் வந்தால்தான் திருடினவன் கலகலன்னு பணத்தைக் கக்கிவிடுவான்" என்றான் ரங்கசாமி. கந்தசாமி சிரித்தார். "உம்மை அசட்டு ரங்கசாமி என்று சொல்வது நூற்றுக்கு நூறு சரி தான்! போலீசுக்குக் கேஸ் போயாச்சு என்றால் அப்புறம் காட்டுத் தீ மாதிரி விஷயம் ஊர் முழுவதும் பரவிவிடாதா? அது தானே கூடாது. இதையெல்லாம் உத்தேசித்துத்தான் நம் டைரக்டர் ஒரு முடிவிற்கு வந்திருக்கிறார். அது பரம ரகசியமானது. அதை நிறைவேற்ற உம் உதவியும் தேவையாயிருக்கிறது. அதை மாத்திரம் செய்தீரோ நீர் டைரக்டரின் அந்தரங்கக் காரியதரிசி ஆவீர்." கந்தசாமி மறுபடியும் சுற்றிப் பார்த்துவிட்டு, ஒருவரும் தம் சம்பாஷணையைக் கவனிக்கவில்லை யென்று கண்டுகொண்டு, மனச் சாந்தி அடைந்தார்.



ரங்கசாமிக்குக் காஷியரின் பேச்சு பெரிய புதிர்போலிருந்தது. டைரக்டருக்காவது தான் உதவி செய்யவாவது என்று விழித்தான். அவன் துப்பறியும் நாவல்கள்கூட வாசிப்பதில்லை, இந்தக் கேஸில் துப்பறிந்து சொல்லவா என்றால்! அவனை மேலும் சிந்திக்கவிடாத படி முன்னைவிடத் தணிந்த குரலில் கந்தசாமி தொடர்ந்து பேசினார். "மிஸ்டர் ரங்கசாமி! கையாடப் பட்டிருக்கும் தொகை சற்று பெரிதாக இருந்தாலும், பாங்கின் கண்யத்தைக் கவனிக்கும்போது அது ஒரு அற்பத்தொகைதான். நிஜத் திருடன் யாரென்று தீவிரமாக விசாரித்துக் கண்டுபிடிப்பதற்கு முன் இந்த வதந்தி வெளியில் பரவி விடும். இந்தத் தொகையை டைரக்டரே கையிலிருந்து போட்டு பாங்கின் பெயரை காப்பாற்றத் தயாராக இருக்கிறார். ஆனால், இந்த விஷயம் நமது சிப்பந்திகளுக்குத் தெரியுமாதலாலும், அவர்களில் ஒவ்வொருவரும் தங்களைத் தவிர மற்றவர்களைச் சந்தேகப்படுவதாலும் இந்தக் குற்றத்தை யாராவது மேலாவது சுமத்தினாற்போல் காண்பித்து விஷயத்தை அமுக்க வேண்டும். அப்படிக் குற்றஞ்சாட்டப்படும் போலிக் குற்றவாளியைத் தற்காலிகமாக இரண்டு மாதங்கள் வேலையை விட்டு நீக்கி வைத்திருந்து மறுபடியும் சேர்த்துக் கொள்வார்கள். அப்பொழுது தானே சிப்பந்திகளுக்குள் ஒரு ஒழுங்கும் கட்டுப்பாடும் இருக்கும். நமக்குள் ஒரு ஆளை இதற்காகத் தேர்ந்தெடுத்து வைத்திருக்கிறார்."

ரங்கசாமி சிரித்தான். "எந்த அசடாவது இதற்கு ஒப்புக்கொள்வார்களா ஐயா? முதலில் இரண்டு மாத சம்பளம், இரண்டாவதாக வாழ்நாளெல்லாம் தீராத அபவாதமல்லவா ஏற்படும்! இந்த ஏற்பாட்டிற்கு ஒருவரும் சம்மதிக்கமாட்டார்கள்!" என்றான் அலக்ஷியமாக.

"உண்மைதான் ஐயா! தேர்ந்தெடுத்திருக்கிறார் டைரக்டர். நீர்தான் ஒப்புக்கொள்ளப்போகிறீர்" என்றார் கந்தசாமி வெகு நிதானத்துடன்.

அசட்டு ரங்கசாமி அதிர்ச்சி அடைந்துவிட்டான். அவன் அதிர்ச்சி அடங்கு முன்பே கந்தசாமி தொடர்ந்தார். "உம்மைத் தேர்ந்தெடுத்திராவிட்டால் இந்த ரகசியமெல்லாம் உம்மிடம் வந்து சொல்வேனா! இரண்டு மாதம் நீர் வேலையில்லாமல் இருந்தால் ஐம்பதும், ஐம்பதும் நூறு ரூபா தானே நஷ்டப்படுவீர். அந்த நஷ்டத்தை ஈடுபடுத்த உமக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கப்போகிறார். இதோ அந்த ஆயிரம் ரூபாய். அதோடு நிற்கப் போவதில்லை. எல்லோர் பார்வையும் உம்மீது இருக்கும்போது நிஜக் குற்றவாளியைக் கண்டுபிடித்து அம்பலத்திற்குக் கொண்டு வரப்போகிறார். அதைப் பற்றிய புலன்கள் கிடைக்க ஹேது இருக்கிறது. நிஜக் குற்றவாளி அகப்பட்டதும் உமமை அனுவசியமாகத் தொந்தரவிற்குள்ளாக்கியதற்காக பச்சாத்தாபப்படுவதுபோல் உமக்கு செக்ரடரி வேலை கொடுத்து உத்யோகத்தில் உயர்த்தப்படுவீர். இதெல்லாம் ஒரு நாடகம்போல்தான். நீர் நன்றாக நடிக்க வேண்டும். அதற்கு அட்வான்ஸாக இதோ ஆயிரம் முடிவான சன்மானம் உத்யோக உயர்வு" என்று சொல்லிக்கொண்டே புத்தப் புதிய நூறு ரூபாய் நோட்டுகளை மேஜை மீது வைத்தார் கந்தசாமி.

ரங்கசாமிக்கு சபலம் தட்டியது. ஆனால், மனம் சஞ்சலம் அடைந்தது. கந்தசாமியின் வார்த்தைகளை ஒவ்வொன்றாக மனப் பரிசோதனை சாலையில் ஆராய்ச்சி செய்தான். கந்தசாமி சொன்னதுபோல் அவன் ஓர் சிறிய நாடகம் ஆடவேண்டும். அவ்வளவுதான்! முதலில் கொஞ்சம் கெட்ட பெயர் வருவதாயிருந்தாலும், முடிவில் பெரிய உத்யோகம் வரும்போது அந்தப் பெயர் மறைந்துவிடும். மேலும் நிஜக் குற்றவாளி அகப்பட்டுவிடுவான். மாதா மாதம் அரை வயிற்றுக்குச் சாப்பிட்டு காலம் கடத்தும் நிலைமையில் ஆயிரம் ரூபாய் மொத்தமாகக் கிடைப்பது அதிருஷ்டம்தான். ரங்கசாமி ஒரு முடிவுக்கு வந்தான். இருந்தாலும் ஒரு கேள்வியைப் போட்டு கந்தசாமியை ஒரு விநாடி திகைக்க வைத்தான். "சரிதான், இதற்காக நான்தானா அகப்பட்டேன்! இன்னும் எவ்வளவோ குமாஸ்தாக்கள் இல்லையா?" என்றான். கந்தசாமி இந்தக் கேள்வியை எதிர்பார்க்கவில்லை. ஒரு விநாடி விழித்தார். மறு விநாடி சமாளித்துக்கொண்டார். "உம்மீதுதான் டைரக்டருக்கு நம்பிக்கை அதிகம். உமக்குத்தான் இந்த ரகசியத்தைக் காப்பாற்றும் சக்தி உண்டு. மேலும் உமக்குத்தான் அவர் பிரமோஷன் அளிக்க விரும்புகிறார். என்ன சொல்கிறீர்.—ஆயிரம் ரூபாயை அடையும் அதிர்ஷ்டத்தை விரும்புகிறீரா? வெறுக்கிறீரா? விரும்பினால் இந்தப் பேப்பரில் ஒரே ஒரு கையெழுத்தைப் போடும். 'நான்தான் குடும்ப சிரமத்தைத் தாங்காது இந்தத் தொகையைக் கையாடிவிட்டேன். பணத்தைத் திருப்பித் தந்துவிடுகிறேன். மன்னிக்க வேண்டும்' என்று இதில் எழுதப்பட்டிருக்கிறது...என்ன! சம்மதமா? இல்லையா?"...கந்தசாமி சற்று நிறுத்தினார்.

முன்னிருந்த நோட்டுகள் ரங்கசாமியின் மூளையைக் குழப்பின. அவன் கை அவனை அறியாமலேயே பையிலிருந்த பேனாவை நோக்கிச் சென்றது. அவன் சித்தம் ஓர் முடிவிற்கு வந்தது. கந்தசாமி காட்டிய இடத்தில் படித்துப் பார்க்காமலே கையெழுத்தைப் போட்டான். கோழிக் குஞ்சின்மேல் பாயும் பருந்துபோல் முன்னாலிருந்த பத்து நூறு ரூபாய் நோட்டுகளையும் அப்படியேவாரிக் கோட்டுப் பையில் போட்டுக் கொண்டு விடுவிடென்று வெளியே நோக்கி நடந்தான். ஆனந்த மிகுதியில் கந்தசாமியிடம் சொல்லிக் கொள்ளக்கூட இல்லை. கந்தசாமியின் முகத்தில் லேசாக புன்னகை படர்ந்தது அவர் விரித்த வலை நன்றாக வேலை செய்தது. அசட்டு ரங்கசாமி அவனை அறியாமலேயே அவருடைய சூழ்ச்சிக்குப் பலியானான்!

மறுநாள் காலையில் என்றுமில்லாத குறியுடன் ரங்கசாமி ஆபீஸிற்கு வந்தான். லேசாக ஒரு பாட்டை முணுமுணுத்துக் கொண்டே தன் ஆசனத்தில் போய் உட்கார்ந்தான். மற்றச் சிப்பந்திகள் கண்கள் எல்லாம் தன் மேலேயே இருப்பதாக அவனுக்குத் தோன்றிற்று கசுமுசுவென்று அவனைச் சுட்டிக்காட்டிப் பேசிக் கொள்வதுபோலகூட அவனுக்குத் தென்பட்டது. சிறிது நேரங் கழித்து டைரெக்டர் கூப்பிடுவதாக சேவகன் வந்தான். கந்தசாமி அவனைத் தொடர்ந்து உள்ளே சென்றான் டைரெகடர் கோபாலன் ரங்கசாமியை ஏற இறங்கப் பார்த்தார். மிஸ்டர் ரங்கசாமி! நீர் தானே இந்தக் காகிதத்தில் கையெழுத்துப் போட்டது? என்றார். "ஆமாம் சார்! நான்தான் போட்டேன். எல்லாம் தங்களுக்காகத்தான்" என்றான் ரங்கசாமி. "சரி. நீர் போகலாம்" என்று சொல்லி வேறு வேலையில்லீடுபட்டார் டைரக்டர். உத்தியோக பிரமோஷனைப்பற்றி டைரெக்டர் வாயிலிருந்து ஒன்றும் வரக் காணோமே? என்று நினைத்தான். இருந்தாலும், பொறுப்போம் என்று மனதைச் சமாதானப் படுத்திக்கொண்டு தன் இடத்திற்குச் சென்றான்.

சில மணி நேரங்களுக்குள் பாங்கு அல்லோலகல்லோலப் பட்டது. ஓரே அமளி ரங்கசாமி போலீசாரால் கைது செய்யப்பட்டான். பாங்கு மோசடி வெளியாகி விட்டது என்று எல்லோரும்பேசிக் கொண்டார்கள். அசடு, அசடு என்ற ரங்கசாமி அசகாய சூரனைப் போலல்லவா காரியம் செய்திருக்கிறான். கொஞ்சமாக அரை லக்ஷ ரூபாயல்லவா அபேஸாகி இருக்கிறது! என்று பிரமிப் படைந்தார்கள்.

போலீஸ் தலைகளைப் பார்த்தவுடன் ரங்கசாமிக்கு சொரேலென்றது. கந்தசாமி போலீஸ் பேச்சே கிடையாது என்று சொல்லியிருக்கும்போது அவர்கள் ஏன் வந்தார்கள் என்று நினைத்தான். ஆனால், நாடகத்தில் ஒரு பகுதி தனக்குத் தெரியாமல் ஏற்பாடாகியிருக்கிறதென்று பேசாமலிருந்தான். கடைசியில், கோர்ட்டில் நீதிபதி அவனுக்கு ஏழு வருஷம் கடுங்காவல் தண்டனையை மனமுவந்து அளித்துக் குற்றப் பத்திரிகை வாசித்தபோதுதான் கந்தசாமியின் படுமோசமான சூழ்ச்சிக்கு பலியானதை உணர்ந்தான்.

உண்மையில் பணத்தைக் கையாடியது கந்தசாமிதான். வதந்திகள் ஜாஸ்தியாகவும், இதை யார் தலையிலாவது கட்டி வதந்திகளுக்கு முடிவேற்படுத்த எண்ணினார். அதற்காக அசட்டு ரங்கசாமியைத் தேர்ந்தெடுத்து, அவனை வஞ்சக வார்த்தைகளால் சித்தம் தடுமாறச் செய்தார். ஆயிரம் ரூபாய் நோட்டுகளைக் கொடுத்து ஆசை காண்பித்தார். பாங்கிலிருந்து அமுக்கப்பட்ட அதே நோட்டுகள், பின்னால் ரங்கசாமிக்கு விரோதமாக சாக்ஷியம் கூறின. ரங்கசாமியிடம் வாக்குமூலம் வாங்கிக்கொடுத்ததுபற்றி கந்தசாமிக்கு கியாதி வேறு ஏற்பட்டது. அவருக்கு உத்யோக பிரமோஷன் கிடைத்தது.

கந்தசாமி எவ்வாறு தன்னிடம் பேசினார் என்று எவ்வளவோ பலமாக ரங்கசாமி கத்தியும், அவைகளெல்லாம் ஒருவர் காதிலும் ஏறவில்லை. குற்றவாளி தன்னைக் காப்பாற்றிக்கொள்ள என்ன வேண்டுமானாலும் சொல்லலாமல்லவா? அசட்டு ரங்கசாமி கம்பிகளுக்குப் பின்னால் அடைக்கப்பட்டான்.

காலசக்கரம் ஓடிக்கொண்டிருந்தது. குபேரா பாங்கில் ஓர் சிப்பந்திக்குக் கிடைக்கக்கூடிய உயர்ந்த உத்தியோகத்தை வகித்த கந்தசாமி கண்யமான பெயருடனேயே உத்யோகத்தை விட்டு விலகினார். நிம்மதியாக வாழ்நாளைக் கழிக்கும் பொருட்டு ஒரு பங்களாவைக் கட்டிக்கொண்டார். பூஜை, புனஸ்காரங்களில் ஈடுபட்டு விபூதி ருத்ராக்ஷ தாரியாக சிவப் பழம் போல் காட்சியளித்தார். அந்த ஊருக்குப் புதிதாக வரும் பெரிய மனிதரோ, மடாதிபதியோ, சங்கராச்சாரியாரோ, சன்யாசியோ அவர் விருந்தாளியாகத்தான் தங்குவார்கள். அவர் தெய்வ பக்தியும் ஆசார அனுஷ்டானங்களும் எத்திசையும் பரவி நின்றன பொது ஜனங்களுக்கு முன்னால் தான் இவ்வாறு பெரிய மனிதனாக விளங்குவதற்காகத் தன் சதிக்கு பலியான கந்தசாமியைப்பற்றியோ வற்றுத கிணறுபோல் அவர் மோசடிக்கு இடம் கொடுத்துக்கொண்டிருந்த குபேரா பாங்கின் இரும்புப் பெட்டியைப்பற்றியோ அவர் சிந்திப்பதே கிடையாது. அவர் வீணவெல்லாம் அடியார்களை வரவேற்று உபசரித்து, அதனால் அடையும் பெருமையில்தான் லயித்திருந்தது.

"ஹிமாலய மலை உச்சியில், பதினைந்து வருஷம் அன்ன ஆகாரமின்றி, யோக நித்திரையில் ஆழ்ந்திருந்தேன். அங்கு அறிந்த சில மூலிகைகளின் மந்திர சக்தியை உமக்குச் சொல்லலாமென்று நினைத்து வந்திருக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டு ஜடாதாரியான ஒரு ஹிமாலய சித்தரும், அவர் சிஷ்யர்கள் இரண்டு பேர்களும் கந்தசாமியின் பங்களாவிற்கு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் சக்தி அயலூர்களிலெல்லாம் பரவ ஆரம்பித்தது. அவரிடம் வன மூலிகைகளைப்பற்றித் தெரிந்து கொள்ள ஆயிரக்கணக்கில் ஜனங்கள் வந்தனர். கந்தசாமி தன் பங்களாவில் முக்கால் பாகத்தை சித்தருக்காக ஒழித்து வைத்திருந்தார். சித்தர் குறிப்பிட்ட ஒரு மணி நேரத்திற்கு மாத்திரம் ஜனங்களுக்குக் காட்சியளித்து, வைத்திய விஷயமாய் மூலிகைகள் கொடுத்துவிட்டு, மற்ற நேரங்களில் தன் சிஷ்யர்களுடன் தன் அந்தரங்க அறையில் உட்கார்ந்து கதவை மூடிக்கொண்டு விடுவார். அப்புறம் கந்தசாமிகூட உள்ளே போக முடியாது. சாப்பாட்டு வேளைக்கு சிஷ்யர் ஒருவர் வந்து ஆகாரங்களை எடுத்துப் போவார். செம்பைப் பொன்னுக்கும் ரசவாத ஆராய்ச்சி நடந்துகொண்டிருப்பதாகவும், அதைக் கந்தசாமிக்குச் சொல்லிக் கொடுப்பதாகவும் சித்தர் சொல்லியிருந்ததால், கந்தசாமி சித்தர் செய்கைக்கு ஒன்றும் மறுப்புக் கூறவில்லை.

ஒவ்வொரு நாளும் சித்தரைக் காண வரும் கூட்டம் அதிகரித்தது. பிரபல அதிகாரிகள், உத்யோகஸ்தர்கள் எல்லோரும் வந்தார்கள். ஸ்தல போலீஸ் அதிகாரியும் வந்தார். அவருக்கு மூலிகை சக்தியில் அபார நம்பிக்கை விழுந்தது. தினசரி அவர் வந்து சித்தருக்கு வெகு அருகில் உட்கார்ந்து, அவர் பிரசங்கத்தைக் கேட்டுவிட்டுப் போவார். சித்தர் முகம் அவருக்கு முன்பு எங்கேயோ பார்த்ததுபோல் தென்பட்டது. ஆனால், நிச்சயமாய்த் தெரியவில்லை. மனதைக் குழப்பிக்கொண்டார். கடைசியில் அவருக்கு ஞாபகம் வந்துவிட்டது. ஆனந்தத்தால் துள்ளிக்குதித்தார். பாதி பிரசங்கத்திலேயே எழுந்து போய் விட்டார். அவர் போய் சிறிது நேரத்திற்கெல்லாம் சித்தரும் தன் பிரசங்கத்தை முடித்துக் கொண்டு உள்ளே எழுந்து சென்றார். அவர் முகத்திலும் அவர் சிஷ்யர்கள் முகத்திலும் பரபரப்பு தட்டுப்பட்டது. நல்ல வேளையாக அதை ஒருவரும் கவனிக்கவில்லை. தங்கள் அறைக்குள்போய் கதவை சாத்திக்கொண்டார்கள்.

இரண்டு மணி நேரங்களுக்குப் பிறகு போலீஸ் அதிகாரி சுமார் பத்து போலீஸ்காரர்களுடன் கந்தசாமி வீட்டிற்கு வந்து சேர்ந்தார். "மிஸ்டர் கந்தசாமி! உங்கள் வீடு பூராவும் சோதனை போடப்போகிறோம். அதற்கு இதோ அனுமதி இருக்கிறது. எல்லா அறை சாவிகளையும் இப்படிக்கொடுத்துவிட்டு சற்று விலகி நில்லுங்கள்" என்று அவர்சொன்னதும், கந்தசாமிக்குத்

தூக்கிவாரிப்போட்டு. ஒரு வினாடியில் அவர் மனக்குரங்கு அவரை அவர் குபேரா பாங்கில் கொள்ளையடித்த நாட்களுக்கு இழுத்துச் சென்றது. ஒரு வேளை அந்த மோசடி சம்பந்தமாகத்தான் இப்போது வந்திருக்கிறார்களோ என்று நினைத்தார். ஆனால், அதன் புலன்கள் எல்லாவற்றையும்தான் அவர் அழித்து விட்டிருந்தாரே! மேலும், பலிபீடத்திற்கு ரங்கசாமி போய்விட்டானே! மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு "இதில் ஏதோ தவறு நடந்திருக்கிறது. பின்னால் வருத்தப்படப்போகிறீர்கள். நீங்கள் எங்கேயும் சோதனை போட்டுக்கொள்ளலாம். ஆனால், அந்த ஹிமாலய சித்தரைப் போய் தொந்தரவு செய்து அவர் கோபத்திற்கு உள்ளாகாதீர்கள். அவர் பெரிய மகான். என் அதிதிக்கு அவமரியாதை செய்தால் நான் அதைப் பொறுக்கமுடியாது" என்றார் கந்தாமி. போலீஸ் அதிகாரி முகத்தில் ஓர் ஏளனப் புன்னகை அரும்பியது. "அந்த மகானை எங்களுக்கு ஏற்கனவேயே தெரியும். அவர் எங்களுக்குத் தொந்தரவு கொடுக்காமலிருந்தால் சரி" என்று சொல்லி, கந்தசாமியிடமிருந்து எல்லா சாவிகளையும் வாங்கிக்கொண்டு முதலில் ஹிமாலய சித்தர் அறையை நோக்கிச் சென்றார். அறைக் கதவு சாத்தியிருந்தது. 'சரி, எல்லோரும் உள்ளே'தான் இருக்கிறார்கள், வசமாய் சிக்கிக்கொண்டார்கள் என்று நினைத்து, பூரிப்படைந்து, கதவைத் தட்டுவதற்காக கதவின்மேல் கையை வைத்தார். அவர் முற்றிலும் எதிர்பாராத விதமாகக் கதவு திறந்தது. உள்ளே ஒருவரும் இல்லை! போலீஸ் அதிகாரிக்குச் சொரேலென்றது. அறையின் நடுவில் எல்லோர் கவனத்தையும் கவரும்வண்ணம் ஒரு கடிதம் வைக்கப்பட்டு, அது பறந்து போகாமல் அதன்மேல் ஒரு கல்லும் வைக்கப்பட்டிருந்தது. அறையின் மூலையில் சில காஷாயத் துணிகளும், பொய் தாடி மீசை சுருள்களும் கிடந்தன. இன்னொரு மூலையில் கள்ள நோட்டுச் செய்யும் இயந்திரங்கள், நோட்டுக் காகிதங்கள், முற்றுப் பெருத நோட்டுக்களும் கிடந்தன. கந்தசாமிக்கு ஒன்றும் புரியவில்லை. திறு திறுவென்று முழித்தார். போலீஸ் அதிகாரி ஆவலுடன் அக்கடிதத்தை எடுத்துப் படித்துப் பார்க்க ஆரம்பித்தார்.



கனம் போலீஸ் இன்ஸ்பெக்டர் அவர்களுக்கு! இரண்டு மூன்று நாட்களாக நீங்கள் என்னைக் கவனித்து வந்ததை அறிந்து கொண்டேன். இன்று தங்கள் முகபாவத்திலிருந்து என்னை அடையாளம் கண்டுகொண்டீர்களென்பதையும் தெரிந்துகொண்டேன். இனிமேல் எந்த வினாடியிலும் நீங்கள் கள்ள நோட்டுப் புள்ளியாகிய என் மேல் படையெடுக்கலாமல்லவா? தங்களை நான் முந்திக்கொண்டேன். இனிமேல் என்னையும் என் சகாக்களையும் நீங்கள் கண்டுகொள்ள முடியாது. எங்கள் மாறு வேஷம் எங்களுக்கே ஆச்சரியம் அளித்தது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!

இந்த வீட்டுக்காரர் கந்தசாமிக்கு நாங்கள் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம். எங்கள் தயாரிப்பிற்கு வேண்டிய வசதி அளித்தார். அதற்காக நான் அளித்த ஒரு கத்தை நோட்டுகளை அவர் கைப் பெட்டியிலேயே நீங்கள் பார்க்கலாம். அவருடைய உற்சாகமில்லாவிட்டால் நாங்கள் இத்தனை நாள் இங்கு இருக்க முடியாது. தங்கள் சிரமத்திற்காக நான் வருந்துகிறேன். என்னைத் தேடி நீங்கள் அவசியம் ஏமாற்றமடைவீர்கள் என்று எனக்குத் தெரியும்.

இப்படிக்கு,


கள்ள நோட்டுப் புலி,

கணபதி.

இன்ஸ்பெக்டரின் கண்சமிக்ஞையைக் கவனித்த கான்ஸ்டபிள் ஒருவன் கந்தசாமியின் கையில் கணப்பொழுதில் விலங்கை மாட்டினார். கந்தசாமி அலறினார். ஐயோ! எனக்கு ஒன்றுந் தெரியாதே! அந்தப் படுபாவியை நான் மகானென்றல்லவா நினைத்துக்கொண்டு மோசம் போனேன். என்னை விட்டுவிடுங்கள் என்று கத்தினார். அவர் பெட்டியில் கடிதத்தில் கண்டபடி ஒரு 'கட்டு நோட்டு இருந்தது. நிஜமாகக் கந்தசாமிக்கு இந்த விஷயம் ஒன்றும் தெரியாது. ஆனால், அவருக்குவந்தனம் செலுத்தும் எண்ணத்துடன் எழுதப்பட்ட கணபதியின் கடிதமும், அவருக்குத் தெரியாமல் கணபதியால் கைப்பெட்டியில் வைக்கப்பட்ட நோட்டுக் கத்தையும் அவருக்கு விரோதமாக அசைக்க முடியாத சாக்ஷியமாக அமைந்தது. அவர் வார்த்தையை ஒருவரும் நம்பவில்லை. கடைசியில், கள்ள நோட்டுத் தயாரிப்பில் பங்கெடுத்துக்கொண்ட குற்றத்திற்காக, அவருக்கு ஏழு வருஷம் கடினகாவல் தண்டனை அளிக்கப்பட்டது. பங்களா வாசத்திலிருந்த கந்தசாமி பாராக்காரர்கள் சூழ காராக்கிரக வாசத்திற்குப் போய்ச் சேர்ந்தார்.

"ஏழு வருஷக் கைதிகளுக்கென்றே இந்த அறை கட்டப்பட்டது போலிருக்கிறது" என்றான் ஜெயில்காரன் ஒருவன். உள்ளே சோகமே உருவானதுபோல் உட்கார்ந்திருந்த கந்தசாமியின் காதில் இந்த வார்த்தைகள் விழுந்தன. கம்பிக்கதவுக்கருகில் வந்து, "எனக்கு முன்னால்யாரப்பா இங்கு






அன்புள்ள அம்மாவுக்கு அலமு அநேக தண்டம் ஸமர்ப்பித்த விஞ்ஞாபனம்.

'ஸீதா கல்யாணத்திற்கு' நான் வரமுடியாமற் போய் விட்டதற்கான காரணங்கள் காட்டி எழுதியுள்ள முன் கடிதத்தைக் கண்டு அப்பா மனது திருப்தியடைந்ததாக எழுதியிருப்பதைக் காண ரொம்பவும் சந்தோஷம். ரேஷன் திட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ள சில ரகத் துணிகளை வாங்கி அனுப்பும்படி அப்பா எழுதியிருக்கிறார். கிருத யுகம், துவாபரயுகங்களில் வசிப்பதாக நினைத்துவிட்டாரோ என்னவோ? கலி முற்றிக் கடைசி கட்டத்தை நெருங்கிக்கொண்டிருக்கிற ஞாபகமே இல்லை போலிருக்கிறது. கன்டிரோல் எடுபட்டது என்று தெரிவதற்கு முன்னாலேயேதான் குறிப்பிட்ட சரக்குகள் மாயமாய் மறைந்துவிடுகின்றனவே. அவை எங்குதான் பதுக்கப்படுமோ யார் எப்படித்தான் வாங்குவார்களோ? பத்திரிகையைப்பார்த்துவிட்டு நமது வேலையெல்லாம் ஒழித்துக் கொண்டு நாம் போய்க்கேட்டால் 'நாஸ்தி' சப்தம் தவிர நம் காதுகளில் வேறு என்ன விழும் என்று நினைக்கிறாய்! இவ்வளவு நாழிகைக்கு எல்லாம் 'பிளாக் மார்க்கெட்' போய்ச் சேர்ந்திருக்கும். போவது வீண்தான் என்று தெரிந்திருந்தபோதிலும் ஒரு கடைக்கு நாலு கடையாக ஏறி இறங்காவிட்டால் மனது கேட்கமாட்டேனென்கிறது! 'பிளாக் மார்க்கெட், பிளாக் மார்க்கெட்' என்று சொல்கிறார்களே, அங்கேயும்தான் கொஞ்சம் போய் விசாரித்துப் பார்த்து விடுவோமே என்று பார்த்தால், அந்த மார்க்கெட் இருக்குமிடம் நமக்குத் தெரிந்தால்தானே. ஒரே இருள் மயமான இடத்தில் இருக்கும் போலிருக்கிறது அல்லது இந்தச் சாதாரண பார்வைக்குத் தெரியாமல் அதற்கென யாராவது டாக்டர்கள் ஏற்பட்டிருந்து அவர்களிடம் ஏதாவது மூக்குக்கண்ணாடி வாங்கிப் போட்டுக்கொண்டு பார்த்தால்தான் தெரியுமோ என்னவோ! யார் கண்டு வைத்தார்கள். இதெல்லாம் நமக்கு என்ன தெரிகிறது! ஆகவே அப்பாவிடம், 'பத்திரிகையில் பிரசுரமாகியுள்ள விஷயங்களைப்

—இதன் தொடர்ச்சி அடுத்த பக்கம்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

இருந்தார்கள்" என்றார். "யாரோ ஒருவன் குபேராபாங்கில் கொள்ளையடித்தவனாம். அவன் பேருகூட ரங்கசாமின்னு சொன்னாங்க. எப்போ பார்த்தாலும் 'நான் திருடவில்லை நான் திருடவில்லை' யென்று புலம்பிக்கொண்டே இருப்பான். எந்தத்திருடன்தான் நான் திருடன் என்று சொல்லிக்கொள்வான்" என்றான் ஜெயில் காவல்காரன்.

கந்தசாமிக்குத் தலை சுற்றியது. ஆயிரம் ரங்கசாமிகள் தன்னைச் சுற்றி நின்று ஏளனம் பண்ணுவதுபோல் உணர்ச்சி ஏற்பட்டது. அவர் மனம் பேட்டது. "ரங்கசாமியை உன் சூழ்ச்சிக்கு பலி கொடுத்தாயே, இப்போது நீயே பலியாகிவிட்டாயல்லவா! இப்போது உன் விதியே ஹிமாலய சித்தனாக வந்து உன்மீது பழிக்குப் பழி வாங்கிவிட்டது அல்லவா! உன் உள்ளத்தைப் புண்படுத்தத்தான் உன்னை ரங்கசாமி இருந்த இடத்திலேயே கொண்டு வைத்திருக்கிறார்கள்! தெரியுமா?' என்றது. ரங்கசாமியின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்க வேண்டும்போலிருந்தது அவருக்கு. அந்த வினாடியில் அவர் எதிரே ரங்கசாமி நிற்பதுபோன்ற பிரமை வேறு இருந்தது. திடீரென்று கீழே விழுந்தார். மறுபடியும் அவருக்குப் பிரக்ஞை திரும்பவேயில்லை. அவர் அதிர்ஷ்டம் அவர் தண்டனையை அனுபவிக்காமல் செய்துவிட்டது அவர் பச்சாத்தாபம், கடைசியில் அவரைப் புனிதப் படுத்திவிட்டது. ஆனால், அவர் விதி, ரங்கசாமியின் சார்பாக அவர்மீது பழி தீர்த்துக்கொண்டது.

பார்த்துவிட்டு எதையாவது எழுதிக்கொண்டிருக்க வேண்டாம், அதெல்லாம் நமக்கில்லை. அதற்கென்று ஒரு கோஷ்டி இருக்கிறது' என்று சொல்லிவிடு.

அப்பாவுக்கு எப்படியாவது சமாதானம் சொல்லிவிடலாம். ஒருவாரமாக இங்கே அத்தைப் பாட்டி வந்து உட்கார்ந்து கொண்டு தனக்கு சேலைக்கு (வெள்ளைப்புடவைக்காரி-மாஜி சுமங்கலி) ஒரு பீஸ் மல் வாங்கிக் கொடுத்தால்தான் ஆயிற்று என்று நச்சரித்துக் கொண்டிருக்கிருள். இரண்டு வாரத்துக்கு முன்பு வந்திருந்தால் கூட எப்படியாவது சமாளித்திருக்கலாம். இப்பொழுது தான் சர்க்கார் அதிசயமான உத்திரவு ஒன்று போட்டிருக்கிருர்களாம். அதாவது ஒருவர் தன்னுடைய வருஷாந்திர ரேஷனில் நாலில் ஒரு பாகத்தை முதல் மூன்றுமாதத்துக்குள் வாங்கி விட வேண்டும். இல்லாவிட்டால் அந்தப் பகுதி ரேஷனை அதோடு இழந்துவிட வேண்டியது தானும். எங்களுக்கு வருஷத்துக்கு இருபது கெஜம் உண்டு. இந்தப் புதிய உத்திரவுப்படி ஐந்து கெஜன் தான் வாங்கலாம்.

அத்தைப் பாட்டிக்கு ஒரு சேலைக்குக் குறைந்தது ஒன்பது கெஜம் வேண்டும். என்ன செய்வதென்று தெரியவில்லை. ஒரு புருஷன், மனைவி, இரண்டு பேருள்ள குடும்பமாக இருந்தால் வருஷத்துக்குப் பத்து கெஜம் உண்டு. அதில் கால் பாகம் இரண்டரை கெஜத்தை வாங்கி என்ன செய்வது! என்னமோ எல்லாம் விசித்திரமாகத்தான் இருக்கிறது.

ஆனல் இதையும் கண்டு சந்தோஷப்படுகிற ஆத்மாக்கள் சிலதுகள் இருக்கத்தான் செய்கிறது. மன்னியின் சின்ன அண்ணுவினுடைய அகமுடையாளைப்பற்றி முன் ஒரு கடிதத்தில் எழுதியிருந்தேனே ஞாபகத்துக்கு வருகிறதா? தலை கவிழ்ந்து போகிற நாகரிகம்! வாசலில் பெருமாள் புறப்பாடு ஆனபோது குடுகுடுவென்று உள்ளே ஓடிப்போய் ஒரு புஸ்தகத்தைக் கையிலெடுத்துக் கொண்டு வந்து ஒரு கையில் புஸ்தகத்துடன் பெருமாளைச் சேவித்தாள் என்று எழுதியிருந்தேனே, அந்த ராங்கிக்காரிதான் நேற்று இங்கே வந்திருந்தாள். இந்தத் துணி ரேஷன் புதிய உத்திரவைப் பற்றிய பேச்சு வந்தது. 'இதை யார் எதிர்த்தாலும், எதிர்க்காவிட்டாலும்எங்களைப்போன்றவர்களைப்பற்றிய வரையில் இதில் சந்தோஷந்தான்' என்ருள். 'ஏன்? இதற்கு அவ்வளவு வரவேற்பு?' என்ருள் மன்னி. உங்கள் அண்ணுவைப் பற்றிச் சொல்கிறேனே யென்று உங்களுக்கு வருத்தமாக இருக்கலாம். மொத்தம் வருஷத்துக்கு எங்களுக்குப் பத்து கெஜம் துணிதான் உண்டு. மொத்தமாக வாங்கிவிடலாமென்ருல் உங்கள் அண்ணு நான்கு நான்கு கெஜத்தில் இரண்டு வேஷ்டிகளும் மிகுதிக்கு ஒரு டவலும் வாங்கிவிடுவார். இப்பொழுது அப்படி முடியாது பாருங்கள். நேற்றுதான் கடைக்குப் போயிருந்தேன். அழகான வாயில்கள் இருந்தன. இரண்டரை கெஜம் வாங்கினேன். நான்கு ஜாக்கெட்டுகள் தைத்தேன். அதில் ஒன்றுதான் இது என்று அது போட்டுக்கொண்டிருந்த ஜாக்கெட்டைக்காண்பித்தது. நீயாக இருந்தால் 'இதென்ன 'குடுகுடுபாண்டி' வேஷம்' என்று உடனே கேட்டிருப்பாய். கைகள் வரை வேறு துணி. கழுத்துக்கு வேறு துணி. உடலுக்கு வேறு துணி. இதில் எத்தனையோ விசித்திரமான பூக்கள், கோடுகள், அசல் புலிவேஷந்தான் போயேன். இதையேதான் குடுகுடுப்பைக்காரனும் அணிந்துகொண்டு வருகிருன். ஆனல் அவனைப் பரிகாசம் செய்கிறோம். இதை நாகரிகம் என்ற பெயரில் போற்றிப் புகழ்



"......ஏன் இதற்கு அவ்வளவு வரவேற்பு என்ருள் மன்னி......"




கிறோம். என்னமோ உலகத்தினுடைய போக்கைப் புரிந்துகொள்ளவே முடியவில்லை. புடவைகள் உடுத்துவதில் மாத்திரம் என்ன வாழ்ந்ததென்று நினைக்கிருய்? பார்டரில் இரண்டு, மூன்று ஓட்டுகள். தலைப்பில் இரண்டு ஓட்டு, உடலில் நாலைந்து ஓட்டுகள். மொத்தத்தில் மங்கலும், பிரகாசமும், சின்னதும் பெரியதுமான பட்டை பட்டையாய்க் கோடுகளும், பூக்களும், அந்தக் கண்ராவியை இந்தக் கண்களால் பார்த்துச் சகிக்க முடியவில்லை. ஒருவேளை அதற்கென்று ஏற்பட்டுள்ள நாகரிகக் கண்களால் பார்த்தால் நன்ருக இருக்குமோ என்னவோ என்று சொல்கிருள் மன்னி. அதெப்படியாவது போகட்டும். நமக்கெதற்கு இந்த வீண் வம்பெல்லாம் அப்பாவிடம் சொல்லு, 'அவர் கேட்டுள்ள துணி வகையராக்கள் இப்போது கிடைக்கவில்லை. வாஸுவுடன் சொல்லி எங்காவது பார்த்து வாங்கி அனுப்பச் சொல்கிறேன்' என்று.

ஹைதராபாத்திலிருந்து பெரியப்பா, அவருடைய குடும்பத்தோடு அங்கு வந்துவிட்டதாய்க் கேள்விப்பட்டேன். இங்கே கணக்கு வாத்தியார் தம்பிகூட ஹைதராபாத்திலிருந்து குடும்பத்துடன் வந்துவிட்டாராம். என்னென்னவோ தலைக்கு ஒரு விதமாய்ச் சொல்கிருர்கள். ஆனல் வாரங்கல் கலவரத்துக்குப் பிறகு நிலைமை கொஞ்சம் பீதியை அளிக்கும் ரீதியில்தான் இருக்கும் போல் தோன்றுகிறது. பெஜவாடாவுக்கு ஆயிரத்துக்கு மேற்பட்ட அகதிகள் வந்துவிட்டதாய்ப் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்திருக்கிறது. மனிதனை மனிதன் தெருவில் அடித்துக் கொல்லும்படியான எவ்வளவு கேவலமான நிலைமைக்கு உலகம் வந்துவிட்டது பார்த்தாயா? போகிற போக்கைப்பார்த்தால் இந்தக் கொள்ளிவைப்பதும், சூறையாடுவதும், கொலைசெய்வதும் சீக்கிரத்தில் ஓயுமென்றே தோன்றவில்லையே. எத்தனை நிரபராதிகள் அனியாயமாய்க் கொல்லப்படுகிருர்கள்! எவ்வளவு பொருள் நஷ்டம்! மிருகத்துக்கும் மனிதனுக்கும் வித்தியாசமே காணப்படவில்லையே! சே! சே! ரொம்ப மோசம். சர்க்கார் என்றும் ஒன்று நடந்து கொண்டிருக்கிறது. சே! சே! ரொம்ப மோசம்!

பெரியப்பாவைப் பற்றிய பிரஸ்தாபம் வரவே ஞாபகம் வருகிறது. பெரியப்பாவினுடைய அகத்தில் ராமாயண புஸ்தகம் இருக்கிறது. அது தாதா இருந்தபோது வாசித்த புஸ்தகம். அதற்கப்புறம் அதைக் கண்ணெடுத்துப் பார்த்தவர்கள் கிடையாது. பெட்டியில் கறையான் அரித்துக் கொண்டிருக்கிறது. இங்கே சிரோமணி ராமாயணம் வாசிக்கிறதென்று முன்னமேயே எழுதியிருக்கிறேனே. அதற்குப் புஸ்தகம் வேண்டுமாம். ஆகையால் அதை உடனே வாங்கி அனுப்பவும். நல்ல சுத்தமான பதிப்பென்று கேள்வி. அதற்காவது உபயோகமாக இருக்கட்டும்.

விமலாவைப்பற்றி உனக்கு அவசியமான சில விஷயங்கள் எழுதவேண்டுமென்றிருந்தேன். இந்திரா சினிமாவுக்குப் போகவேண்டுமென்று சொன்னுள். ஆகையால் இந்திரா, மன்னி, நான், இவர், வாஸு, சௌந்தரம் எல்லாரும் சினிமாவுக்குப் போகப்போகிறோம். நேரமாய் விட்டதென்று கூப்பிட அதோ இந்திரா வருகிருள். ஆகவே விமலாவைப் பற்றி அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன். இப்படிக்கு,

உன் அன்... அலமு.



50 பிரயாணிகளை சுமந்துகொண்டு புறப்பட்ட அமெரிக்க விமானத்தின் எஞ்சிய பகுதிதான் படத்தில் காணப்படுவது. லீஸ்பர்க் அருகே இப்பிரம்மாண்ட விமானம் மலைமீது மோதியதில் அதிலிருந்த 50 பிரயாணிகளும் உடனே பலியாயினர். நிவாரண கோஷ்டி வாலின் ஒரு பகுதியையே கண்டெடுத்தது.



# சிற்பியின் மகள்

வே. சேஷகிரி

☆

அவள் பிறவியிலேயே சித்திரக்காரியாகத்தான் பிறந்தவள் போலும்! நிகரற்ற சைத்திரிகை அவள். எழுத வேண்டுமென்ற அவா அவள் உள்ளத்திலே சிறு வயது முதற்கொண்டே வளர்ந்து வந்தது. அவள் ஜீவ வேட்கை ஓவியத்தின் லட்சியத்திலேயே ஒன்றியிருந்தது. வானத்தில் மிளிரும் நட்சத்திரங்களை தன் சித்திரங்களில் அடக்கிவிட அவள் ஆசைப்பட்டாள். சூரிய சந்திரரின் ஜோதிகள் தன் ஓவியத்தில் படிந்துவிட அவள் விரும்பினாள். அவள் கலைக் கனவுகள் ஒவ்வொன்றும் அதியற்புதமாக உருவாகிக்கொண்டிருந்தது அவள் உயிரோவியத்தில். சித்திரக்கலைக்காகவே பிறந்தவளான அவள், கலைக்காக வாழ்ந்து கொண்டிருந்தாள்.

அவள் பெயரைக்கூடச் சொல்லாமல் சித்திரக்காரி என்று கூறினால்கூட பாடலிபுரத்து நகர மக்களுக்கு நன்றாகத்தெரியும். மௌரிய சாம்ராஜ்யத்தின் எல்லைக் கோட்டைக் கூடத்தாண்டிச் சென்றது அவள் புகழ். புகழ் அதிகமாக இருந்தாலும்கூட அவள் இதயத்தின் ஓட்டம் அடங்கிவிடுவதாக இல்லை. அவள் வரையும் சித்திரம் ஒவ்வொன்றிலும் தேவ அழகைக் காணமுடிந்தால் கூட அவள் மனக் கற்பனைகள் அடங்கிவிடுவதாக இல்லை.

அருணோதயத்தின் அழகையும், சூர்யாஸ்தமனத்தின் சௌந்தரியத்தையும் நன்றாகக் காணக்கூடிய தனிமையான இடத்தில் அவள் வசித்து வந்தாள். அவளும், அவள் கிழத் தந்தையும்தான் அங்கு வசித்து வந்தார்கள். தனிமையில் இருந்த அந்த வீடு அந்த நகரத்துக்கேப் பொருந்தாத ஏழைக்கட்டிடமாக இருந்தது. பாடலிபுரத்து நகர ஜனங்களின் மாடமாளிக்கு அந்த வீடு திருஷ்டி கழித்ததுபோல் இருந்தது. அதற்காகத்தான் அது அந்த நகரத்தின் ஒதுக்குப்புறத்தில் அமைந்திருந்ததுவோ என்னவோ? அந்த வீட்டில் வசித்து வந்த அவள் தந்தை ஒரு சிற்பி. ஜீவகலைகளுக்குப் புத்துயிரளிக்கும் பூலோக பிரும்மாக்களில் அவன் ஒருவன் பாடலிபுரத்து நகரத்தில் உருவாகிக்கொண்டிருக்கும் ஒரு ஜைனக் கோயிலைத் தன் உளியால் அவன் செதுக்கிக்கொண்டிருந்தான். தன் நடுங்கும் கைகளால் அவன் செய்து வரும் சிற்பத் தொழில் தான் அவர்கள் ஜீவனம் செய்ய உதவியாக இருந்தது.

அவன் மகளான அந்தச் சித்திரக்காரிதான் அந்த வீட்டில் லக்ஷ்மியைப்போலத் துலங்கிக் கொண்டிருந்தாள். அவள் மெல்லிய உடலில் எழில் சுடர் விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருந்தது. வஸந்த காலத்தில் மலர்ந்திருந்த புஷ்பத்தைப் போல அவள் காட்சியளித்தாள். ஏன்......அவ்வளவு தூரம் சொல்வானேன்......அவள் பெயரே வஸந்திகா தானே!

தன் தந்தையின் முயற்சியால் தான் இன்று அவள் புகழ்பெற்ற சித்திரக்காரியாக மாறினாள். அந்தக்கலை அவள் அழகான கைகளால் அவள் யௌவனத்தைப் போலவே நன்றாக வளர்ச்சி பெற்றது. அவள் தன் மெல்லிய கைகளால் தீட்டும் எழில் நிறைந்த ஜீவன் சொட்டும் சித்திரங்களைப் பாடலிபுரத்துப் பிரபுக்கள் தான் வாங்கிக் கொள்வார்கள். கலையை விலைகூறி அவள் விற்கவில்லை. அவர்களின் ஏழ்மைத்தனம் தான், அவ்வாறு செய்யத் தூண்டியது. அந்த ஏழைக் கிழவன் தன் மகள் தீட்டி வைக்கும் சித்திரங்களை விற்று வருவான். நல்ல விலைக்கு அவைகள் விலை போகும். அந்த இரு ஆத்மாக்களின் ஜீவனத்திற்கு அவைகளே போதுமானதாயிருந்தன. அமைதியாக அவர்களின் வாழ்வு சென்றுகொண்டிருந்தது. கலா தேவிதான் அதற்கு உதவி புரிந்தாள்.

ஆனால் இவ்வாறே நாட்கள் சென்று கொண்டிருந்தால் பூலோகம் சுவர்க்கமாக மாறிவிடாதா? அவர்களின் மனோராஜ்யம் நீடித்து நிற்கவில்லை. சில நாட்கள் அந்தக் கிழச்சிற்பி வியாதியால் கஷ்டப்பட்டான். காலதேவனின் அருள் பரிபூரணமாகக் கிடைத்தது அவனுக்கு. முன்புபோல சித்திரம் விற்று வரையவும், சிற்ப வேலைக்கு செல்லவும் அவனுக்கு இயலவில்லை.

இப்பொழுது வஸந்திகா தான் தன் சித்திரங்களை விற்றுவர வேண்டியிருந்தது. நகருக்குள் செல்ல வெகு நேரம் ஆகும். தகிக்கும் வெயிலில் அவள் நடந்து வர வேண்டியிருந்தது. அந்த நேரத்தில் தான் அவள் தந்தை வியாதியின் துன்பத்தை மறந்து தூங்கிக் கொண்டிருப்பான். தகப்பனின் மேலுள்ள அன்பு அவளை எரிக்கும் வெயிலில் கூட நடக்க வைத்தது. அந்தச் சந்தர்ப்பம் தான் பாடலிபுரத்து நகருக்கு அந்தக் கலா தேவியை அறிமுகம் செய்து வைத்தது, சிறிது நாளில் அவள் மௌரிய சாம்ராஜ்யத்திற்கே நன்றாக அறிமுகமாகி விட்டாள்.

அன்றொரு நாள்; சூரியன் அனல் போலக் காய்ந்து கொண்டிருந்தான். மௌரிய சாம்ராஜ்யச் சக்ரவர்த்தியின் அரண்மனை வழியாக அவள் வந்து கொண்டிருந்தாள். அதைத் தாண்டித்தான் அவள் விசாலமான அந்த நகருக்குள் செல்லவேண்டும். அவள் வரையும் சித்திரத்தில்கூட வரைய முடியாத அவ்வளவு அற்புதமான விசாலமாக இருந்தது அரண்மனை. அதிசயமாக ஓங்கி வளர்ந்திருந்த அந்த அரண்மனைக் கட்டிடத்தைப் பார்த்து அவளே அதிசயப்பட்



டிருக்கிறாள். தன் சிறுவீட்டையும்......இந்த அரண்மனையையும் ஒப்பிட்டு எண்ணிப்பார்த்தபோது அம்மம்ம!......அவளுக்கே அது பெரும் பைத்தியக்காரத்தனமான எண்ணமாயிருந்தது. அந்த அரண்மனைக் கட்டிடத்தின் நிழலில்தான் அவள் தினமும் ஒதுங்கி வருவாள். ஆனால் அவள் அங்கு ஒரு நிமிஷம் கூட நிற்கமாட்டாள். மறுபடியும் மான்குட்டிபோலக் குதித்துக்கொண்டு விசாலமான தெருக்களின் ஊடே ஓடி மறைந்து விடுவாள்.

இந்தக்காட்சியை எல்லாம் மௌரிய இளவரசன் தினமும் பார்த்துக்கொண்டிருந்தான். இளவரசன் குமார குப்தனுக்கு சித்திரக்கலை என்றால் அதிகப்பிரியம். அவன் ஒரு ரஸிகன். அவனே ஒரு சைத்ரிகன் தான்! கலைக்காக உயிரைக்கூடப் பணயம் வைத்து விடுவான். அவனுக்குக் கலைப் பொருள்களில் அவ்வளவு ஆசை!... அன்பு......!

வஸந்திகாவைப்பற்றி அவன் நன்றாகக் கேள்விப்பட்டிருந்தான். அவள் கையாலேயே வரைந்திருந்த ஓவியங்களையும், அவன் கண்கள் ஆசைதீரப் பருகியிருக்கின்றன. அந்த சித்திரங்களிலுள்ள ஜீவன் அவன் உள்ளத்தைக் கவர்ந்தது. அதன் எழிலே அவனை நிர்ஜீவனாக்கியது. வஸந்திகா என்னும் அந்தச் சித்திரக்காரி அரண்மனை வழியே அடிக்கடி செல்வதை அவன் பலதரம் பார்த்திருக்கிறான். தான் காணும்போது அவள் முகம் சித்திரத்தின் சிவப்பு வர்ணத்தைப்போலவே நாணிச் சிவப்பதையும் கண்டிருக்கிறான் அவன். எவ்வாறோ அவள் அவன் இதயத்தில் புகுந்து நிரந்தரமாகி விட்டாள். அவள் கலைக்காகவே அவளை அவன் விரும்பினான்.

மௌரிய சாம்ராஜ்யச் சக்ரவர்த்தியின் மகன் குமாரகுப்தன்—ஏழைச் சிற்பியின் மகளைக் காதலித்தான். சந்தர்ப்பங்களும் அதற்கு ஏற்றாற்போல் உதவி செய்தன. ஒவ்வொரு நாள் நடுப்பகலிலும் இளவரசன் குமார குப்தன் அரண்மனைப்பூங்காவில் உட்கார்ந்து அழகான காவியங்களைப் படிப்பது வழக்கம். அப்பொழுது அதன் வழியாகத் தான் வஸந்திகா சென்றுகொண்டிருப்பாள். அவளிடம் ஒரு முறையாவது பேச வேண்டுமென்ற ஆவல் அவனிடம் இருந்துகொண்டே வந்தது.

அன்றும் வஸந்திகா அந்தப் பாதையில்தான் சென்றுகொண்டிருந்தாள். குமார குப்தன் அவளைப்பார்த்தான். ஆவல் மேலிட்டால் "வஸந்திகா" என்று மெல்லக் கூப்பிட்டான். திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்தாள் வஸந்திகா. அவள் உடல் அச்சத்தால் ஆட்டம் கொடுத்தது. இளவரசன் தன்னை அழைத்ததற்குப் பதில் என்ன சொல்வது என்று அவளுக்கு விளங்கவில்லை. அந்த ராஜ வீதியிலோ ஜனங்களின் நடமாட்டம் அதிகமாக இருந்தது. மின் வெட்டுப்போல குமார குப்தன் மேல் ஒரு கண் வீச்சை வீசி விட்டு விடு விடுவென்று அவள் சென்று விட்டாள். அந்த விநாடி வரையில் அவள் இளவரசனைப்பற்றிக் கனவிலும் சிந்தித்தது கிடையாது. அவள் உள்ளத்தை அவன் குரல் ஒரே விநாடியில் கலக்கிவிட்டது. இளவரசன் தன்னைக்கூப்பிட்டது எதற்காக என்று தன்னையே அவள் கேட்டுக்கொண்டாள். அந்தச் சம்பவம் ஏதோ புயலடித்தது போல் தோன்றியது அவளுக்கு. மௌரிய சாம்ராஜ்யச் சக்ரவர்த்தி சந்திரகுப்தரின் மகன்—எதிர்கால மௌரியச் சக்ரவர்த்தி தன்னைக் காதலிப்பது அந்த ஏழைச் சிற்பியின் மகளின் களங்கமற்ற உள்ளத்திற்கு எவ்வாறு தெரியும்?

* * * *

ஆனால் இதெல்லாம் இந்தச் சம்பவம் நடந்த இரண்டு வருஷங்களுக்குப்பிறகு பழங்கதையாகி விட்டது. வஸந்திகா அச்சத்துடன் இளவரசனைப்பார்த்து ஓடிவிட்ட நாட்களெல்லாம் பறந்தோடிவிட்டன. எங்கும் அமானுஷ்யமான அமைதி பரவியிருக்கக்கூடிய இரவில் அவர்கள் சந்தித்து வந்தார்கள். ஒவ்வொரு நாள் இருளிலும் நடுநிசி அணுகும் தருணத்தில் அவர்கள் தங்கள் அன்பை வெளியிட்டுக்கொள்வார்கள். நகரக்கோட்டையின் வெளிப்புறத்தில் அந்த இணையில்லாப் பேரழகியை இளவரசன் சந்தித்து வந்தான்.

* * * *

பௌர்ணமி இரவு: அன்றிரவு நடுநிசிக்கு மேல் கோட்டையின் இரண்டாம் ஜாமத்தைக்குறிக்கும் மணியோசை பாடலிபுர நகர முழுவதும் பெரும் ஓசையைக் கிளப்பிவிட்டு ஓய்ந்தது. அதைத் தவிர எங்கும் நிச்சலனமான மௌனமே குடிகொண்டிருந்தது. விண்மீன்களென்னும் அற்புதமான ஜோதிகளுக்கிடையில்



"......ஆவல் மேலிட்டதால் 'வஸந்திகா' என்று மெல்லக் கூப்பிட்டான்......"

வெண்மதியின் சௌந்தரியம் அழகாகத் தேங்கி இருந்தது. மௌனத்தைக் கிழித்துக்கொண்டு இரு குரல்கள் மேலெழும்பிக்கொண்டிருந்தன.

"வஸந்திகா!'

"இளவரசே!"

"இரவில் ஒவ்வொரு நாளும் இங்கு வருவது உனக்குச் சிரமம் அளிக்கிறதல்லவா வஸந்திகா...!" என்று கூறினான் இளவரசன் குமார குப்தன்.

"இல்லை, இளவரசே! தெய்வீகக்காதலின் முன்பு சிரமத்தைப் பொருட்படுத்தினால் நம் லட்சியம் எவ்வாறு நிறைவேறும்?" இது வஸந்திகாவின் குரல்.

"வஸந்திகா! என் உள்ளத்தின் அரசியல்லவா நீ! என் ஒவ்வொரு செய்கையிலும் உன் நினைவுதானே வெளிப்படுகிறது. என் இதயத் துடிப்போடு கலந்துவிட்ட உன் பிம்பத்தை யாராலும் அகற்ற முடியாது வஸந்திகா...!"

"ஆனாலும்... இளவரசே! உங்களுக்கும் எனக்கும் இடையே எவ்வளவு பெரிய வேற்றுமை இருக்கிறது என்பதைத் தாங்கள் உணரவில்லையா? நான் ஒரு ஏழைப் பெண். நான் தங்களைக் காதலிப்பது எவ்வளவு தூரம் எண்ண முடியாத செய்கையாக இருக்கிறது?' என்று பெருமூச்சுகளுக்கிடையில் வஸந்திகா தீனமான குரலில் கூறினாள்.

குமரகுப்தனின் மனம் இதைக் கேட்டுச் சஞ்சலமடைந்தது. தான் ஒரு சக்ரவர்த்தியின் மகனாக இருந்தபோதிலும், ஏழைப்பெண்ணின் காதலை ஏற்க உரிமையுண்டு என அவன் நினைத்தான்.

"இல்லை வஸந்திகா! நீதான் வேற்றுமை இருப்பதாக எண்ணுகிறாய். ஏழை, பணக்காரன் என்ற மனோபாவத்தையே நான் வெறுக்கிறேன்."

"இளவரசே! நான் ஒரு பெண். கால வெள்ளத்தில் அழிந்துவிடக்கூடியவள் நான். இந்தப் பெண்ணுள்ளம் அதை எதிர்த்துப் போராடத்தக்க வலிமையைப் பெறவில்லை. தெய்வம் எனக்கு அந்தச் சக்தியை அளிக்கவில்லை' என்றாள். சற்று அதிகமாய்ப் பேசிவிட்டதால் அவள் முகம் சிவந்தது.

'வஸந்திகா! உன்னருகில் நான் இருக்கும்வரைக் கால வெள்ளம் நம் காதலை இரையாக்கிக் கொள்ள முடியாது. 'என் வலிமையான தோள்கள் உறுதி பெற்றிருக்கும் வரை எந்தச் சக்தியும் நம்மை எதிர்க்க முடியாது" என்றான் குமாரகுப்தன் அந்த மோகனப் பெண்ணின் காதலுக்காக.

ஆனாலும் அவள் இன்னும் நன்றாக அழுத்தந்திருத்தமாகக் கூறினாள். "குமார குப்தரே! நீங்கள் நன்றாக ஆலோசித்துப் பாருங்கள். நமது காதலைத் துன்பப் புயல் அடித்துச் சென்றுவிடமுடியாது தான்! நமது அழியாத அன்புப் பிணைப்பை அறுத்துவிட ஊழியின் வேகத்தாலும் இயலாதுதான். இருந்தாலும்... தாங்கள் மௌரிய சாம்ராஜ்யத்தின் எதிர்கால அரசர் வருங்காலத்தில் பாரத நாட்டின் முக்கால் பகுதியும் உங்களதுதான். ஆனால்... நான்... நீங்கள் உங்கள் இதயத்தின் அரசியாகக் கூறிக் கொள்கிறீர்களே அவள் ஓர் ஏழைச் சிற்பியின் மகள். சந்திர குப்தரின் குமாரரான தாங்கள் ஓர் ஏழைப் பெண்ணின் காதலை சாம்ராஜ்யத்தைவிட உயர்ந்தது என்றெண்ணி ஏற்றுக் கொள்வீர்களா? தாங்கள் ஏற்றுக்கொண்டாலும் உலகத்தின் அவச்சொல்லைத் தாங்க முடியுமா என்பது தான் சந்தேகம்!" என்றாள். சலனமில்லாமல் அவள் தன் நெஞ்சிலுள்ளதைத்தான் கூறினாள்.

"என்ன வஸந்திகா! நான் ஒரு சாம்ராஜ்யாதிபதியின் மகனாகப் பிறந்த காரணத்திறகாக என் உரிமை பறிபோய் விட்டதா? நம் காதலுக்கு எதிராக என் தந்தையின் தடை கூட ஒன்றும் செய்துவிடமுடியாது! என் பட்டம், பதவி இவைகள் பறிபோனால் கூட நான் அஞ்சமாட்டேன். எனக்கு நீதான் வேண்டும். என் இதயத்து மகாராணி தான் வேண்டும்!" என்று உணர்ச்சி மிகுதியாக் கூறினான் இளவரசன். சாம்ராஜ்யத்தைக் கூட அவள் காலடியில் வைத்தான் அவள் காதல் பிச்சைக்காக.

"இளவரசே! தாங்கள் உணர்ச்சி மிகுதியால் பேசுகிறீர்கள். இந்த அற்பப் பெண்ணின் காதலுக்காக உங்கள் வாழ்க்கையின்பத்தை எல்லாம் ஏன் தியாகம் செய்கிறீர்கள்? எனக்காகவா உங்கள் ஜீவிய லட்சியமான சாம்ராஜ்ய சிருஷ்டியைப் பலியிட்டுப் பகல் கனவாக்குகிறீர்கள்?"

"வஸந்திகா! சாம்ராஜ்யம் பகற் கனவானாலும் பாதகமில்லை. மௌரிய வீரனின் காதல் சத்தியம் பொய்யாகக்கூடாது! மௌரிய வீரன் என்றாவது சொன்ன சொல் தவறி நடந்ததாக நீ கேள்விப் பட்டிருக்கிறாயா?"

"அதற்குச் சொல்லவில்லை இளவரசே! தங்கள் தந்தை சந்திரகுப்தருக்குத் தெரிந்தால் நட்மை விபரீத நிலைக்குக்கொண்டு சேர்த்து விடுமோ என்பதை நினைத்தால் தான் எனக்குப்பயமாயிருக்கிறது"

"எத்தகைய நிலையும் என் உள்ளத்தில் தீட்டிவைக்கப்பட்டிருக்கும் உன் ஒளிச் சித்திரத்தை அழித்துவிடமுடியாது வஸந்திகா! என்னை அழித்து விடலாம். ஆனால் என் உள்ளத்தில் வேரூன்றி இருக்கும் உன் அன்பை அழித்துவிட முடியாது! இந்த வெண் மதியின் மேல் ஆணையிட்டுச் சொல்கிறேன் ...தாரகைகளின் அழியாத ஜோதியின் பேரில் சாட்சியிட்டுச் சொல்கிறேன்... உலகம் உள்ளளவும் நம் காதலை நான் மறக்கமாட்டேன். அதை ஈடேற்றுவதிலும் பின் வாங்கமாட்டேன்!" என்று வானை நோக்கிய வண்ணம் கூறினான் இளவரசன். அவள் காதல் ஏக்கம் அவன் அகன்ற மார்பினிடையே மலினமடைந்துமறைந்துவிட்டது. அவன் குரலில் இருந்த உறுதி அவள் இதயத்தில் குமாரகுப்தனின் உருவத்தை அழியாதபடிப் பதித்து விட்டது.

மகிழ்ச்சியற்ற வாழ்வில் அவள் சலித்துப் போயிருந்தாள் ஆனால் தம் அமுங்கிப் போயிருந்த அவள் வாழ்வு அவன் வரவால் ஒளி பெற்றது. உலகம்என்றுமே கண்டிருக்க முடியாத சுவர்க்க லோகத்திற்கு அவள் மிதந்து சென்று கொண்டிருந்தாள். அவள் ஒவ்வொரு இதயத் துடிப்பும் 'காதல் 'காதல்' என்று ஒலிப்பதுபோல் தோன்றியது அவளுக்கு. இன்பலோகத்தின் மத்தியில் அவர்கள் இருவரும் கைகோத்துச் சென்று கொண்டிருந்தனர்.

* * * *

இப்படி எத்தனையோ நாட்கள்... காலதேவனின் உத்தரவுக்குமுன் எத்தனையோ இரவு பகல்களின் ஓட்டங்கள்... அதே நிலவு... குமார குப்தன் சாட்சியிட்டுக் கூறி, அதே தாரகைகள் இவைகள் மட்டும் மாறவில்லை.



சென்னை-600 008

வஸந்திகா தன் தந்தையை விட்டுப் பிரிந்து தன்னந்தனியான வாழ்வு நடத்தினாள். ஏனெனில் அந்தக் கிழச்சிற்பி இந்த மண்ணுலகை விட்டே மறைந்து விட்டான். ஒவ்வொரு நாளும் அந்தக் காலஞ்சென்ற சிற்பியின் மோகனப் பெண் இளவரசனின் வரவுக்காக ஏங்கி நிற்பாள். தெய்வீகமான அந்த நேரத்தை அவள் ஒவ்வொரு கணமும் எதிர்பார்த்தாள்.

குமாரகுப்தனும் அவளை மறக்க முடியவும் இல்லை. அந்த ஜோதிப் பெண்ணை அவன் மறக்க முயன்றதும் இல்லை. கால தேவனின் அடிச் சுவட்டில் ஒன்றி வந்த அந்த ஆண்டில்தான் அவன் மௌரிய சாம்ராஜ்யத்தின் மேல் படையெடுத்து வந்த செலூகஸை (கிரேக்க அரசனை) முறியடித்தான். வெற்றியின் பெருமிதத்தில் கூட அவன் தன் காதல் தேவியை மறந்துவிடவில்லை. அவள் ஞாபகத்தினால்தான் அவன் வெற்றித் தேவதை அணுகியதாக எண்ணினான்.

* * * *

பாடலிபுரப் பிரஜைகளின் பாம்புச் செவிக்கு இளவரசனின் காதல் சம்பந்தமான செய்திகள் எட்டாமலில்லை. அந்தச் சிற்பியின் மகளின் நேசம் மெல்லமெல்ல நீண்டு வளர்ந்து அவர்கள் கவனத்திற்கு வந்து விட்டது. ஜலத்தின் அசைவுகள்போல் அந்தச் சம்பவம் பரந்து விட்டது. வஸந்திகாவின் உள்ளம் ஜனங்களின் துடுக்கான பேச்சுக்களால் சக்தியை இழந்து விட்டது. பெரிய மகான்களே உலகத்தின் பேச்சுக்காக ஒதுங்கி நிற்கும்போது அவள் மட்டும் அதற்கு விதிவிலக்கல்லவே!

சாம்ராட் சந்திரகுப்தரின் காதுக்கு பாடலிபுரத்து நகர ஜனங்களின் பேச்சுக்கள் எட்டாமலிருக்க முடியவில்லை. கிரேக்க அதிபதி செலூகஸின் மகளைத் தன் மகன் நிராகரித்ததின் காரணம் இதுவாகத்தான் இருக்கும் என்று அவர் எண்ணினார். தன்னுடைய அபரிமிதமான சாம்ராஜ்ய சிருஷ்டி சக்தியானல் பெற்ற இந்த மௌரிய சாம்ராஜ்யத்தைத் தன் மகன் அலட்சியம் செய்வதை அவர் விரும்பவில்லை. கேவலம் ஒரு பெண்-சக்ரவர்த்தியின் ஆணைக்கு முன் துச்சமாக்கப்படும் ஒரு சிறுமி இதற்கெல்லாம் காரணம் என்று நினைத்தபோது தன் மகன் தன்னைக் கேலி செய்கிறானோ என்றுகூட எண்ணினார். தன் கண் முன்னாலேயே தன் குமாரன் தன்னை அவமதித்து நடப்பது என்பதை நினைத்து பார்த்தபோது அவர் கோபம் உச்ச நிலையை அடைந்தது.

செலூகஸ் நிகடாரின் மகளை—யவன குமாரியை அவனுக்கு மணமுடித்துவிட்டால் அவன் மனம் மாறிவிடும் என்று அவர் நினைத்தார். அவன் காதலைப் முளையிலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டுமென்று அவர் விரும்பினார்.

குமாரகுப்தனுடைய மனத்தை மாற்றுவதற்கு சந்திரகுப்தர் தயாரானார். இதனால் ஒரு பெண்ணின் வாழ்வே சீர்குலைவதை அவர் எண்ணிப் பார்க்கவேயில்லை!

* * * *



"......தந்தையே என்னால் ஆகவேண்டிய காரியம் என்ன?......"

தன் குமாரனின் வரவுக்காக சந்திரகுப்தர் தன்னந்தனியாகக் காத்திருந்தார். குமாரகுப்தன் பணிவுடன் வந்து நின்றான் தன் தந்தையின் முன்.

"குமாரகுப்தா! உன்னிடம் முக்கியமான விஷயங்களைப்பற்றிப் பேச வேண்டியிருக்கிறது. உன்னைவிட அதற்கு உதவி செய்பவர்கள் யார் இருக்கிறார்கள்? உன் தம்பி பிந்துசாரனும் இன்னும் நல்ல அனுபவம் பெறவில்லை" என்றார் அன்பொழுகும் குரலில்.

முதுமைக் கோடுகள் அவர் நெற்றியை மறைத்திருந்தன. தலைமயிர்களெல்லாம் வெள்ளிபோல் நரைத்து அவர் வயோதிகத்தன்மையை வெளிப்படுத்தின. அவர் பேசும் சப்தத்தைத் தவிர வேறு சப்தமின்றி நிசப்தமே குடிகொண்டிருந்தது. இளவரசன் தந்தையின் எதிரில் வணக்கமாக நின்றிருந்தான்.

'குமாரகுப்தா! எனக்கும் வயதாகிவிட்டது. என் அபிலாஷைகள் எல்லாம் பூர்த்தியாகிவிட்டன. முதுமையின் திரையிட்டால் என்னால் சிறிய காரியங்களைக் கூடச் சரியாகக் கவனிக்க முடியவில்லை. சாம்ராஜ்யத்தின் நிலைமையும் மோசமாகிக்கொண்டு வருகிறது. இந்நிலையில் என் நிறைவேறாத இரண்டு வேண்டுகோளை நீதான் நிறைவேற்றவேண்டும். அதற்கு உன் விசுவாசத்தைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்.'

''தந்தையே! என்னால் ஆக வேண்டிய காரியம் என்ன?'' என்று பரபரப்புடனும் வணக்கமாகவும் கேட்டான் இளவரசன் சக்ரவர்த்தி சந்திரகுப்தரிடம்.

''எனக்குப் பிறகு மௌரிய சாம்ராஜ்யத்துக்கு நீதானே தலைவனாகப் போகிறாய்?...இல்லையா? இப்போது பதுங்கிக்கிடக்கும் கலகங்கள் மறுபடியும் தலை தூக்காமல் மூறியடிப்பது உன் பொறுப்பு. இதுதான் என் மனதுக்குக் கவலையளிக்கிறது. ஒளிந்துவிட்ட கிரேக்கர்களின் படையெழுச்சிகூட விரையும் போலிருக்கிறது!'' வருங்காலத்தின் அந்தகாரத்தின் நடுவே என்ன செய்வது என்று தெரியாமல் திணறிக் கொண்டிருந்தார் வயோதிக மௌரிய சக்ரவர்த்தி.

''தந்தையே! என் உயிர் உள்ள வரையும் எந்தக்கலகமும் நடக்காது...இது உறுதி சாம்ராஜ்யம் சிதறாதபடிப் பாதுகாப்பது என் கடன்'' என்று பதிலளித்தான் குமார குப்தன்.

''அதனால் தான் உன் பட்டாபிஷேகத்தையும் திருமணத்தையும் விரைவில் நடத்திவிடலாமென்றிருக்கிறேன்'' என்றார் சந்திர குப்தர். அவன் முகத்தில் ஏற்பட்ட ஒவ்வொரு மாறுதலையும் அவர் கூர்ந்து கவனித்தார்.

சந்திர குப்தர் இவ்வாறு கேட்டதை அவன் எதிர்பார்க்கவில்லை. ''தான் இதுவரை கண்ட கனவு இடிந்துவிடவா போகிறது? என் திருமணத்தால் என்னை நம்பி இருக்கக்கூடிய அப்பெண்ணின் கதி என்ன? அவள் உள்ளமும் வாழ்வும் சிதறிவிட நான் சம்மதிக்கவேண்டுமா?'' சிந்தனைச் சுழல் அவனைத் துன்பலோகத்திற்கு இழுத்துச் சென்றது.

இளவரசனையே கவனித்தவாறு மேலும் பேசலானார் சக்ரவர்த்தி:-

''நம்மௌரிய சாம்ராஜ்யத்தின் பெருமை என்னோடு அழிந்துவிடக் கூடாது. குப்த குலத்தின் பெருமை என்றும் மங்காதிருக்கச்செய்ய வேண்டிய கடமைகள் இன்னும் எவ்வளவோ பாக்கி இருக்கின்றன. எதிர்காலத்தில் அவ்வளவையும் நீதான் செய்து முடிக்க வேண்டும். கிரேக்கர்களுக்கும், நமக்கும் அழியாத தொடர்பை நீதான் ஏற்படுத்த வேண்டும். அதற்காகத்தான் ஸெலூகஸின் மகளை உன் மனைவியாக்கிக் கொள்ள வேண்டும். என்ன... தெரிகிறதா...அதற்கான ஏற்பாடுகள் கூட நடந்துவிட்டன. உன் பட்டாபிஷேகமும் திருமணமும் ஒன்ருகத்தான் நடைபெற வேண்டும்'' என்று கட்டளையிடும் பாவனையில் கூறினார் சந்திரகுப்தர்.

சந்திரகுப்தர் பேசியதை இதுவரை மௌனமாகவே கேட்டுக்கொண்டு நின்றிருந்தான் குமாரகுப்தன். அவர் வார்த்தைகளால் உண்டான உணர்ச்சிகள் அவன் உள்ளத்தில் கொந்தளிப்பை உண்டாக்கியது. அவர் சொன்னது அவன் திட்டத்தையே அடியோடு மாற்றுவதாக இருந்தது. ஏமாற்றத்தால் உண்டான உணர்ச்சியுடன் அவன் பதிலளித்தான்.

''தந்தையே! நீங்கள் கடைசியாகக் கூறியதைமட்டும் செய்து முடிக்கச் சக்தியற்றவனாக இருக்கிறேன். அது என் சக்திக்குப் புறம்பானது. ஸெலூகஸின் மகளை-மிலேச்ச கன்னிகையை மணக்க என்னால் முடியவே முடியாது' என்றான் தீர்மானமாக.

அவன் சொன்ன பதிலைக் கேட்டு சந்திர குப்தர் கோபமடைந்தார். ''குமார குப்தா! நீ வஸந்திகாவிடம் அன்பு கொண்டிருக்கிறாய் என்று எனக்குத் தெரியும். சக்ரவர்த்தியின் மகன் ஏழைப் பெண்ணை விரும்புவது அசம்பாவிதமாகும். இதை நீ அறியாதவனல்ல!' என்றார். அவன் மௌனமாக இருந்தான். அந்த மௌனம் அவர் கோபத்தை மேலும் கிளறிவிட்டது.

''குமார குப்தா! உன் முடிவு என்ன என்பதைச் சொல்லிவிடு. நன்ருக ஆலோசித்துப் பார். உன் காதலுக்காக சாம்ராஜ்யமே இடிந்துவிட நீ விரும்புகிறாயா?'' என்றார் கோபமான குரலில்.

''உங்களின் எண்ணத்திற்காக வீணாக ஒரு பெண்ணின் வாழ்வே அழிந்து போகும் என்பது உங்களுக்குத் தெரியாததல்ல!'' அவன் குரலில் அசைக்க முடியாத திடம் தொனித்தது.

அவன் மனத்தை எவ்வாறு மாற்றுவது என்று சந்திர குப்தருக்குத் தெரியவில்லை. தன் மகனின் ஒவ்வொரு பேச்சும் அவர் கோபத்தைத் தூண்டுவதாகத்தான் இருந்தது. மெல்ல சாவதானமாகப் பேச ஆரம்பித்தார்.

'நான் உன் தந்தை என்ற முறையில் பேசு குமார குப்தா! நானும் உன்னைப்போலத்தான் இளைஞனாக இருந்தேன் பல வருஷங்களுக்கு முன்பு. உன்னைப் போன்ற சலனம் என் உள்ளத்தில் அப்பொழுது கிடையாது. வஜ்ரமான என உள்ளத்தில் எந்த அழகியும் புகுந்துவிடவில்லை'

''ஆனால்...உங்களைப்போல என்னால் இருக்க முடியவில்லையே என்று வருந்துகிறேன். நான் உங்களைப்போல் ராஜபதத்தைப் பெரிதாகக் கருதவில்லை. மனித உள்ளத்தின் அன்பைத்தான் என்னால் விரும்ப முடிகிறது.''

'சட்...அதிகப்பிரசங்கி! நீ ஒரு பெண்ணின் மோகத்தில் நன்ருக மதி மயங்கிப் போயிருக்கிறாய்! அந்தப் பெண்ணை நீ மறந்துவிட வேண்டும், கட்டாயமாக''

''அந்தக் காரியம் மட்டும்தான் என்னால் முடியாது. என்னை நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்துவிட முடியும். ஆனால் என் காதலை நீங்கள் அழித்துவிட முடியாது.''

''குமாரகுப்தா! ஏன் முடியாத ஒரு காரியத்திற்கு வீண் தர்க்கம் செய்கிறாய்? நான் உன் காதலை ஏற்றுக்கொண்டாலும், இந்த உலகம் அதை ஏற்காது என்பது உனக்குத் தெரியாததல்லவே. அழகும் அந்தஸ்தும் நிறைந்த ராஜகுமாரிகள் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்'' என்று புத்தி சொல்வதுபோல அவர் கூறினார்.

(தொடரும்)



# தாய்மார்களுக்கு

ஆர். லக்ஷ்மி அம்மாள்

## அன்பெனும் ஊற்று

★

இந்தியாவின் உடைந்த ஹிருதயத்தை ஒன்றுபடுத்துவது மாதர்களின் முக்கியமான தர்மம் என்று ஸ்ரீ விஜயலட்சுமி பண்டிட் இந்திய மாதர் ஸர்வ கலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் வற்புறுத்தினர். இக்கால நிலையை முன்னிட்டு இப்படிக் கூறியிருப்பினும், எப்போதும் உடைந்த ஹிருதயங்களை ஒன்றுபடுத்தும் மனோதத்துவ ரண சிகிச்சை செய்யக்கூடியவர்கள் தாய்மார்களே. நோயுற்ற குழந்தையைத் தாய் அன்புடன் ஸ்பரிசிக்கும்போதே அக்குழந்தைக்கு நோய் நீங்கியது போன்ற ஓர் உணர்ச்சி ஏற்படுகிறது: உண்மையில், அக்குழந்தைக்கு அந்த ஸ்பரிசம் ஒரு சூட்சுமமான மருந்துதான். அப்படியே தாய்க்குலத்தின் புனிதமான—அன்புமயமான—ஸ்பரிசம், சமுதாய நோய்களுக்கெல்லாம், முக்கியமாகச் சமுதாய ஹிருதய நோய்களுக்கு, ஓர் அருமருந்து.

### தாயன்பின் வியாபகம்

தாயன்பு, அன்பு வகைகளில் எல்லாம் சாந்தமான, பேராழமுள்ள, கடல் போன்ற அன்பு. குழந்தைப் பேற்றிலும், குழந்தை வளர்ப்பிலும் தாயன்பு நன்கு வெளிப்படுகிறது. ஒருவகையில், குழந்தையே தாய்க்கு அன்பு கற்பிக்கிறது என்று சொல்லலாம். இத்தகைய அன்புணர்ச்சியை நன்கு பரிபாலித்துத் தாய்மார் சமுதாய உணர்ச்சியுடன் கலந்து பரிமாறிக் கொண்டால், சமுதாயம் விசேஷ ஒற்றுமையும் ஒருமையுணர்ச்சியும் பெறும் என்பது திண்ணம்.

இப்படிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய சக்தி வாய்ந்த அன்பின் தன்மையை விஞ்ஞான ரீதியாகவோ, பொருளாதார ரீதியாகவோ, ஆராய்ந்தோ, அளந்தோ காட்டமுடியாது. இந்த அன்பின் பெருமையையும், பரப்பையும் நாம் உள்ளபடி அறிந்து கொள்ளமுடியாதென்றும், இச் சக்தி அண்டமெங்கும் பரந்து ஒவ்வொரு பொருளிலும் நுட்பமாக வியாபித்திருக்கிறதென்றும், அணுக்களுக்கு இடையே ஒன்றையொன்று ஆகர்ஷித்துக்கொண்டிருக்கும் ஆகர்ஷண சக்தியும் அன்பின் ஓர் அம்சம்தான் என்றும், உலகமெல்லாம் பல உருவங்களோடும், உருவைகளாகவும் ஓடித் தொழிற்பட்டுக்கொண்டிருப்பதே, அன்பின் உண்மைக்கு அருமையான சாட்சியாகுமென்றும், டாக்டர் மாண்டிஸாரி கூறியுள்ளார். 'அண்டத்திலுள்ளது பிண்டத்திலுமுண்டு' என்பது உண்மைதானே.

### தெய்விக அன்பு

இக்கருத்தை நமது நாட்டு நல்லறிஞர்களும் கவிகளும் நன்குணர்ந்திருக்கிறார்கள்.

''அன்பெனப் தொன்றின் [தன்மை
அமரரும் அறிந்த தன்றால்!''
''முன்பு பின்பின்றி மூவுலகத் [தினும்
அன்பின் நல்லதோர் ஆக்க [முண்டாகுமோ!''

என்று கவிச்சக்கரவர்த்தியான கம்பர் தமது உள்ளொளியால் இவ்வுண்மையை உணர்ந்து வெளியிட்டிருக்கிறார்.

இத்தகைய தெய்விக அன்பின் அம்சமே தாயன்பு. மனிதவர்க்கத்திற்குரிய அழியாத, வரம்பில்லாத, தனிப் பெருஞ் செல்வம் இது. இந்த அன்பின் பெரும் பகுதியும் உள் மனத்தில் அடங்கியிருக்கிறது; சிறு பகுதிதான் புறமனத்தின் வாயிலாக அனுதாபம், தியாகம். காதல் முதலான உணர்ச்சிகளாகிப் பயன்படுகிறது.

இத்தகைய உணர்ச்சிகளையும் கூடத் தாய்க்குலம் சமுதாயத்திற்கும், தேசத்திற்கும் உபயோகிக்க முடியாததால்தான், இத்தனை அனர்த்தங்கள் உலகத்தைச் சீர்குலைக்கின்றன; இத்தனை அக்கிரமங்கள் உலகமெங்கும் காணப்படுகின்றன. மனிதர்கள் சகோதர வதை யுத்தங்கள் செய்துகொள்வதற்கும், முதலாளிகள் தொழிலாளிகளைப் பிழிந்து இரத்தத்தை இரத்தினமாக்கிக்கொள்வதற்கும், தொழிலாளிகள் முதலாளிகளை ஹிம்ஸித்து ஒழிப்பதே தங்களுக்குத் தருமமென்று கருதுவதற்கும், தாயன்பு உலகத்திற்கு நன்கு பயன்படாத ஒரு முக்கிய காரணமாகும்.

### கருமித்தனம் வேண்டாம்

இன்று நமது நாட்டின் ஒற்றுமையையும் ஒருமையையும் குலைத்து வரும் சக்திகளை ஸ்தூலமாக நோக்கிப் ''பாக்கிஸ்தான்'' 'ராஜஸ்தான்'' திராவிடஸ்தான்'' என்றெல்லாம் பேரிட்டு மக்கள் அழைத்த போதிலும், இவற்றுக்கெல்லாம் மூலகாரணம் அன்பு என்ற மகாசக்தியைப்

பயன்படுத்திக்கொள்வதில் நாம் கருமித்தனம் காட்டுவதுதான் என்று எனக்குத் தோன்றுகிறது.

பழைய இந்தியாவில் அன்னியர்களின்படையெடுப்புமுதலான எத்தனையோ கஷ்டங்களுக்கு இடையிலும் இந்தியாவின் நாகரிக ஒற்றுமையும் பண்பாட்டின் ஒருமையும், இன்று உள்ளதுபோல் இவ்வளவு மோசமாகச் சீரழிந்து போய்விடவில்லை. படையெடுத்து வந்த அன்னியர்களும் நம்முடன் தங்கி நாளடைவில் நம்மக்களுடன் கலந்து விட்டனர். அன்று இல்லாத ஒற்றுமைக்குறைவும் பலவீனமும் இன்று காணப்படுவதற்குக் காரணம் என்ன? நம் முன்னோர்களைவிட நாம் லௌகிக அறிவை வளர்த்துக்கொண்டிருக்கிறோம்; நவீன விஞ்ஞான சாதனங்களைக் கையாண்டு வாழ்க்கையில், பலவேறு வசதிகளையும் அடைந்திருக்கிறோம். எனினும் இந்தியாவின் ஒருமை இன்று முன்னிலும் பாதிக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் இருக்க வேண்டும் அல்லவா? அன்பும் பரஸ்பர நல்லெண்ணமும் முன்னிலும் இன்று குறைந்து போய் விட்டதாகவே தெரிகிறது.

தாயன்பு அன்று பயன்பட்ட அளவிற்குக்கூட இன்று சமுதாயத்திற்குப் பயன்படவில்லை என்றே என் புத்தியில் படுகிறது. ராஜபுத்திர வீராங்கனைகள் போன்ற வீரப் பெண்மணிகளும் அகல்யாபாய் ராணி, மங்கம்மாள் போன்ற அரசிகளும், ஆண்டாள் மீராபாய் போன்ற கவியரசிகளும் தங்கள் மகத்தான அன்பையும், திண்மை வாய்ந்த எண்ணங்களையும் கருமித்தனமில்லாமல் சமுதாயத்திற்குப் பயன்படுத்தியதே, காரிருளின் மின்னல் போல ஒளிர்ந்து பழைய இந்தியாவின் பண்பாட்டையும், நாகரிகத்தையும் ஒருவாறு காத்து வந்தது என்பது என் அபிப்பிராயம்.

## காலத்தில் செய்த நன்றி

இந்நாளில், அத்தகைய பெண்மணிகள் முன்னிலும் விரிந்த நோக்கங்களுடனும் பரந்த கல்வித் திறமையுடனும் தோன்றிச் சமுதாயப் பணி ஆற்றுவதே, பழைய காலந் தொட்டுவரும் குறைகளையும், புதிய புதிய மனஸ்தாபங்களையும் போக்குவதற்கு உத்தமமான வழியாகும். இத்துறையில் பெண்களின் பணிகள் மட்டுமே பலன் தரும் என்று நான் சொல்ல வரவில்லை; ஆண்களோடு பெண்களும் சரிசமானமாகச் சமுதாயப் பணி புரியவேண்டும் என்றுதான் சொல்லுகிறேன். இன்று அதி முக்கியமாகிவிட்ட இப்பெரும் பணியில் ஆண்களைக் காட்டிலும் பெண்கள் அதிக அளவில் நல்ல பலன்களை அடையக்கூடும் என்றும் எதிர்பார்க்கிறேன்.

மக்களின் புண்பட்ட மனத்திற்கு ஆறுதல் அளிக்கும் தாயன்பு, இத்துறையில் ஆண்மக்களின் அரசியல்-பணிகளைக்காட்டிலும் பயன்தரக்கூடும் என்பதை ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் தெளிவாக விளக்கியிருப்பது நாட்டுக்கும், பெண்குலத்திற்கும் காலத்தால் செய்த நன்றியாகும்.

## ஊற்றுக்கண் எங்கே ?

தேசம், தன் தற்காலச் சமுதாய நோய்களுக்குத் தாய்க்குலத்தின் உதவியை நாட, தாய்க்குலம் குழந்தைகளின் உதவியைத்தான் நாடவேண்டும். அன்பெனும் ஊற்றுக்கண் குழந்தைகளிடம்தான் காணப்படுகிறது.

சாதாரணமாகக் குழந்தைகளைச் 'சுயநலம் பிடித்த முரண்டுப் பிராணிகள்' என்று கருதுவது வழக்கம். இக்கருத்து மிகவும் தவறானது. குழந்தை சுயநலம் உடையது போல் தோன்றுகிறது. வயது முதிர்ந்தவர்களோ, சுயநலத்தைப் பரோபகாரம் என்ற போர்வையால் மறைத்துக் கொள்கிறார்கள்; ஆகவே, இவர்களில் பலரும் உண்மையில் சுயநலக்காரர்களும் போலிப் பரோபகாரிகளும்தான்.

ஒரு பெருஞ்செல்வன் கலாசாலை தோற்றுவிக்கிறான்; வேறு தருமங்கள் செய்கிறான். முகத்தைப் பார்த்தால், பேச்சைக்கேட்டால், தர்மவீரன்தான்; அகத்தைப் பார்த்தாலோ வெட்கப்பட வேண்டியதுதான். இப்படியெல்லாம் கபடநாடகம் ஆடத்தெரியாது குழந்தைக்கு! தனி மனிதப் பண்பின் வளர்வதற்கே தன் முழு ஆற்றலையும்குழந்தை உபயோகிக்க முயல்கிறது: இதுதான் சுயநலம்போல் தோன்றுகிறது.

## ஊற்றும் கடலும்

கரையாத கருங்கல்-உள்ளத்தையும் கரைத்துவிடும் ஆற்றல் வாய்ந்தது குழந்தையன்பு. தன்னையும் தன் லாபத்தையுமே எண்ணிக் கொண்டிருக்கும் உள்ளத்தில் குழந்தை முதல் ஸ்தானம் வகிக்கும்போது, சுயநலத்திற்கு அடுத்த ஸ்தானம்தான் கிடைக்கிறது, சுயகாரியப் புலிகளின் உள்ளத்திலும். ஆகவே, குழந்தைதான் மனிதனை மனிதனுக்குகிறது.

மிதமிஞ்சிய சுயநலம், மனிதனை அரக்கனாக்கி போட்டி, பூசல், பொறாமை, போர் முதலான புன்மைகளையே நன்மைகளுக்கு மாறாகப் பெருக்கிவிடுகிறது. சுயநலத்தை மட்டுப்படுத்தவும், தியாக உணர்ச்சியைப் பெருக்கிக்கொள்ளவும், குழந்தையன்புதான் விசேஷமாய்ப் பயன்படுகிறது. இக்குழந்தையன்பாகிய ஊற்றிலிருந்து பெருகும் ஜீவ கங்கையைத் தாயன்பு, கடலாக்கிக் குடும்பத்திற்கும் நாட்டுக்கும் பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

## அன்புப் பாற்கடல்

பாதிரிமார்களும் சமயபோதகர்களும் நீண்ட போதனைகளாலும், அரசியல் வாதிகள் நீண்ட பிரசங்கங்களாலும், ராஜதந்திரிகள் சிக்கல்களான சாம, பேத, தான தண்ட உபாயங்களாலும் செய்ய முடியாத அற்புதத்தைக் குழந்தையன்பு செய்துவிடுகிறது. இத்தகைய அன்பைக்கொண்டு சமுதாயக் கூனலை ஏன் நிமிர்த்திவிடமுடியாது? ஆனால் குழந்தைக் கல்வி முறையும், தாயின் நிலையும் மோசமாக இருந்தால், எந்த அன்பைக் கொண்டு என்ன அற்புதம் செய்யமுடியும் ?

குழந்தை, அன்பைக் கொடுக்கிறது; அன்பை வேண்டுகிறது. குடும்பத்தில் ஒரு காந்தமாக இருந்து மற்றவர்களின் அன்பை ஆகர்ஷிக்கிறது குழந்தை. இந்த அன்பைத்தான், சூரிய ஒளியைச் சந்திரன் பிரதிபலித்து உபகரிப்பதுபோல், தாயன்பு பிரதிபலித்துக் குடும்பத்திற்கு விநியோகிக்கிறது. இத்தகைய அன்



புப் பாற்கடல் குடும்பத்தை வாழ்விப்பதுபோல் தேசத்தையும் வாழ்விக்க வேண்டாமா?

## தனிப் பெரும் பணி


நாம் அறிவைப் பெருக்கிக் கொண்டே போகிறோம்: ஆனால் அதற்குத் தகுந்தபடி அன்பைப் பெருக்கிக் கொள்ளவில்லை. அறிவிலேதான் ஆற்றல் முழுதும் அடங்கியிருப்பது போலவும், அன்பே பலவீனம்தான் என்பது போலவும் நினைத்துவிடுகிறோம். இதனால்தான் குழந்தைகளின் உரிமைகளைப் புறக்கணிக்கிறோம். தாய்க் குலம் சமுதாயத்தில் தாழ்வுற்றிருப்பதற்கும் இத்தவறான கொள்கையே காரணமாகும்.

புதிய இந்தியா உருவாக வேண்டுமென்றால், குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் சமுதாயம் இழைத்திருக்கும் அநீதி முற்றும் ஒழிய வேண்டும். நாட்டில் மதாவேசங்களையும், அரசியல்-சூழ்ச்சிகளையும், பொருளாதாரப் பெருந்திட்டங்களையும் கடந்த ஒரு புது வாழ்வு தோன்ற வேண்டும். அந்த வாழ்வில், இந்து என்றும் முஸ்லிம் என்றும், ஆரியன் என்றும் திராவிடன் என்றும், வெள்ளையன் என்றும் கறுப்பன் என்றும் மஞ்சள் மனிதன் என்றும், குள்ளன் என்றும் நெட்டையன் என்றும் ஏற்றத் தாழ்ச்சிகள் ஏற்படாமல், மனிதனோடு மனிதன் நட்பாடி இதய உறவுகொண்டு மேம்பட வேண்டும்.


இத்தகைய வாழ்வுதான் தேசத்தையும் உலகத்தையும் உண்மையாகப் பலப்படுத்தி உடைந்த இதயங்களை ஒன்றுபடச் செய்யும். இத்தகைய புதுமைப் பெருவாழ்வை உருவாக்குவதற்குத் தாய்மார்கள் தனிப் பெரும் பணி புரிதல் கூடும். அன்பெனும் ஜீவ ஊற்றை இவர்களே கடலாகப் பெருக்கித் தேசத்திற்கும், உலகத்திற்கும் பயன்படுத்த முடியும்.

---

## இளவரசியும் மணமகன் மவுண்ட் பேட்டனும்



நிச்சயதார்த்தத்துக்குப் பின் எடுக்கப்பட்ட மேற்கண்ட முதல் படத்தில் இருவரும் ஆனந்தமாக கைகோத்துக் கொண்டு செல்கின்றனர். இது முற்றிலும் ஒரு காதல் கல்யாணம். 1937-ம் வருஷம் நடந்த பட்டாபிஷேகத்தில் தான் இருவரும் முதல் முதல் சந்தித்தனராம்.




II

## காற்றும் காற்றாடியும்

★

ஆடிக்காற்று மரங்களைப் பேயாட்டம் ஆட்டியும், சருகுகளை அங்குமிங்கும் வாரி யிறைத்தும், ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தது. சிறுவர்கள் உத்ஸாகமாய்க் காற்றாடிகளைப் பறக்கவிட்டுக் கொண்டிருந்தார்கள். நான் அவ்வளவு சுறுசுறுப்பாக இராமல் காற்றாடிகள் சுழலும் வேகத்தைப்பார்த்து இன்புற்றிருந்தேன். எனக்குப் பட்டம் விடுவதைக் காட்டிலும் அந்தச் சுழற்சிகளையும் வேகத்தையும் பார்த்துக்கொண்டிருப்பதில் அலாதி மகிழ்ச்சி. பார்த்துக்கொண்டே பகற் கனவுகள் காணத் தொடங்கிவிடுவேன். ஏதோ வேதாந்தக் கனவுகள் அல்ல, சரித்திரக் கனவுகள்—சிறு வயதிலே, வகுப்பிலே அறிமுகமான தேச சரித்திர வீர புருஷர்கள், வீராங்கனைகள் முதலானவர்களைப்பற்றிய ஏதேதோ கனவுகள்—கண்டு களித்த வண்ணமாய், காலக் காற்றாடியின் சுழற்சிகளை நோக்கிய வண்ணமாய் இருப்பேன்.

### சரித்திரக் கனவுகள்

நமது நாட்டுக் கவிகளில் சிலர், மனத்தின் 'அலைச்சல்' களையும் படுவேகச் சுழற்சிகளையும் காற்றாடிக்கு ஒப்பிட்டிருக்கிறார்களல்லவா? வேறு சிலர் வாழ்க்கையின் ஏற்ற இறக்கங்களைக் காற்றாடியின் மேலுங் கீழுமான சுழற்சிகளுக்கு ஒப்பிட்டுப் பேசுவார்கள். ஆனால் எனக்கு அடிக்கடி மனோன்மணீய நாடகத்தில் சுந்தர முனிவர், காலம் என்ற காற்றாடியைக் குறித்துச் சொல்லியிருப்பது ஞாபகத்திற்கு வரும்.

'காலம் என்பது
கறங்குபோல் சுழன்று,
மேலது கீழாக்
கீழது மேலா
மாற்றிடும் தோற்றம்'
என்பது மறந்தனை

[கறங்கு-காற்றாடி.]

என்று மன்னனை நோக்கி முனிவர் கூறியதை, நான் படித்தறிந்த காலம் தொட்டு இளமைப் பருவம் முழுதும் மறந்ததேயில்லை. இந்து தேச சரித்திரத்தில் இந்து மக்களின் உயர்வு தாழ்வுகளுக்கெல்லாம் சுந்தர முனிவர் வந்து சமாதானம் சொல்வதுபோலத் தோன்றியது.

காற்றாடியின் சுழற்சிகளில் இந்நாளிலும் நான் ஈடுபடுவதுண்டு. இப்போது நமது சரித்திர ஏற்றத் தாழ்ச்சிகள் எல்லாம் சேர்ந்து ஏதோ ஒரு பூரண வட்டத்தைச் சித்திரிப்பதுபோலத் தோன்றுகின்றன. உயர்விலும், தாழ்விலும் மயங்கியோ, கலங்கியோ ஓய்ந்து போகாமல் இந்திய அன்னை, நீண்டு கிடக்கும் சரித்திர அரங்கமெங்கும் ஏதோ ஒரு முடிவில்லாத களி நடம் புரிந்து வருவதாகத் தோன்றுகிறது. அசோகவனத்தில் சிறையிருந்த சீதையின் சோக சித்திரத்திலும், நற்குடிப் பிறப்பு, பெரும்பொறுமை,கற்புத்திறம் என்ற சில குண விசேஷங்கள் களிநடம் புரியக் கண்டதாக அனுமான் கூறுகிறான், கம்ப ராமாயணத்திலே. அப்படியே, இந்திய அன்னையும் எத்தனையோ சோகங்களுக்கிடையிலும் தன் அருங் குணங்களையும் உயர்ந்த லட்சியங்களையும் உத்ஸாகமாய்ப் பாதுகாத்து வந்தாள் என்பதைப் பின்னுளில் சரித்திர புஸ்தகங்களையும், கட்டுரைகளையும் படிக்கப் படிக்கத் தெரிந்துகொள்ளலானேன்.

கம்பராமாயணத்தை முதல் முதல் படித்தபோது காற்றாடியை உபமானமாகக் காட்டியுள்ள சில சந்தர்ப்பங்களில் என்னை அறியாமலே உத்ஸாகம் ஏற்பட்டது.உதாரணமாக, "போர்க்களத்தில் நான் காற்றாடிபோலத் திரிவேன்; திரிந்து பகைவர்களைத் தாக்குவேன்" என்று கும்பகர்ணன் வீரவாதம் செய்கிறான், விபீஷணனை நோக்கி. காற்றாடியைப் பார்க்கும்போது அந்த நினைவு குறுக்கிட்டு, "அப்படி நாடெல்லாம் சுற்றித் திரிந்து வீரச் செயல்கள் புரிய வேண்டும்" என்ற பகற் கனவு தோன்றியதுண்டு.

ஒரே உறக்கமாக உறங்கிக் கொண்டிருந்த கும்பகர்ணனை எழுப்பும் முயற்சியே ஒரு போர்ப் பெருஞ் செயலாகி



விட்டது, ராவண கிங்கர்களுக்கு! அவர்கள் அலுப்பும் சலிப்புமாய்ச் சோர்ந்துபோகும் நிலையில் அசடு வழிய அந்தச் சலிப்பற்ற சாகச நித்திரையை நோக்கி, ஒரு "திருப்பள்ளியெழுச்சி" பாடுகிறார்கள்!

**உறங்குகின்ற கும்ப கன்ன!**
**உங்கள்மாய வாழ்வெலாம்**
**இறங்குகின்ற(து) இன்றுகாண்!**
**எழுந்திராய், எழுந்திராய்!**


என்று பாடிவரும்போதே, "காற்றாடிபோல வில்லைப் பிடித்துக்கொண்டு காலதூதர்கள் வந்துவிட்டார்கள் ராம லட்சுமண வடிவத்திலே! இனி நீ விழிப்பே இல்லாத பெருந் தூக்கத்திற்குப் போகவேண்டியதுதான்!" என்று வாழ்த்துகிறார்கள்! (அந்த ஏழை வேலைக்காரர்களுக்கு அவ்வளவு அபிமானம், எஜமான பக்தி, ராவண கும்பகர்ண முதலாளிகளிடம்!) ராமலட்சுமணர்களின் வில்லிரண்டும் விர்ரென்று காற்றாடிபோலச் சுழன்று பாணங்களை உதைத்துத் தள்ளியதாகக் கவிஞன் செய்திருக்கும் கற்பனை, இளமையில் நான் காற்றாடியின் சுழற்சிகளைப் பார்த்தனுபவித்த நினைவுகளுக்கும் கனவுகளுக்கும் ஒரு புதிய வீர சோபை அளித்தது.

"காற்றைப்போல் சுதந்திரமாய் இருக்கவேண்டும்; காற்றாடிபோல் ஓயாமல் முயன்று கொண்டிருக்க வேண்டும்" என்ற ஆசை அடிக்கடி என் உள்ளத்தில் தோன்றியதுண்டு. சுதந்திரத்தையும் பேருழைப்பையும் நினைக்கும் போதெல்லாம், பெரும்பாலும் காற்றும் காற்றாடியும் என் மனக்கண்முன் தோன்றும். இத்தகைய நினைவுகளும் பகற் கனவுகளும் பாட புஸ்தகங்களைப் படிக்கும் போதும் தோன்றி அவற்றிலே உள்ளத்தைச் செல்ல விடாமல் தடுத்து விடும். ஸ்தூலமாகத்தான் ஔரங்கசீப், சிவாஜி முதலான பெயர்களையும் அவர்களைப்பற்றிய கதைகளையும் தெரிந்துகொள்வேன்; பாக்கியெல்லாம் கனவு-லோக அனுபவங்கள்தான்!

உபாத்தியாயர் ஔரங்கசீபின் செயல்களையும் குணதிசயத்தையும் புஸ்தகத்தில் உள்ளபடியே படித்து ஒப்பிக்க வேண்டுமென்று வற்புறுத்துவார்; அப்போது அவரே என் மனக்கண்ணுக்கு ஔரங்கசீப் ஆகிவிடுவார்! நான் சிவாஜியாக மாறி அவருக்குத் தொந்தரவு கொடுக்க விரும்புவேன்! அந்நாளில் சிவாஜியைப் பற்றி நான் தெரிந்து கொண்டதெல்லாம், ஆடிக் காற்றிலே பறக்கும் காற்றாடிபோல சுழன்று போய், சிவாஜிமொகலாய சக்கரவர்த்திக்குத் தொந்தரவு கொடுத்தான் என்பதுதான்!

### விழிப்பு

இத்தகைய அடிப்படை ஞானத்திலே கட்டிய கட்டடம் தான் உயர்வகுப்பில் என் சரித்திரப் படிப்பு, என் உள்ளத்திலே பறந்துகொண்டிருந்த சிவாஜி என்ற காற்றாடி, ஆசிரியர்களுக்கு 'மலை எலி'யாகத் தோன்றியது. ஔரங்கசீபும் சிவாஜியும், "இந்தியா ஒரு நெல்லிக்காய் மூட்டைதான்!" என்ற சித்தாந்தத்திற்குச் சாட்சிகள் ஆயினர். நாளடைவில் என் இளமைக் கனவுகள் மங்கிப் போய், "தேசம் உருப்படாது; ஏதோ வெள்ளையராட்சியில்தான் பிழைத்திருக்க முடியும்" என்ற உணர்ச்சி மேலிட்டது. இந் நிலையிலே தான் திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளை முதலான தேசபக்தர்களின் பகீரதப் பிரயத்தனங்கள் நாட்டைக் கும்பகர்ண உபாசனையிலிருந்து விழிப்படையச்செய்து கொண்டிருந்தன.



நானும்,ஒருவாறுவிழிப்படைந்து தேசத்திற்கு உழைத்த உத்தமர்களைக் குறித்துத் தெரிந்து கொள்ளலானேன். வட இந்தியாவில் விபின சந்திரபாலர், திலகர், லஜபதிராய், அரவிந்தகோஷ் முதலானவர்கள் ஏற்றிவைத்த தீபத்தில் கொளுத்திய தீபம்தான் சிதம்பரம் பிள்ளை முதலானவர்களின் தேசபக்தி என்று தெரிந்துகொண்டதும், அந்த வடநாட்டுப் பெரியோர்களின் பெரு முயற்சிகளுக்கெல்லாம் மூலகாரணமான சக்திகளைக் குறித்தும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது.

## திருநெல்வேலியும் பிரம சமாஜமும்

ராஜாராம் மோகன் ராய் என்ற பெரியவரே நமது தேசியத்தின் தந்தை என்று மித்திரன் ஆசிரியர் ஸ்ரீ. ஜி. சுப்பிரமணிய ஐயர் திருநெல்வேலி மாணுக்கர்களாகிய எங்களுக்காகச் செய்த ஒரு பிரசங்கத்தில் வற்புறுத்திப் பேசினார். அதன்பின் நான் ராம மோகன ராயின் வரலாறு, கொள்கைகள் முதலியவற்றை ஒருவாறு ஆராயத் தொடங்கினேன்.

திருநெல்வேலி நகரில் திரு. கைலாசம் பிள்ளை என்ற ஒரு வழக்கறிஞர், ராஜாராம் மோஹனரின்பிரமசமாஜத்தை சார்ந்தவர் என்றுதெரிந்து அவ்வழக்கறிஞரைச் சந்தித்தேன். அவர் தாம் அமைத்திருந்த பிரம சமாஜக்கிளைச் சங்கத்தில் என்னைச் சேர்ந்துகொள்ளும்படி தூண்டினார்.

திரு. கைலாசம் பிள்ளை ராம மோகனரின் தேசியத்தை வற்புறுத்திப் பேசுவதில்லை: பிரம சமாஜக் கொள்கைகளையும், சமூதாயச் சீர்திருத்த விஷயங்களையும் விரிவாக வற்புறுத்துவார். "வெள்ளையர்களைக் குற்றம் சொல்வது சரியன்று; எல்லா ஹிந்துக்களும் பிரம சமாஜத்தில் சேர்ந்துகொண்டு மூட நம்பிக்கைகளையும் ஜாதி பேதங்களையும் ஒழித்துவிட்டால் போதும். அதுவே இந்தியா மேல் நிலையடைவதற்குக் காரணமாகும்" என்று திரு. கைலாசம் பிள்ளை என்னைப்போன்ற மாணவர்களுக்கு உபதேசம் செய்து வந்தார்.


திருநெல்வேலியில் அக்காலத்திலே கிறிஸ்து மதம் பரவி வந்ததைத் தடுப்பதற்கும் பிரம சமாஜமே ஒரு நல்ல சாதனம் என்பது திரு. கைலாசம் பிள்ளையின் கருத்து. தாழ்த்தப்பட்ட வகுப்பினர் கூட்டம் கூட்டமாகக் கிறிஸ்து மதப் பிரவேசம் செய்ததைத் திரு கைலாசம் பிள்ளையின் பிரம சமாஜ முயற்சிகள் தடுத்துவிடவில்லை. எனினும் உயர்குலத்தினர் என்று சொல்லப்பட்டவர்களில் பலரையும் கிறிஸ்து மதப் பிரவேசம் செய்யாமல் தடுப்பதற்கு அக்காலத்துப்பிரமசமாஜ முயற்சிகளும் திருநெல்வேலியில் காரணமாக இருந்தன. மாணுக்கர்களில் கிறிஸ்து மதப் பிரவேசம் செய்ய எத்தனித்த சிலரையும் திரு. கைலாசம் பிள்ளை தடுத்துச் சொந்த மதத்தில் பற்றுள்ளவர்களாகச் செய்தார். ஆனால் திருநெல்வேலிப் பிரம சமாஜம் சமூதாயச் சீர்திருத்தத் துறையில் விசேஷமாக ஒன்றும் சாதித்துவிடவில்லை. பிரமசமாஜத் தலைவர் என் போன்றவர்களைத் தன் வீட்டில் சம பந்தி போஜனத்திற்கு அழைப்பார். எனினும் பிரம சமாஜக் கொள்கைகளில் பழுத்த அறிவு வாய்ந்தவரும் திருநெல்வேலிச் சங்கத்தின் அங்கத்தினருமாகிய தொண்டைமான் வகுப்பினர் ஒருவரோடு திரு. கைலாசம் பிள்ளையின் நண்பர்களும் உறவினரும் பந்தி போஜனம் செய்ய மறுத்துவிட்டார்கள். அந்த நிகழ்ச்சிக்குப் பின் நான் அந்தச் சங்கத்திலிருந்தும் என்னை விடுவித்துக்கொண்டேன்.

பிரம சமாஜத்திற்குப்பின் ஆரிய சமாஜம் என் உள்ளத்தை வசீகரித்தது. ஸ்ரீ. கஹான் சந்திரவர்மா என்ற ஆரிய சமாஜி ஒருவர் திருநெல்வேலிக்கு வந்து தயானந்த சரஸ்வதியின் கொள்கைகளைக் குறித்து ஆவேசமாகப் பேசினார். என் உள்ளத்தை நான் வழக்கம்போல் எங்கேயோ காற்றுடிபோல் பறக்கவிட்டு விட்டேன். அவர் சொன்னதில் இப்போது ஞாபகம் வருவதெல்லாம் "சூரிய ஒளியின் ஏழு நிறங்களைத்தான் சூரியனுடைய ஏழு குதிரைகளாக வேதம் சொல்லுகிறது!" என்ற விநோதக் கொள்கைதான். இதைக் குறிப்பிட்டு, மறுநாள் வகுப்'பில் திரு. சுந்தர சாஸ்திரியார் என்ற விஞ்ஞான ஆசிரியர் 'ஒரு குதிரைச் சிரிப்பு'ச் சிரித்தார். அந்தச் சிரிப்பிலே பறந்து போய்விட்டது எனக்கு அந்நாளில் கிடைத்திருந்த ஆரிய சமாஜ ஞானமெல்லாம். ஆனால் "உத்தம தேச பக்தரான லாலா லஜபதிராய் ஆரிய சமாஜியல்லவா?" என்ற எண்ணம் பின்னாளில் ஆரிய சமாஜத்தின் மீதும் தயானந்தர் மீதும் அன்பை வளர்த்தது.

* * * *

காற்றுடியைப்போல் என் இளமையுள்ளம் பல வேறு கொள்கைகளுக்கிடையே சுழன்று கொண்டிருந்தது. நிச்சய புத்தியாவது திடநம்பிக்கையாவது ஏற்படவில்லை. ஆனால் "அம்மியும் பறக்கும் ஆடிக்காற்றில்" என்பார்களே, அத்தகைய ஆடிக்காற்றாக வீசியது, திரு. சிதம்பரம் பிள்ளை முதலானவர்கள் தோற்றுவித்த அரசியல்-இயக்கம். அதில் என் உள்ளமாகிய காற்றுடி உள்ளபடி சுழலத் தொடங்கியதும், என் உத்ஸாகம் ஒரு புதுமை-வெறியாகிவிட்டது.






கோபு, பாலு, மணி, அம்பி நான்கு பேரும் அவர்கள் பள்ளிக்கூடத்தில் முறட்டுப்பசங்கள் என்ற பெயரைப் பெற்றிருந்தார்கள். எந்த விஷமம் செய்வதானாலும், நான்கு பேருமாக யோசித்து விட்டு ஒரு முடிவுக்குவந்து, அதன்படி தங்கள் விஷமத்தை வெற்றிகரமாகச் செய்து முடிப்பார்கள். இதனால் இவர்களுக்கு 'வானர சேனை' என்ற பட்டப் பெயர் எங்கும் வழங்கி வரலாயிற்று.


இவர்களுடைய வகுப்பில் பிச்சை,சுப்பு என்ற இரண்டு பையன்கள் இருந்தார்கள். எப்பொழுதும் இவர்கள் தான் வகுப்பில் முதலாவதாக வருவது வழக்கம். கோபுவையும், அவன் சிநேகிதர்களையும் கண்டால் இவர்களுக்குக் கட்டோடு பிடிக்காது. அதனால் பள்ளிக்கூடத்து வாத்தியார்கள் பிச்சையையும் சுப்புவையும் ரொம்பப் புகழ்வார்கள்.

ஒரு சமயம்பள்ளிக்கூடத்தில் தலைமை உபாத்தியாயர் ஏழ்மையைப்பற்றி ஒரு பிரசங்கம் செய்தார். பின், "மாணவர்களே! இன்றையிலிருந்து நம் பள்ளிக்கூடத்தில் ஏழை மாணவர்களுக்குப் படிப்பு அளிக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அவர்களுக்கு உபகாரம் செய்ய நாம் கொஞ்சம் பணம் சேகரிக்க வேண்டும். நம் பள்ளிக்கூடத்திற்காக எந்த மாணவன் அதிகத் தொகை வசூல் செய்து கொண்டு வருகிறானே, அவனுக்கு நல்ல மரியாதை அளிக்கப்படும். பணம் இன்னும் ஒரு வாரத்தில் வந்தால் நலம்" என்று கூறினார்.

"இந்த கோபுப் பயலை ஏமாற்ற நல்ல வழி கிடைத்து விட்டதடா" என்றான் பிச்சை.

"ஆமடா, அவனை ஜாஸ்தி சம்பாதிக்க விடக்கூடாது" என்று சொல்லிக்கொண்டான் சுப்பு.

கோபுவின் காதில் இவர்கள் பேச்சு விழுந்தது. "ஓஹோ! அப்படியா சமாச்சாரம்! பார் என்ன செய்கிறேன்" என்று நினைத்தான் கோபு.



அன்று பிரசங்கம் முடிந்து, கோபுவும் அவன் சிநேகிதர்களும் வீட்டுக்குப் போகும் வழியில், அவர்கள் பணத்தை எப்படி சேகரிக்கவேண்டும் என்பதைப் பற்றித் தர்க்கித்தபடியே சென்றார்கள்.

'வானர சேனை' ஒரு முடிவிற்கு வந்தது. ஒவ்வொருவனும், தலைக்கு இரண்டணு போட்டு, எட்டணுவுக்குக் கடலை, கரும்பு, பெப்பர்மிண்டு முதலியவைகளை வாங்கினார்கள். அவைகளை ஒரு சிறியபாப்பா வண்டியில் வைத்துத்தள்ளிக் கொண்டு போய் ஒரு மரத்தடியில் வைத்துக்கொண்டு விற்றார்கள். இரண்டு நாளாக விற்றும், ஒரு அணுதான் அவர்களுடைய கைக்கு வந்தது. மிகவும் வருத்தத்துடன் நாலுபேரும் உட்கார்ந்திருந்தார்கள்.

"சுப்புப்பயல் இந்நேரம் நிறைய சம்பாதித்திருப்பாண்டா" என்றான் மணி.

"அவனுக்கென்ன, வாத்தியார்களே தலைக்கு ஒரு ரூபாய் அவனிடம் கொடுத்திருப்பார்கள், காக்கான்ணுபிடிக்கறான் அவன்" என்று அலுத்துக் கொண்டான் கோபு.

"எப்படியும் இன்னும் நாலைந்து நாட்கள் இருக்கிறதுடா. அதற்குள் பார்த்துக்கொள்வோம்." — பாலு எல்லோருக்கும் சமாதானம் கூறினான்.

தூரத்தில் பிச்சையும், சுப்புவும் வந்துகொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் 'வானரசேனை'க்கு அவமானமாக இருந்தது. சேனைத் தலைவனை கோபு அவர்களை எதிர்க்கத் தயாராக இருந்தான்.

பிச்சையும், சுப்புவும் இவர்களை நெருங்கும்போது உரக்கப் பேசிக்கொண்டே வந்தார்கள்.

"ரொம்ப அதிசயமாத்தாண்டா இருக்கு, அவன் அப்படிப் பண்ணினது." என்றான் சுப்பு.

"ஆமடா, தலை கீழா நின்றுண்டு கையினாலே நடக்கரதுன்னா அதிசயமில்லாமே அது என்னடா?"

இவர்கள் பேச்சு கோபுவின் காதில் விழுந்தது. "யாரு அப்படி நடக்கரா?" என்றான்.

"பக்கத்துத் தெருவிலே ஒரு வித்தை—காட்டி அப்படியெல்லாம்பண்றான். உனக்குப்பார்க்கணுமானா, இப்பவே போ; இல்லாட்டா அவன் போயிடுவான்" என்றார்கள் பிச்சையும், சுப்புவும்.


கோபுவுக்கும் அவன் சிநேகிதர்களுக்கும் அந்த ஆச்சரியத்தைப்பார்க்க மிகவும் ஆவலாக இருந்தது. பிச்சையிடம் தங்கள் வண்டியைக் கவனித்துக்கொள்ளச்சொல்லிவிட்டு, பக்கத்துத் தெருவை நோக்கி நான்கு பேரும் விரைந்தார்கள்.

தெருவை அடைந்ததும் தான் அவர்களுக்குத் தங்கள் பிழை நினைவிற்கு வந்தது. "அடே, நம்மை ஏமாற்றுவதற்காக அவர்கள் பொய் சொல்லி நம்மை இங்கே அனுப்பியிருக்கிறார்கள். இங்கே வித்தையும் காட்டல்லே ஒன்றும்காட்டல்லே. வாங்கோ அவர்களை உதைப்போம்" என்று சொல்லிக்கொண்டே தங்கள் வண்டியைப் பார்க்க ஓடி வந்தார்கள். வந்த இடத்தில் சுப்புவையும், பிச்சையையும் காணவில்லை. வண்டி காலியாகக் கிடந்தது. வாழைப்பழத்தோலும், பெப்பர்மிண்டு சுற்றிவைத்திருந்த காகிதமும் வண்டிக்கு நாலு பக்கமும் பறந்துகொண்டிருந்தன.

'வானர சேனை'க்குத் தன் தோல்வியை ஒத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. துக்கமும் ஆத்திரமும் தொண்டை அடைக்க வண்டியை இழுத்துக்கொண்டு அவர்கள் வீடு போய்ச் சேர்ந்தார்கள்.

இரண்டு, மூன்று நாள் மறுபடியும் நாலு பேரும்சேர்ந்து யோசனை செய்யலானார்கள். ஒரு வழியும் புலப்படவில்லை. அவர்கள் ஏமாந்து போகவேண்டியதாயிற்று.

ஒரு நாள் ராத்திரி, கோபு தூங்காமல் யோசனை செய்து கொண்டிருந்தான். "இன்னும் இரண்டு நாள்தானே பாக்கியிருக்கிறது. அதற்குள் பணம் எப்படிச் சேரும்? இதற்கு என்ன செய்வது? அந்த இரண்டு சனியன்களும் எங்களை ஏமாற்றிவிட்டன. நாசமாய்ப் போகட்டும் அதுகள்" என்று பிச்சையையும் சுப்புவையும் சபித்தான்.



திடீர் என்று பக்கத்து அறையிலிருந்து குறட்டை சப்தம் பலமாகக் கேட்டது. அவன் தகப்பனாருடைய அத்தை அங்கே படுத்துக்கொண்டு குறட்டை விட்டுத் தூங்கிக்கொண்டிருந்தாள். கோபு மெள்ள அவள் அறைக்குள் எட்டிப் பார்த்தான். மனித சொரூபமே இல்லாத அவன் அத்தைப் பாட்டி அங்கே ஒரு மூலையில் சுருண்டு கிடந்தாள். அவள் மூச்சு விடும்பொழுது அவள் முகத்தில் தென்படும் விகாரம் பார்க்க வேடிக்கையாக இருந்தது. கோபுவுக்கு ஒரு யோசனை தோன்றியது. சந்தோஷத்துடன் தன் படுக்கையில் சென்று படுத்துக்கொண்டான். அவன் மறுபடி எழுந்து பார்த்தபோது காலை ஏழு மணி.

அன்று பள்ளிக்கூடம் சென்றதும் அவன் தன் சகாக்களிடம் தன் யோசனையைக் கூறினான். கோபு சொல்லச் சொன்னபடியே, மணி பள்ளிக்கூடத்தில் உள்ள ஒவ்வொரு பையனிடமும் சென்று, "இன்று கோபுவின் வீட்டிற்கு எல்லோரும் வாருங்கள். உங்களுக்கு அவன் புது தினுசான ஒரு மிருகம் காண்பித்துக் கொடுப்பான். பிரவேசக் கட்டணம் ஒரு அணாதான். ஆனால் நீங்கள் கொடுத்த காசை அப்புறம் திருப்பிக் கேட்கக் கூடாது" என்று அறிவித்தான்.

மத்தியானம் கோபு வீட்டுத் தோட்டத்தில் ஏகக்கூட்டம். வீட்டின் ஒரு அறையில் கோபுவின் அத்தைப் பாட்டி படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள். மத்தியானம் ஆனதால் அவளுக்கு நல்ல தூக்கம். குறட்டையின் சப்தம் அந்த வீடு முழுவதும் கிடுகிடுத்துக் கொண்டிருந்தது. வெளியே பாலு எல்லோருக்கும் டிக்கட் கொடுத்துக்கொண்டிருந்தான். அம்பி பணத்தை எண்ணி எண்ணி ஒரு பையில் போட்டுக்கொண்டிருந்தான். கோபு ஒவ்வொரு பையனாக அழைத்து, பாட்டியின் அறையில் இருந்த ஜன்னல் வழியாக அவளை எல்லோருக்



கும் காண்பித்துக் கொண்டிருந்தான்.

அத்தைப்பாட்டியைப் பார்த்த ஒவ்வொரு பையனும் அவளுடைய கறுத்த நிறத்தையும், பருத்த தேகத்தையும், அவள் மூச்சு விடும்பொழுது அவள்முகம் அடையும் விகாரத்தையும்கண்டு, நிஜமாகவே அங்கே ஒரு மிருகம்தான் கிடக்கிறது என்று நினைத்து, ஆச்சர்யத்துடன் பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் நின்றார்கள். அன்று 'வானரசேனை'க்கு நல்ல வேட்டை. ஏழு ரூபாய் வரை கையில் பணம்சேர்ந்துவிட்டது. அவர்களுடைய சந்தோஷத்திற்குக் கேட்கவா வேண்டும்?

வெளியே ஏக ரகளையாக இருந்ததனால், பாட்டி திடீர் என்று விழித்துக்கொண்டாள். கோபுவையும், அந்தக் கூட்டத்தையும் கண்டதும் அவளுக்கு கோபம் வந்துவிட்டது. இதை அறிந்த கோபு, சமாளித்துக்கொள்ள, பையன்களைப் பயமுறுத்தி, வெளியே அனுப்பிவிட்டான்.

பாட்டி கோபித்துக்கொண்டு, "இந்தகோபு செய்யற அக்கிரமத்தை யாரால் சகிக்கமுடியும்? ஒரு நிமிஷம் நிம்மதியா தூங்கவிடாமல் இப்படிக் கொம்மாளம்அடிக்கறானே! நான் போறேன் ஊருக்கு." என்று சொல்லி



தன் மூட்டை முடிச்சுகளை சுருட்டிக்கொண்டு, ரயிலுக்குக் கிளம்பிவிட்டாள். கோபுவின் அப்பா அவளை கண்டிப்பதாகச் சொல்லியும், அவள் அங்கே நிற்கவில்லை.

சாயங்காலம் கோபுவை அவன் அப்பா கூப்பிட்டனுப்பினார். "ஏலே கோபு, இங்கே வா. நீ செய்த உதவிக்கு இந்தா இதை வைத்துக்கொள்." என்று அவன் கையில் ஒருரூபாயை திணித்தார்.

பாட்டி சென்றதனால் தனக்கு உதைவிழுமே என்று பயந்திருந்த கோபுவுக்கு இது ஆச்சர்யமாக இருந்தது. அவன் பேந்தப்பேந்த விழித்தான்.

அப்பா சொன்னார், "அத்தை இங்கே வந்தாளோன்னோ, அதிலேந்து என்னண்டை தொணதொணன்னு ஏதாவது சொல்லி என்னை வேலையே செய்ய விடாமல் பண்ணிண்டிருந்தா. அவளை ஊருக்கு எப்படி திருப்பி அனுப்பறது என்று முழிச்சிண்டிருந்தேன் நீ இப்போ அவளை அனுப்பிவிட்டயோன்னோ, அதுக்காகத்தான் இதை உனக்குத்தந்தேன்."

மறுநாள் பள்ளிக்கூடத்தில் என்ன நடந்தது தெரியுமா? கோபுவின் பெயர்தான் பணம் கொடுத்தவர்களின் "லிஸ்டில்" முதலாவதாக இருந்தது. ஏமாந்து போன பிச்சையும், சுப்புவும் மூஞ்சியை தூக்கிக்கொண்டு ஒரு மூலையில்போய் உட்கார்ந்து கொண்டார்கள்.

—::—


## "சுதேசமித்திரன்" வாரப்பதிப்பு

### சந்தா விவரம்

(சந்தாவை முன்னதாக கட்டவேண்டும்.)

| | இந்தியா சிலோன் | வெளிநாடு |
|---|---|---|
| 1-வருஷம் | 13 0 | 18 0 |
| 6-மாதம் | 7 0 | 9 8 |
| 3-மாதம் | 3 12 | 5 0 |

தனிப்பிரதி அணா 4


3-மாதத்திற்கு குறைந்து சந்தா ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

மானேஜர்,—"சுதேசமித்திரன்" ஆபீஸ், மவுண்ட் ரோடு, மதராஸ்


## கட்டுரையாளருக்கு

"சுதேசமித்திரன்" வாரப் பதிப்பில் கட்டுரைகள், கதைகள், ஹாஸ்ய கதைகள், கவிதைகள் முதலியவற்றை எழுத விரும்பும் நண்பர்கள், தங்களுடைய கதா பாத்திரங்களையும் கற்பனையின்மூலமே சிருஷ்டி செய்யும்படி கோருகிறோம். தறிப்பாகச் சுட்டிக் காட்டும் வண்ணம் ஊரையோ, பேரையோ தறிப்பிடாதிருக்க வேண்டும்.

— ஆசிரியர்



வரகூர் வேங்கடதாஸன்

## இதற்கு முன்

"உக்ரோதயம்" என்பது, ஓர் அதிசய நாகரத்ன மாலையின் பெயர். அம்மாலையை அணிந்தவள் 'பூஸுந்தரி' என்பவள். கங்கநாட்டரசன் சிவமாறன் என்பவனின் புதல்வி பூஸுந்தரி. அவளையும் அம்மாலையையும் அடையவேண்டும் என்று உறுதிகொண்டான் பாண்டியன் ராஜஸிம்மன். பூஸுந்தரியைப் பாண்டியனுக்குக் கொடுக்க மறுத்தான் சிவமாறன். அது காரணமாகப் போர் மூண்டது.

போரில் ராஜஸிம்மனிடம் தோல்வியடைந்தான் சிவமாறன். உடனே தன் புதல்வி, புதல்வர்களுடன் பல்லவ நாட்டின் தலைநகரான காஞ்சியை அடைந்தான். பல்லவன் உதவிபுரிவதாக வாக்குறுதி அளிக்கின்றான். திடீரென்று பல்லவன் மரணமடைகிறான். அவனுக்குப் பின் அரசாளச் சந்ததி இல்லை.

ராஜவம்சத்து நந்திவர்மனும், பல்லவனின் கணிகை மகனான சித்திரமாயனும் அரசாட்சிக்குப் போராடுகிறார்கள். நகரமக்கள் சபை கூடுகிறது. அதில் நந்திவர்மன் அரசனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். இதனால் சித்திரமாயன் பகை கொண்டு நாட்டை விட்டோடி பாண்டியனை அடைகிறான்.

இந்நிலையில் சிவமாறன் பூஸுந்தரியை நந்திவர்மனுக்கு மணம் புரிவிக்க முற்படுகிறான். அவள் மறுத்து பாண்டியனை விரும்புகிறாள்; அவள் சகோதரர்களான வல்லபன், குணபரன், இருவரும் பூஸுந்தரியைப் பாண்டியனுக்குக் கொடுக்க விரும்பி பாண்டியனுடன் போகிறார்கள்.

பூஸுந்தரியை அடைய விரும்பிய நந்திவர்மனும் அவளால் அவமானம் அடைகின்றான்.

எனவே, பாண்டியன் படைகளுடன் காஞ்சியை முற்றுகையிடுகிறான். போருக்குப் புறப்பட்டுக் கடும்போர் செய்கிறான் நந்திவர்மன். பல்லவ-பாண்டியப் போரில் பாண்டியனுக்கு உதவிபுரிய வந்த சளுக்கிய விக்கிரமாதித்தனை அநிருத்தர் சூழ்ச்சியால் சமாதானப்படுத்தி, அவனை நாடு திரும்பச் செய்கிறார். போர் நடக்கின்றது. நந்திவர்மன் தனிப்படையுடன் சென்று தாணுரவியின் உபாயத்தினால் பாண்டியனைமட்டும் சிறைப்படுத்தி விடுகின்றான். அவனை மீட்க வந்த சேனாதிபதி மாறன்எயினனும் சிறைப்படுகின்றான்.



62

## கங்க கன்னிகையின் வெற்றி

பாண்டியன் கைகொட்டிப் பெருநகை செய்தான். நந்திவர்மனுக்கு முன்னர் வந்து கம்பீரமாக நின்றான்.

"பல்லவ வீரோத்தம, உன்னுடைய தோள்களின் திமிரை ஒடுக்குவதற்கு என் தோள்கள் பொருமிக்கொண்டிருக்கின்றன. உன்னுடன் போராடுவதற்குக் களிப்படைகின்றேன். பன்னெடுங்காலமாகத் தினவு கொண்ட இந்தத் தோள்கள், இன்று ஆறுதல் அடைய வாய்ப்பு உண்டாகிவிட்டது. உனக்கு நல்வரவு கூறுகிறேன்: ஆனால், ஒன்று!...நீயும் மகாவீர பரம்பரையில் தோன்றியவன்! நானும் பாண்டிய குலத்தில் ஒருவன்! உனக்கும் எனக்கும் போர் மூண்டதற்குக் காரணம் யாவரும் அறிந்ததே;...இங்குள்ளவர்கள் நன்கு அறியும்படியாக— அந்தக் காரணத்தின் லக்ஷ்யமாக வந்து அதோ அமர்ந்திருக்கின்றாள் கங்க கன்னிகை!—அவள் காரணமாக எழுந்த போர்;— இன்று அவள் முன்பாக நமக்குள் போராட்டம் நடக்க இருக்கின்றது. இதைவிட வாய்ப்பான தருணம்; இல்லை,... பிரதானமாக வெற்றியடைந்தவர் லக்ஷ்ய சித்தி அடையவேண்டும்;...என்ன சொல்கிறாய்?..." என்று எடுத்த குரலில் கேட்டான் பாண்டியன் ராஜஸிம்மன்.

உடனே நந்திவர்மன் 'கல கல' வென்று நகைத்தான்.

"பாண்டிய ஸிம்மமே, என்ன சொல்கிறாய்?......உனக்கு லக்ஷ்யமான கங்க கன்னிகைக்கு முன்னர் உன்னைப் படுதோல்வியடையச் செய்வதே என் லக்ஷ்யம்; எனவே, என் லக்ஷ்யம் சித்தி பெற்றுவிட்டால்—நீ வைக்கும் லக்ஷ்யம் யாதோ?—" என்றான் நந்திவர்மன் நிமிர்ந்த பார்வையுடன்.

"அன்பா, நன்றாகக் கேட்டாய்! நான் உன்னுடைய வெற்றிக்குப் பின் வைக்கும் லக்ஷ்யம்—இப்போது என்னிடம் கொடுக்கக்கூடியது— என் வீரம்—என் ஸாம்ராஜ்யத்தின் தலைமைப் பொறுப்பு—இவ்விரண்டும் உனக்கு உரியன. இதோ என் தலை மகுடம் பல்லவவேந்தனின் வெற்றிக்குத் தலைவணங்கும். நீ கொடுப்பது..." என்று தீவிரமான குரலில் கூறினான் பாண்டியன்.

சபையில் ஆரவாரம் மூண்டது. அநிருத்தர், சிவமாறப் பிரபு, தாணுரவி, முத்தரையன், உதயசந்திரன் ஐவரும் வியப்பால் பதற்றம் அடைந்தார்கள். கங்காதேவியும் கங்க கன்னிகையும் மேலே நடப்பது என்னவென்று கூர்ந்து பார்த்தார்கள். பாண்டியனின் லக்ஷ்ய வார்த்தைகளைக் கேட்டு மனம் பதறிக்கொண்டிருந்தாள். தன் நிலை என்னாவது என்பதே அவள் மனச்சுமையாக இருந்தது.

நந்திவர்மன் இடிக்குரலில் கூறலானான். சபை 'கல்'லென்று ஒலியவிந்தது.

'பாண்டிய ராஜதிலகமே, உன் வார்த்தைகளுக்குப் பெரிதும் பாராட்டுகின்றேன்; நீ சிறைப்பட்டவன். இப்போதே நீயும் உன் ஸாம்ராஜ்யப் பொறுப்பும் என் கீழ் அடங்கியதாகவே மதிக்கப்பெறும். இந்நிலையில் நீ பேசியன வீண்!—நீ சிறைப்பட்டதிலிருந்தே உன் வீரம் மங்கிவிட்டதை அறியவில்லைபோலிருக்கிறது. எனினும், நான் சொல்வதைக் கேள்—உன் லட்சியமாக உள்ள கங்க கன்னிகையை நீ மறந்துவிடுவதே உன் தோல்விக்கு—ஏற்ற ஈடு; நீ தோல்வி கண்டபின் கங்க கன்னிகையை நினைப்பது வெறுக்கத்தக்க செயலாகும். அவளை மறப்பதொன்றே நீ எனக்கு ஈடுவைக்கும் லட்சியம். அதுவே உனக்கும் விடுதலையை அளிக்கும்...ஆனால், நான் தோல்வியடைந்தால் 'பல்லவமல்லன்' என்ற என் பட்டப்பெயரை யான் இழந்துவிடுகின்றேன். இதோ என் மார்பில் உள்ள உன் லக்ஷிய மங்கையின் மாலை — உக்ரோதயத்தை உனக்குக் கொடுக்கின்றேன் நான் அடையக் கருதியிருக்கும் கங்க கன்னிகையை அறவே யான் மறந்துவிடுகின்றேன் — அவளை மறப்பதே— என் தோல்வியின் முடிவில் உறுதி —"

நந்திவர்மனின் சொற்களைக் கேட்டவுடன் முதன்முதலில் கைகொட்டிப் புன்னகை செய்தவள் கங்க கன்னிகையேதான். அதைக் கண்ட அனைவரும் கரகோஷம் செய்து ஆர்ப்பரித்தார்கள்.

கங்ககன்னிகையின் புன்னகையைக் கண்ட நந்திவர்மன் கடுஞ்சீற்றம் அடைந்தான்.

"கங்க ராஜ குமாரியின் புன்னகை மறையட்டும். என் தோல்வி உறுதியானால் யான் உன்னை மறப்பது முடிவு; உன்னை வெறுப்பதும் என் உள்ளக் கிடக்கை; ஆனால், என் லக்ஷ்யத்தைச் சிதைத்த நீ, உன் வாழ் நாள் முழுவதும் ஏங்கியழும்படியாகக் கடுந் தண்டனை அளிப்பதும் உறுதி—அதன் பின்" என்று கடுங்குரலில் நந்திவர்மன் கூறலானான். அவன் முகம் சிவந்து பொருமியது.

அப்போது சிவமாறப்பிரபு எழுந்து நின்று சொன்னார். "பல்லவமல்லா, உன் வெற்றியில் எனக்கும் இங்குள்ளவர்களுக்கும் நம்பிக்கை இருக்கிறது. நீ மயங்காதே. என் மகள் என் விருப்பத்துக்குக் கட்டுப்பட்டவள்—உன் வெற்றிக்கு முடிவில் பார்—" என்று நயமொழிகளில் கூறினார். சரேலென்று கங்க கன்னிகை எழுந்து நின்றாள்.

"இந்த மல்லரங்கில் முடிவு எதுவாயினும், யான் கொண்ட விரதம் மாறாது. வெற்றியோ, தோல்வியோ, இந்த உடலம் பாண்டிய வேந்தரிடம் அடிமைப்பட்டிருக்கிறது" என்றுகூறியமர்ந்தாள்.

உடனே அநிருத்தர் எழுந்து நின்று கூறினார்.

"பாண்டிய, உண்மையில் உங்களிருவருடைய போராட்டமும் மதிக்கத்தக்கது. நீ வெற்றி கண்டால்—நந்திவர்மன் கூறியவிதம் 'உக்ரோதயம்' உன்னை அடையும்; 'பல்லவ மல்லன்' என்ற பட்டப்பெயரும் அவனைவிட்டுவிலகிவிடும். உன் லக்ஷ்யமான கங்க கன்னிகையையும் அவன் மறந்துவிடுவான்— எனவே, நீ தோல்வியடைந்தால் அவளை மறப்பதுடன் உன் விடுதலைக்கும் வழி தேடிக்கொண்டவனாவாய்;..." என்று நகை செய்தார்.

"பாண்டிய, நிச்சயம் நீ தோல்வியடைந்தால் அவளை நீ இழப்பதென்றே முடிவாகின்றது..." என்றார் ஹிரண்யவர்மர்.

விசித்திரமான முடிவு!......என் விடுதலைக்கு என் வெற்றி உக

வுமேயல்லாமல் — என் தோல்வி எனக்கு விடுதலை அளிக்குமானால் அது விசித்திரமாகும். எனவே, இது சூழ்ச்சி! — இதற்கு நான் இணங்குபவன் அல்ல. 'பல்லவ மன்னனின்' பெயருக்குப் புகழ் கொடுப்பது இனி உங்களுக்குப் புலப்படாமல் போகிவிடாது. நான் தோல்வியடைந்தால் கங்க கன்னிகையை மறப்பது மட்டுமல்ல — என் வாழ்க்கையின் முடிவே இவ்விடம் என்றுதான் சொல்வேன்..." என்றான் பாண்டியன் கம்பீரமான தொனியில்.

"உண்மை அதுவேதான்" என்றான் மாறன் எயினன். சபையோர் திடுக்கிட்டார்கள் பாண்டியனின் சபதம் கேட்டு.

"என் மகள்......வீரம் இழந்த ஒரு பேடிக்கு உரியவளல்ல! வீரம் செறிந்த வித்தகனுக்கே உரியவள்......மல்ல யுத்தத்தில் வீரமும் பேடித் தன்மையும் புலப்பட்டு விடும்; இங்கே யார் என்ன பிதற்றி விட்டாலும் அது முடிவாகாது..." என்று கூறினாள் கங்காதேவி.

சிவமாறப் பிரபு கனல் விழியால் சுட்டுவிடுவதுபோல் நோக்கினார் அவளை. "இங்கேஎன்ன சூழ்ச்சிநடந்தாலும் அதை மதிப்பது என் லக்ஷ்யம் அல்ல; யான் இங்கே வந்தமர்ந்த லக்ஷ்யம் சித்தியாகி விட்டபின் எனக்குக் கவலையே இல்லை" என்று சொன்னாள் பூஸுந்தரி.

"இது என்ன?...சபைக்கு முன் பாண்டியனும், பல்லவனும் பேசி விட்டார்கள். முடிந்த முடிபாக என் முடிவை இவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று எண்ணுகிறேன். வெற்றி பெற்றவர் கங்க கன்னிகையை அடையத் தகுதி வாய்ந்தவர் என்றே சொல்கிறேன். இதனால் என் மீது யாரும் கோபம் கொள்ள வேண்டாம்; தோல்வியடைந்தவர் அவளை மறந்துவிடுவதே நல்லது......" என்றார் ஆசாரியர் அநிருத்தர்.

"ஆம்! இம்முடிவே நேர்மை!' என்று சபையில் பலரும் கோஷம் செய்தார்கள்.

கங்க கன்னிகை பூரிப்புடன் எழுந்திருந்தாள்.

"கவிஞருக்கு என் நன்றி! இம்முடிவை நான் விரும்பி என் விருப்பத்தை உணர்த்துகின்றேன். கவிஞரின் வாக்கு வெற்றி பெறட்டும்!...இப்போதுதான் கவிஞர் நேர்மையாகப் பேசுவதில் புகழ் பெற்றவராக மதிப்பைப்பெற்றார்" என்றாள். அவள் பேசிய பேச்சின் தொனி வழியாக யாவரும் அவளை ஒருங்கே நோக்கி உள்ளம் மறந்தார்கள் ஒரு கணம். உண்மை அதுதானே!

அவள் அமர்ந்துகொண்டாள்.

"என்ன சொல்வதென்று தெரியாமல் சொல்லிவிட்ட வார்த்தைகள் போலிருக்கின்றன!......கவிஞரின் சொற்கள் — பாதகமில்லை — கவிஞரே 'நியாயம்' என்பதை நன்றாக நினைவில் வைத்துப் பேசிய பேச்சு இது! —" என்றார் சிவமாறப்பிரபு.

"இதுவும் ஒரு சூழ்ச்சியின் முதலீடு!...அப்படித்தான் நான் கருதுகிறேன்" என்றான் நந்திவர்மன்.

பாண்டியன் இறுமாந்த நோக்குடன் நின்றான்.

"இதுவே முடிவு!...உண்மைதானா?" என்றான் பாண்டியன்.

"ஆம்!...கவிஞரின் வாய்மை பொய்யாகாது!" என்றான் நந்திவர்மன்.

கவிஞர் மல்லரங்களில் பாண்டியனுக்கு முன் வந்து நின்றார்.

"ராஜஸிம்மா, உன் ஸேனாதிபதியுடன் பல்லவ ஸேனாதிபதியான உதயசந்திரன் போர் புரியட்டும்;..." என்றார் அநிருத்தர்.



அமெரிக்க நிர்வாகத்தின் கடுமையான கண்டனத்திற்குப் பின்பும் தன் ரஷ்ய ஆதரவு பிரசாரத்தை நடத்திவரும் ஹென்ரி வாலஸ் (வலது). உத்ஸாகத்துடன் அவர் விடாது ரஷ்ய தூதர் கிராமிகோவுடன் (இடது) சம்பாஷிப்பதையே படம் காட்டுகிறது.



சேலம் ஹிந்து மகாசபை பிரமுகர் ஸ்ரீ ஈ. எஸ். பாலசுப்பிரமணிய அய்யரின் குமாரத்தி சௌ. சீதாலக்ஷ்மிக்கும், திருவிசநல்லூர் (மார்ஷல் & கம்பெனியிலிருக்கும்) ஸ்ரீ வி. பால ஸ்ரீனிவாசனின் சகோதரர் ஸ்ரீ டி. வி. நடராஜனுக்கும் ஜுலை 16-ல் சேலத்தில் விவாஹம் நடைபெற்றது.



"வேண்டாம்; எத்துணைவர் வந்தாலும் நான் எதிர் நிற்பேன். போராடி எய்த்தவனிடம் இனி, போராட வேண்டாம்..." என்றான் பாண்டியன்.

'வேந்தே, எய்தவன் நான் அல்ல: தடை சொல்லாமல் போர் புரியவிடுங்கள்" என்றான் மாறன் எயினன்.

'மாறன், இதோ மகுடத்தை வாங்கிக்கொள்;... இளைப்பாறுவது உன் கடமை!..." என்று கூறித் தலை மகுடத்தை மாறன் எயினனின் கையில் கொடுத்தான் பாண்டியன். மறு கணமே மாறன் எயினன் மகுடத்தைக் கையில் தாங்கியவனாய்ப் பின்னடைந்தான்.

அப்போதே நந்திவர்மன் புன்னகையுடன் சொன்னான்:—

"உதயசந்திரா, நீ திரும்பிச் செல்; எனக்குமுன் நின்ற பாண்டியனை நானே எதிர்கொள்கிறேன்" என்றான்.

உதயசந்திரனும் பின்னடைந்தான். முத்தரையனும் பின்னடைந்தான்.

'கவிஞரே, இம்முடிவு நிறைவேறிவிடுமென்று எண்ணிவிட்டீர்களா?...பின்னர் என்ன ஏற்படும் என்று யோசிக்கவில்லைபோலும்.." என்றான் நந்திவர்மன்.

"நந்திவர்மா, பல்லவமல்லன் என்ற பட்டப்பெயரைப் பாதுகாத்துக்கொள்; எல்லாம் நன்மைக்கே!..." என்றார் அநிருத்தர்.

"கவிஞரே, இம்மாலையை வாங்கிக்கொள்க!...யாருக்கு இம்மாலை உரியதென்று முடிவாகட்டும்..." என்று தான் அணிந்திருந்த 'உக்ரோதய' மாலையை எடுத்து அநிருத்தர் கையில் கொடுத்தான். அதன் ஒளி சபையில் மின்னலிட்டது. — பாண்டியனின் சிந்தையில் வில்விட்டது — கங்க கன்னிகையின் விழிகளில், மின்னல் ஒளி புரண்டோடியது.

மாலையை வாங்கிக்கொண்ட அநிருத்தர், சற்று அருகில் இருந்த ஆதனத்தில் அமர்ந்தார்.

மல்லரங்கில் ராஜஸிம்மனும், நந்திவர்மனும் முதன் முதலாகக் கைகொடுத்துக் கைதாங்கிப் போர் தொடங்கினார்கள். கணத்துக்குக் கணம் போர் கடுமையாயிற்று.

சபையில் அமர்ந்திருந்தவர்கள் மெய்ம்மறந்து எழுந்து நின்றார்கள். செயலற்றுச் சிந்தை கலங்கிப் பார்த்தார்கள்; கைகளைப் பிசைந்துகொண்டார்கள். தோள்களை மயிர் சிலிர்க்கக் குலுக்கிக் கொண்டார்கள். அங்காந்த வாயுடனும் பரபரப்புற்ற மனத்துடனும் கலங்கிய விழிகளுடனும் 'மற்போ'ரைப் பார்த்தார்கள்.

போர் நடந்தது. மகத்தான மல்லயுத்தம்; ஒரு கணம் ராஜஸிம்மனுக்குத் தோல்வியோ என்றும், மறு கணம் பல்லவ மல்லனுக்குத் தோல்வியோ என்றும் சொல்லும்படியாகக் கடும்போர் நடந்தது; வெற்றி தோல்வி — உறுதி கூற முடியாத வகையில் போர் நடந்தது.

பாண்டியனைப் பார்த்த கண்கள் பாண்டியனிடமே ஐக்கியமாயின. பல்லவனைப் பார்த்த கண்கள் பல்லவனிடமே ஒன்றுபட்டன.

இருவரும் மகாவீரர்கள். மல்ல யுத்தத்திலோ, இருவரும் மகா நிபுணர்களாயிருக்கிறார்கள். மல்லரங்கம் கடல் கலங்கியதெனக் கலங்கியது. மல்ல யுத்தம் கண்டவர்களின் மனங்களெல்லாம் கலங்கின. மல்ல வீரர்களின் உடலும் உள்ளமும் கலங்கியது. ஆனால், மல்ல யுத்தம் புரியும் பல்லவமன்னனும் பாண்டியனும் கலங்கியவர்களாய்த் தோன்றவில்லை. அவர்கள் போரைக் கண்ட கங்க கன்னிகையின் உள்ளம் கலங்கிற்றோ, என்னவோ? — அவள் விழிகள் அலமந்து மருண்டு நோக்கின,

மற்போர் புரிந்த மகா வீரர்கள் இருவரும் தங்கள் தங்கள் யுத்த சாமர்த்தியங்களுக்காகக் கணத்துக்குக் கணம் நகைத்துக்கொண்டார்கள்; வெற்றிக்காக ஒவ்வொரு கணமும் தருணம் எதிர்பார்த்தார்கள்.

"உண்மையான போர்! உக்கிரமான போர்! ஹா!..."

"உத்தம வீரர்கள்!......யுத்த முறைப்படி போராடும் உண்மை வீரர்கள்!...'இதைவிடக் கடுமையான மல்ல யுத்தம் காணவே முடியாது.'

'பல்லவ மல்லனுக்கு இணையானவன் பாண்டியனேதான்."

"யாருக்கு வெற்றியோ:...கங்க கன்னிகையின் பாக்கியம் எப்படியோ?"

இவ்விதம் மல்லரங்கில் அலைமேலலையாகப் பேச்சலைகள் மோதி எழுந்தன.


மத்த யானையுடன் மத்தயானை மோதினாற்போல மோதி நின்றார்கள் மன்னர்கள் இருவரும்.

இரண்டு நாழிகை வரையில் நடந்த போர் யாவருடைய உள்ளங்களையும் சுருக்கிட்டபடியே, ஒரு கணம் பெருஞ் சத்தத்துடன் முடிவை அடைந்தது.

பெருஞ் சத்தம்! — தூக்கி எறியப்பட்ட மத யானைபோல பல்லவ மன்னன் பாண்டியனால் தூக்கி எறியப்பட்டான். மலைக் குவடு உருண்டதென, மல்லரங்கில் பல்லவ மல்லன் உருண்டான். நினைவிழந்தான். உவகைப் பெருக்கால் நினைவிழந்தாள் கங்ககன்னிகை!

"வெற்றி, என் கனவு வெற்றி!" என்று தழுதழுத்தவாறே கூறினாள் கங்ககன்னிகை.

(தொடரும்)



(மதுரை: 42, தெற்காவணி) (கோவை: 234, ராஜா தெரு)

## சூதகத்தை நிறுத்தியது

குமரி (Tablets) சூதகக் கோளாறுகளை எந்த நிலையிலும் நிறுத்தவல்லது, நிமை விளைவிக்காமல் கஷ்ட நிவர்த்தியளிக்கிறது. ஆயிரக்கணக்கானவர்கள் திருப்தியடைந்திருக்கின்றனர் விலை ரூ. 3. நாள்பட்ட கோளாறுகளுக்கு விலை ரூ. 5. மிக்க கடுமையான கோளாறுகளுக்கு ரூ 8, கர்ப்பத் தடை மாத்திரைகள் (Tablets) 6 மாத உபயோகத்திற்கு விலை ரூ 4.



(வி. பி.க்கு 12 அணா அதிகப்படி.)

Mrs. P. DEVEE, F. D. S. (S. W)

Tollygunge :: CALCUTTA

ஸ்டாகிஸ்டுகள்: 1. ஹரி & ஸன், 93, சைனாபஜார், மதராஸ், 2. ராகவன் & கோ, ஸ்ரீ நரஸிம்மராஜா ரோட், பெங்களூர் ஸிடி. 3. K. C. மாத்யூ & கோ, கொமுஞ்சேரி, திருவாங்கூர், 4. J. திராத் & கோ, மகாத்மாகாந்தி ரோட், கராச்சி, 5. L. M. முகர்ஜி & ஸன்ஸ் லிட், 167, தரம்டோலா தெரு, கல்கத்தா. 6, சிவானந்த சித்தர் மெடிகல் ஹால் 92. ஸீ தெரு, கொழும்பு. 768, லோயர் தெரு, பாடுவலா (ஸிலோன்)

வாரியர்

## பிருங்காமலகாதி தைலம்

குளிர்ச்சி மிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப் படிப்பினாலோ வேலையினாலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.
(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்

கே. எஸ். வாரியரின்

அஷ்டாங்க ஆயுர்வேதசாலா

தெப்பக்குளம், திருச்சி.
(ஸ்தாபிதம்: 1936)




கிங் அரரூட்

குழந்தைகளுக்கும், வயோதிகர்களுக்கும் சிறந்த ஆகாரம் வைத்திய நிபுணர்களாலும், டாக்டர்களாலும் நன்மதிப்பு பெற்றது.

Sole Agents
EMPIRE TRADERS
4. BUNDER ST, MADRAS

## ப்ரஸித்த ஜ்யோதிஷர்

சாஸ்திர ஆராய்ச்சியையும், நீண்ட கால அனுபவத்தையும் கொண்டு, வருங்காலப் பலன்கள் தெளிவாகச் சொல்லப்படும்.
மூன்று கேள்விகள் ரூ. 2.
ஒரு வருஷ பலன் (மாதவாரியாக) ரூ. 6.
ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2.
பொருத்தம் பார்க்க ரூ. 2.
(1) ஜாதகம் (2) பிறந்த மணி, தேதி (3) எழுதும் நேரம் இவைகளில் ஒன்று அனுப்பவும்.

Prof. ஸ்வாமி, M. A.,
தபால் பெட்டி 1403, மதராஸ் 17.

## ஸ்ரீமத் பகவத்கீதை

★

சென்னை ஸம்ஸ்கிருத காலேஜ் உபாத்தியாயராய் இருந்த கீர்த்தனசார்ய ஸி. ஆர். ஸ்ரீனிவாஸய்யங்கார், பீ.ஏ., எழுதியது.

மூலத்துடனும், அத்வைத விசிஷ்டாத்வைத பாஷ்யச் சுருக்கத்துடனும், இதுவரையில் வெளியிடாத பல ரகஸ்யங்கள் அடங்கிய முன்னுரையுடனும், கண்ணனுடைய கருத்திற்கிணங்க எழுதப் பட்டது.

முழுகாலிகோ பயிண்டு செய்தது.

விலை ரூ. 3-8-0

(தபால் செலவு 0-8-0)

இன்னும் இதர புத்தகங்களும் கிடைக்கும்

★

எமது எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும். நேரில் விஜயஞ்செய்து தேவைக்கு ஆர்டர் செய்யவும். எல்லா 'மித்திரன்' ஏஜண்டுகள் மூலமும் பெற்றுக்கொள்ளலாம்.

★

புத்தக ஜாபிதாவுக்கு எழுதவும்.

மானேஜர்,
சுதேசமித்திரன் ஆபீஸ்
மவுண்ட்ரோடு, மதராஸ்.





## ரூ. 100 இனாம்

ஆச்சரியகரமான சக்தி வாய்ந்த சித்த யந்திரம் சக்தி வாய்ந்தது. "குப்த வசிகரண யந்திரத்தை" வைத்திருப்பதாலேயே கஷ்டமான காரியங்களிலும் வெற்றி பெற்றுவிடலாம். பலன் அளிக்கச் செய்வதில் எவ்வித கடின சாதனமும், தேவைகளும் அவசியமில்லை. இதனால் (ஆண், பெண்) நீர் விரும்பும் எவராகிலும் உனக்கு அடங்கி வருவர். அசுப நட்சத்திரங்கள், விரோதி பகை இவைகள் நீங்கி, பரீட்சை, வர்த்தகம், வழக்கு, லாட்டரி, ரேஸ், உத்தியோகம், சந்தானம், ஐசுவரியம், கடன் நிவாரணம், பயங்கர வியாதிகள் இவைகளில் வெற்றி பெறுவதோடு, அதிருஷ்டசாலியாகவும் இருப்பீர்கள். பொய் என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனாம். செம்பு ரூ. 2-0-0. வெள்ளி ரூ. 3-0-0. சுத்த தங்கம் ரூ. 15-0-0.

## நரையை ஒழியுங்கள்.

சாயம் மூலம் இல்லை எமது ஆயுர்வேத வாசனைத் தைலம். நரை மயிர் ஸ்திரமாகக் கருப்பாகச் செய்து, மீண்டும் நரை ஏற்படாமல் பாதுகாக்கும். மூளை பலவீனம், மந்தம் முதலியவற்றைப் போக்கி, தலைவலியைக் குணப்படுத்தும், பார்வையை சீர்படுத்தும். நம்பிக்கையில்லையேல் தொகை வாபஸ் என்ற உத்தரவாதம் பெறுங்கள். சொற்ப நரைக்கு ரூ. 2-8-0. அதற்கு மேற்பட்டது ரூ. 3-8-0. எல்லா நரைக்கும் ரூ. 5-0-0

DIN HITAISHI KARYALAYA
P. O. KATRISARAI (GAYA)

## கண்ணில் பூவிழுதல்

டிகான்ஸ் ஐக்யூர் (ரிஜிஸ்) ஒரு உத்தரவாதமான நிவாரணி. கண் வியாதிகள் எதற்கும் சிறந்தது. அபாயமற்றது. 1000-க் கணக்கான பேர் ஆபரேஷனில்லாமல் சொஸ்தமாயுள்ளானர். உலகப் பிரசித்தி பெற்றது. வெற்றிக்கு உத்தரவாதம். விவரம் இலவசம். விலை ரூ. 3. தபால் செலவு அணா 12.

## செவிடு

முழுச்செவிடு அல்லது அரைச் செவிடு, காதில் இரைச்சல், மற்றும் எக்காரணத்தினாலும் எவ்வித நோயானாலும் நாலே வாரத்தில் சொஸ்தப் படுத்துவதற்கு உத்தரவாதம். ஹானியற்றதும் உடனே பலனளிப்பதுமான மருந்து. கியாதிபெற்ற மூலிகை மருந்து. விவரங்கள் கேட்டால் எழுதுவோம்.

## குஷ்டம், வெண்குஷ்டம்

தீராத நோயும் தீரும். உடம்பு முழுவதுமோ அல்லது பாகத்தில் மட்டுமோ இருந்தாலும் சரி, எமது கியாதிபெற்ற ஹானியற்ற மூலிகைகளினால் நாலே வாரத்தில் பூரண குணம் காண்பீர்கள். விவரங்கள் கேட்டால் எழுதுவோம்.

KAMALA WORKS,
6, Panchpota, BENGAL.



## அவன் இறந்து விடுவானென்று கைவிடப்பட்டான்

ஈரல் குலைக்கட்டி வியாதி முற்றிவிட்டதால் குழந்தை பிழைப்பது அரிது என்று கைவிட வேண்டாம்.

அறியாமை, கவனக்குறைவு, சரியான சிகிச்சை செய்யத்தவறுதல், இவைகளால் குழந்தையின் நிலைமை மோசமாகிக்கொண்டு ஈரல் தடித்தல், ஈரலைச்சுற்றிய பாகம் வலி, ஜுரம், மூத்திரம், கண்கள், சருமத்தில் காமாலைக்குறியான மஞ்சள் நிறம், நீர் சேர்க்கை, அடிவயிறு வீக்கம், அடிவயிறு நரம்புகளின் வெளித்தோற்றம், கால், கை, முகம், வீக்கம், இவைகளைக் கண்டால், கவலைப்படாதீர்கள். இந்த ஸ்திதியிலும் ஜம்மி லிவர்க்யூர் 'காம்பௌண்ட்' உபயோகித்தால் குழந்தை சவுக்கியப்படலாம். முப்பத்தைந்து வருஷங்களுக்கு மேலாக, ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்கு ஜம்மி லிவர்க்யூர் உயிர்ப்பிச்சை அளித்திருக்கும் மருந்து என்று கீர்த்தி வாய்ந்துள்ளது. குழந்தை ஈரல்குலைக் கட்டி வியாதிகளுக்கு இதே உண்மையான ஔஷதமென்று சொல்வது மிகையாகாது.



ஜம்மியின்
லிவர்க்யூர்
உபயோகியுங்கள்

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டிகளுக்கு
எங்கும் கிடைக்கும்
யோசனை கேட்குமிடம்:
ஜம்மி வெங்கட்ரமணய்யா & ஸன்ஸ்
லிவர்க்யூர் ஆபீஸ் & கிளினிக்
மைலாபூர், மதுரை • பெரியதெரு, கும்பகோணம் • தெப்பகுளம் திருச்சினாப்பள்ளி
ஆர்க்காடு ஸ்ரீனிவாஸாசாரி தெரு, பெங்களூர் ஸிடி.

மாதவிடாய் நின்று விட்டதா? எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சுலபமாகவும் ஹானியின்றியும் 24-மணியில் வெளிப்படுத்தும். "சம்பகிரேசனி" உத்தரவாதமானது. 30 வருஷம் புகழ்பெற்றது. கவர்ன்மெண்டு ரிஜிஸ்டர்ட் விலை ரூ. 4—4—0 தபாற் செலவு அணா 12.

கர்ப்பத்தடை நீங்கள் விரும்பிய விதம் கர்ப்பத்தடை செய்ய "தம்பதி சாகா" சிறந்த மருந்து. ஹானியற்றது. சிரந்தரம் ரூ. 4—4—0 தாற்காலிகம் ரூ. 2—0—0 தபாற் செலவு அணா 12 தனி.

ஆண்மை "மதன் விலாஸ் ரஸாயன்" அற்புத மருந்து வீர்யமின்மை, நரம்புத் தளர்ச்சி, பசியின்மை கீல் வாயு, இருமல் முதலியவை ஒரே வாரத்தில் குணமாகும். வாழ்க்கையை நன்கு அனுபவிக்கலாம். ரூ. 2—8—0 தபாற் செலவு அணா 12.

Kaviraj M. Kavyatirtha (S. W)
70, Cornwallis Street, Calcutta 6.
Stockist: Milton & Miller, 157, Broadway, Madras.

## கதா மோகன ரஞ்சிதம்

3-பாகங்கள் விலை ரூ. 2-8-0
தபாற் செலவு பிரத்யேகம்.
மானேஜர், "சுதேசமித்திரன்" புத்தகசாலை, சென்னை.

தந்தி விலாசம்: "கோகுல" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57

# டி. எஸ். ஆர். & கோ.,

## கும்பகோணம்.

(பிராஞ்சு : மன்னார்குடி.)

**சந்தனாதித் தைலம் — அரைக்கீரை விதைத் தைலம்**

**கோகுல் கூந்தல் தைலம்**

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு

முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

சோல் ஏஜெண்டுகள்:—
**புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,**
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
**B. Balapattabi Chettiyar,**
246, Vysyal St.,
COIMBATORE.



## சக்தி ஆருடம்!

புகழ்பெற்ற சக்தி பால ஜோதிடரால் வருங்கால பலன்கள் தெளிவாகச் சொல்லப்படும். ஸ்ரீ தோண்டோ லக்ஷ்மன் நாராயண் B.A, ஆடிட்டர் War and Supply பூனாவிலிருந்து எழுதுகிறார்:— "தங்கள் பலன்கள் முற்றிலும் பலித்தன. தாங்கள் சாஸ்திர அனுபவம் மெச்சத்தக்கது." 1 முதல் 3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1 வருஷ பலன் ரூ. 5. சக்தி கவசம் ரூ. 7—8—0. வி. பி. பி. அணா 5.

ஜாதகம் or எழுதும் நேரம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம், P. O. (S. I)








## குஷ்டம், வெண் குஷ்டம்

**உள்ளுக்கும் வெளிப் பூச்சுக்கும் மருந்துகள்:—**

உத்தரவாதமான சிகிச்சை.
ஒருமாத மருந்து ரூ. 24-13.

**விகரின்** (தங்கம், கஸ்தூரி, மகரத்வஜம் சேர்ந்தது)

இளமையும், ஜீவ சக்தியும் அளித்து, ஞாபக மின்மை, ஹிருதய பலவீனம், நரம்புத் தளர்ச்சி இவற்றை குணமாக்கும். புதிய ரத்தம் ஊறி தேக திடம் அளிக்கும். விலை ரூ. 3. சக்தி வாய்ந்தது ரூ. 10. வி. பி. செலவு அணா 12.

**Kaviraj R. Chakravorty,**
Ayurveda Sastri (S. W.)
Bhowanipore, Calcutta. 25.





நிவாரணத்திற்கு உத்தரவாதம்

## ரூ. 1000 இனாம்

எங்களுடைய

# "லெப்பர் க்யூர்"

18-வித குஷ்டங்களையும், வெண் குஷ்டம், வெட்டை, வெள்ளை முதலிய வியாதிகளையும் குணப்படுத்தாது என்று நிரூபிப்பவர்களுக்கு:

தலைமை ஆபீஸ்:
**வால்டேர், ஆர். எஸ்.**

**லக்ஷ்மி & கோ.,**
2/135, பிராட்வே, மதராஸ்.

ஸ்திரீகளின் வியாதிகளுக்கு கேசரியை உபயோகியுங்கள்.



## யாரெல்லாம் ஆங்கிலம் கற்கலாம்

1. ஆங்கில எழுத்துகூடத் தெரியாத பெண்களுக்கும் ஆண்களுக்கும்
2. பாடசாலைகளில் சென்று பயிலமுடியாத குமரிகளுக்கும்
3. சிறிது கற்று நிறுத்தியவர்களுக்கும்
4. ஆங்கில படிப்பு இல்லாத குறையால் பிரமோஷன் கிடையாது வருந்தும் சர்க்கார் சேவகர்களுக்கும்
5. எஸ். எஸ். எல். ஸி. அல்லது மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தோல்வியுற்று, காலேஜில் பிரவேசனம் இன்றி வருந்துபவர்களுக்கும்
6. பிரமோஷன் வேண்டுமென்று எண்ணுகிற ஆசிரியர்களுக்கும்
7. தவிர, எவர்க்கும் தத்தம் இல்லத்தில் இருந்தே தங்கள் வேலைகளுக்கு யாதொரு இடையூறுமின்றிக் குறைந்த காலத்தில் ஆங்கிலம் கற்கலாம். இன்று ஆங்கில எழுத்துகூடத்தெரியாத ஒருவருக்கு ஒரே வருடத்தில் நான்காவது பாரத்தின் ஆங்கில அறிவு பெறலாம்.

தொடர்ந்து மூன்று வருடங்கள் கற்பதாயின், கேம்பிரட்ஜ் ஸீனியர் என்னும் ஒரு பெரிய பரீட்சையில் தேறலாம். கல்வி பூராவும் தபால் மூலம் நடத்தப்படும். ஆங்கிலம் பயில விரும்புவோர், தான் படித்த வகுப்பையும் குறிப்பிட்டு கீழ்க்காணும் விலாசத்திற்கு உடனே எழுதவும்.

**கேம்பிரட்ஜ் காலேஜ், கைதமுக்கு, திருவனந்தபுரம்.**

**N. B.** தங்களது குமாரர்களை விரைவில் கேம்பிரட்ஜ் ஸீனியர் பரீட்சையில் வெற்றியடையச்செய்து, இன்டர்மீடியட்டுக்குப் பிரவேசனம் செய்ய அரிய ஓர் வழியாகும்.



## பட்டுப் புடவைகள்.

கொள்ளேகால், பெங்களூர், பெங்கால், பெனாரஸ் சேலைகள் எல்லா ஊர் பட்டு, தினுசுகளும் இங்கு இதர கடைகளைக் காட்டிலும், ரூ. 10 முதல் ரூ. 25 வரை குறைவாக இருக்கும்.

**நேரில் விஜயம் செய்யுங்கள்.**

**ஸ்ரீ சாரதாள் கிளாத் ஷாப்**
37, தேரடித் தெரு,
**திருவல்லிக்கேணி, மதராஸ்.**
T. V. S. இராஜகோபால அய்யர், ஸோல் புரோப்ரைட்டர்.



டெலிபோன் 2246 தந்தி: கிளாவர் பீடி




லேட் கான்சாகிப் M. முஹமது உமர்சாகிபுவின் குமாரரான முஹமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும் உயர்தர மான சரக்குகளையும் உபயோகித்தே **ஸ்பேட் கிளாவர் பீடிகள்** தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும், குணமும் என் தகப்பனார் காலத்திலிருந்ததைப் போன்றே சிறப்பாக விளங்குகின்றது.

முகம்மது நூருல்லா
ஸோல் புரொப்ரைட்டர்
ஸ்பேட் கிளாவர் & ஆர்டின் பீடிகள்
37, மண்ணடி, மதராஸ்.



## ரூ. 100 இனாம்

ஆச்சரியகரமான சக்தி வாய்ந்த சித்த யந்திரம் (Govt. Regd.)

சக்தி வாய்ந்தது. "குப்த வசீகரண யந்திரத்தை" வைத்திருப்பதாலேயே கஷ்டமான காரியங்களிலும் வெற்றி பெற்றுவிடலாம். பலன் அளிக்கச் செய்வதில் எவ்வித கடின சாதனமும், தேவைகளும் அவசியமில்லை. இதனால் (ஆண், பெண்) நீர் விரும்பும் எவராகிலும் உனக்கு அடங்கி வருவர். அசுப நட்சத்திரங்கள், விரோதி பகை இவைகள் நீங்கி, பரீட்சை, வர்த்தகம், வழக்கு, லாட்டரி, ரேஸ், உத்தியோகம், சந்தானம், ஐசுவரியம், கடன் நிவாரணம், பயங்கர வியாதிகள் இவைகளில் வெற்றி பெறுவதோடு, அதிருஷ்டசாலியாகவும் இருப்பீர்கள். பொய் என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனாம். செம்பு ரூ. 2-8-0 வெள்ளி ரூ. 3-0-0. சுத்த தங்கம் ரூ. 13-0-0.

## நரையை ஒழியுங்கள்.

சாயம் மூலம் இல்லை எமது ஆயுர்வேத வாசனைத் தைலம், நரை மயிரை நிரந்தரமாகக் கருப்பாகச் செய்து, மீண்டும் நரை ஏற்படாமல் பாதுகாக்கும். மூளை பலவீனம், மந்தம் முதலியவற்றைப் போக்கி, தலைவலியைக் குணப்படுத்தும், பார்வையை சீர்படுத்தும். நம்பிக்கையில்லையேல் தொகை வாபீஸ் என்ற உத்தரவாதம் பெறுங்கள். சொற்ப நரைக்கு ரூ. 2-8-0. அதற்கு மேற்பட்டது ரூ. 3-8-0. எல்லா நரைக்கும் ரூ. 5.

Shree Kamrup Kamachhya Ashram.
No. 6. (P. O Katrisarai, Gaya)

"ஜெய் ஹிந்த்"

பாரத நாட்டு மக்களே !



இந்தியாவில் உற்பத்தியாகும் ஆடைகளை உபயோகிக்க இன்னும் ஏன் தயங்குகிறீர்கள்? இந்தியர்கள், நம் நாட்டுக் கைத்தறி ஆடைகளை வாங்கி, நம் மக்களை ஆதரிப்பதில் சிரத்தை காண்பியுங்கள்.

**இந்தியப் பெண்மணிகளே !**

கைத்தறி ஆடைகளில் சிறந்து விளங்கும் எங்கள்

# "போட்டோ மார்க்"

## சேலைகளை வாங்குங்கள்

தயாரிப்பவர்கள் :

## ஸ்ரீ சாரதா அண் கோ.,

**நடேசர் சன்னதி, பழனி.**

ஏஜண்டுகள் :

1. ஸ்ரீ முருகன் & கோ., மால் 2-வது தெரு, மதுரை.
2. பால முருகன் கம்பெனி, மால் 5, ஹனுமார் கோவில் தெரு, மதுரை.
3. R. M. H. S. மூர்த்தி கம்பெனி, லக்ஷிமிபுரம் குறுக்குத் தெரு, மதுரை.
4. ஸ்ரீ பால முருகன் & கோ., 166, தெற்கு மாசி வீதி, மதுரை.
5. M. S. T. சுப்பய்யர் & சன்ஸ், 115, சந்தை ரோடு, நாகல் நகர், திண்டுக்கல்.
6. கஸ்தூரிரங்கய்யர், நாகையர் & கோ., ஸௌராஷ்ட்ர தெரு, வத்தலகுண்டு.
7. N. S. குப்புசாமி, N. A. K. சுப்பய்யர், ஜவுளி வியாபாரம், தென் கரை, பெரிய குளம்.
8. ஸ்ரீ சுப்ரமணியம் கம்பெனி, சேலம் & N. A. Dt.
9. M. R. சுப்பையா செட்டியார், ஜவுளி வியாபாரம், முத்துசாமி பிள்ளை வீதி, பொள்ளாச்சி.
10. ராஜா & கோ., மதராஸ் & ஆந்திரா Dt.

**(N. B.) 40, 60, 80 நெ. ஜவுளி தினுசுகளுக்கும் பிரிண்டெட் வாயல் சேலை தினுசுகளுக்கும்**

## சரஸ்வதி வீவிங் கம்பெனி,

**நாகல் நகர், திண்டுக்கல்**

**32, லக்ஷிமிபுரம் 3-வது தெரு, மதுரை.**

